Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් செப். 21 - 27, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 680


## இணைத்தலைமை நாடுகள் - அரசு - புலிகள்



## மும்முனை யுத்தம்!



## அணி சேரா நாடுகளும் அணி சேரும் பிரச்சினைகளும்!



## ஆந்திராவில் ஆயுதக் கடத்தல்!

## யோன் இராணியின் அந்தரங்கம்!

பரத் பேட்டி

'ஜோ'வுக்கு தடா!








## போவோம்! ரசிப்போம்!!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# மேன்மைகொள் சைவநீதி!

# ஆன்மீகம்



மனிதனாக உருவெடுத்த உயிர்களெல்லாம் ஒவ்வொரு விதமான நெறிகளில் வேறுபட்டு நின்றாலும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நீதியின் கீழ் இறைவனை பிரார்த்திப்பதில் ஒன்று பட்டு நிற்கின்றன என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. ஆயினும்,

'சைவநீதி' என்று கூறப்படுவது, கொல்லாமை, அகிம்சை என்பன வேரூன்றி நிற்பதைக் கண்டுகொள்ளக் கூடிய அளவுக்குத் தெளிவாக இருக்கிறது. ஆதலின் சைவநெறி எந்தவொரு உயிருக்கும் தீங்கு விளைவிக்காத மனித சமுதாயத்தை உருவாக்கும் நோக்கைக் கொண்டது என்பதைக் கீழ்க்காணும் பாவரிகளால் உணர முடியும். 'கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க' அரசாளுபவர்களின் ஆட்சி முறையானதாக இருந்தாலே போதும், அந்த அரசுக்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்குக் குறைவிருக்காது என்பதனை உட்கருத்தாகக் கொண்டுள்ளமை தெளிவாகின்றது. கோன் என்பதற்கு இறைவன் என்ற பொருளும் உண்டு. அதனால் அரசன் நடுநிலை தவறாது இறைவனுக்கு ஒப்பானவனாக இருக்க வேண்டும் என்பது புலனாகிறதன்றோ!

**-என். எஸ். ராஜா, தம்பலகாமம்.**

## கர்த்தர் கைவிடமாட்டார்!

வானமும் பூமியும் அழிந்தாலும் கர்த்தரின் வார்த்தைகள் என்றும் அழிவதும் இல்லை; மாறுவதும் இல்லை. அது போல் தம் மீது விசுவாசம் கொண்டவர்களை அவர் கைவிடுவதுமில்லை. கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு அபயக்கரம் நீட்ட எப்போதும் காத்திருக்கிறார்.

அதனால் தான் "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் அபயமளிப்பேன். நீ ஆறுதல் பெறுவாய்" என்று கர்த்தரின் வார்த்தைகள் கூறுகின்றன.

தேவனின் பிள்ளையே! உனக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளைக் கண்டு துவளாதே! உளம் நொந்து போகாதே! தேவனிடம் மன்றாடு! உன் தூய உள்ளத்தில் இருந்து புறப்படும் வேதனைக் குரலை அவர் நிச்சயம் கேட்பார். எந்த இடத்தில் நீ இருந்தாலும், எத்தகைய வேதனையுடன் துடித்தாலும், உன் அழுகுரலை - உன் மன்றாட்டை - அவர் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார். வருந்தாதே; கர்த்தர் உன்னைத் தேடி வருவார். அவரது அபயக்கரம் உன்னை நோக்கி நீட்டப்படும். நீ விடுதலை பெறுவாய். தேவன் தன் பிள்ளைகளை என்றும் கைவிடுவதில்லை. தேவன் உன்னோடு இருக்கிறார்."

**-எம். ஏ. எஸ். சண்முகம், வத்தளை**

## மனிதனைப் படைப்பவன் அல்லாஹ்!

அல்லாஹ் தன் அருள் மறையாம் திருமறையில் கூறுகின்றான்,

"நான் ஒவ்வொரு பொருளையும் ஜோடி ஜோடியாகவே படைத்திருக்கிறேன். இதனைக் கொண்டு நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவீர்களாக' என்று.

ஸூரா அந்நூர் : 49.

ஆம், ஓர் ஆணும் ஓர் பெண்ணும் திருமணம் என்ற கட்டுக் கோப்பில் சட்ட ரீதியாக இணைவதன் மூலம் உண்டாவதே குழந்தை. இந்தக் குழந்தை எப்படி உருவாகிறது?


நிச்சயமாக உங்களில் ஒவ்வொருவரின் இந்திரியமும் தன் தாய் வயிற்றில் நாற்பது நாள் தங்கியிருக்கிறது. பின்னர் அது இரத்தமாக மாறி அது போன்று நாற்பது நாள் இருக்கிறது. பின் அது சதையாகி அது போன்று நாற்பது நாள் இருக்கிறது.

பின்பு அல்லாஹ் அதன் பக்கம் ஒரு மலக்கை நான்கு விடயங்களைக் கொண்டு அனுப்புகின்றான். அவைகள் கருவில் உருவாகப் போகும் குழந்தையின் உணவு பற்றியும், அதனுடைய வயது பற்றியும், அக் குழந்தையின் செயலைப் பற்றியும், அது நல்லவரா அல்லது தீயவரா என்பது பற்றியும் அந்த மலக்கு எழுதி விடுகிறார்.

இதன் பின்னர்தான் அதில் உயிர் ஊதப்படுகிறது. இப்போது குழந்தை தாயின் வயிற்றில் வளர்கிறது. உரிய காலத்தில் தாய் குழந்தையைப் பிரசவிக்கிறாள். இதில் மாற்றுக் கருத்திற்கு இடமே இல்லை. மனிதனைப் படைப்பவன் அல்லாஹ்.

**-எம். சீ. கலீல், கல்முனை - 05**

### கவிதைப் போட்டி இல.677




### பரிசுக்குரிய கவிதை

## பொல்லாத ஆசை

பொன்னாசை
மண்ணாசை
எல்லாம் போய்,
பொல்லாத
'ஆயுத' ஆசை
வந்ததால் தான்
ஐந்தும் அறுபதும்
அங்கும் இங்கும்
அல்லோலப்படுகிறது!

*-நா. ஜெயபாலன், பிபிலை.*

# கவிதைப் போட்டி இல.680



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.09.2006.

கவிதைப் போட்டி இல.680
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### விபரீதம்

பிஞ்சு மனங்களில்
நஞ்சைத் தூவும்
நையாண்டி...
குழந்தைத்தனமாய்
பாட்டி காட்டும்
பூச்சாண்டி...
இன்று - களிப்பில்
தனை மறந்து
புன்னகைக்கும்
பேராண்டி...
நாளை - கேட்பான்
'வாங்கித் தா பாட்டி
எனக்கும் ஒரு
துப்பாக்கி.'

*-ஏ.ஆர்.எம்.நதார், ஜின்னாநகர்.*

### விடுதலை

அன்று
முறத்தால்
புலியைத் துரத்திய
நீ - இன்று
புலியைப் போல்
'போட்டி செவன்' தூக்கி
குறிபார்ப்பது - எம்
விடுதலைக்கா...?
'விழும்' தலைக்கா!?

*-எம்.சண்முகராஜா, கொழும்பு - 11.*

### தூக்கிப்பிடி சமாதானக் கொடி!

வாளெடுத்தவன் சாவான்
வாளால்!
துப்பாக்கியேந்தியவனும்
சாவான்
துப்பாக்கியால்!
ஆகவே தூக்கியெறி
துப்பாக்கிகளை!
தூக்கிப்பிடி
சமாதானக் கொடிகளை.

*-அ.சந்தியாகோ, கண்டி.*

### ஏன் ?

சிறுவர் உரிமையும்
பறித் தாயிற்று!
முதியோர் உரிமையும்
பறிக்கவா
இந்த
ஆயுதப் பயிற்சி?
இது
தாயகம் காப்பதற்கா?
அன்றி
தாய்மார்களை
பலி கொடுக்கவா?

*-ஐ.ஆர்.பர்ஸான், புத்தளம்.*

### சுடும் பயிற்சி

பாட்டி உனக்கு
பலகைத்
துப்பாக்கியால்தான்
சுடத் தெரியும் - ஆனால்
நான் நிஜத் துப்பாக்கியால்
சுடப் பயிற்சி
எடுத்திருக்கிறேன்.

*-ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, கொடிகாவத்த.*

### பாசிசக் காகம்!

அன்று பாட்டி
வடை சுட்ட கதை போய்
இன்று, நீ
துப்பாக்கி சுட
கற்கிறாயோ?
அன்று காகம்
வடையைக் கவ்வியது!
இன்று பாசிஸம்
உன் உயிரைக்
கவ்வப் போவது உறுதி.

*-எஸ்.ஏ.கே.இஸ்மத் ரவூப், புத்தளம்.*



# உங்கள் பக்கம்

## தட்டிக்கழிக்கும் காப்புறுதி நிறுவனங்கள்

காப்புறுதித் துறையில் தாமே முன்னோடிகள் என்று கூறிக் கொண்டு, கவர்ச்சிகரமான பல விளம்பரங்களைச் செய்வதன் மூலம் பல வாடிக்கையாளர்களுக்குப் பல விதமான காப்புறுதிகளை இலங்கையிலுள்ள பல காப்புறுதி நிறுவனங்கள் செய்துள்ளன.

ஆனால் உரியவர்கள் தமது கொடுப்பனவிற்கு விண்ணப்பிக்கும் போது கொடுப்பனவுகளைப் பெறுவது மிகவும் சிரமமாக உள்ளது. பல கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனத்தால் வருடக் கணக்கில் இழுத்தடிக்கப்பட்டு, நியாயமான காரணம் எதுவுமின்றி தட்டிக் கழித்து உரியவருற்குச் சேர்க்கப்படாமலேயே கூட்டுத்தாபனத்தில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலை, ஆயுள் காப்பீட்டு கொடுப்பனவிலேயே அதிகமாகக் காணப்படுகிறது.

வாடிக்கையாளர்களிடமிருந்து மாதாந்தம் கோடிக்கணக்கில் நிறுவனங்கள் வருமானம் பெறுகிறது. ஆனால் கொடுப்பனவிற்குச் விண்ணப்பிக்கும் போது பல நொண்டிச்சாட்டுகள் சொல்லி கொடுப்பனவை தட்டிக்கழித்து விடுகிறது. ஆனாலும் சாட்டிற்காக ஒரு சில கொடுப்பனவுகளை செய்து சமாளிக்கின்றது. இது வாடிக்கையாளர்களுக்குச் செய்யும் பெரும் அநீதியாகும்.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும் விற்பனை ஆலோசகர்களும் இது சம்பந்தமாகக் கவனம் எடுத்து பாதிக்கப்பட்டவரின் துயர் நீக்கும்படி கேட்கிறேன்.

***-வி. ஆனந்தராஜா, வவுனியா.***

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### அறிவுப் பசி தீர்த்திடும்

அன்பான முரசு.....!
ஆன்மீகம் முதல்
அரசியல் தகவல்.....
அதிரடி அய்யாத்துரை வரை
அனைத்துமே
அற்புதம்....!
பாப்பா முரசு முதல்
தகவல் பெட்டி ஈறாக
அறிவின்பால் ஈர்த்தெடுத்து
ஆனந்தப்படுத்துகின்றது. அற்புதனின்
வழிகாட்டலில்
அவதரித்த முரசே
அள்ளிவரும்
அனைத்தும்
அற்புதந்தான்....!

*ஆனந்தத்தில் ஒரு அனல், துறைநீலாவணை - 06.*

## தினமும் முழங்கு முரசே!

ஓ! மானிடர்க்கு
மகிழ்வூட்ட
வந்த முரசே!
உந்தன் வார்த்தைகள்
ஒவ்வொன்றும்
ஒரு அமோக சுவை

கவி கொண்டு
காதலர்களை
களைப்பாறச்
செய்யும் முரசே!
களைப்பில்லாமல்
உன் மேல் ரசனை
கொள்கின்றது
எந்தன் உள்ளம்

அரசியல் பீடத்தை
அலசி ஆராய்ந்து
அறிவுக்கு ஏற்படி
அறிவுரை வழங்கும்
முத்தமிழ் முரசே!

ஆன்மீகம்
கொண்டு
ஆத்மாவைத்
திருப்திப்படுத்தும்
இனிய முரசே!

கவிதைப் போட்டியில்
புதிய கவிஞன்
வெளிவர
பரிசுப் பொருளை
வாரி வழங்கும்
அமுத முரசே!

எக்ஸ்ரே ரிபோர்ட்டில்
ஒளிந்திருக்கும்
செய்தியை
அறிமுகமாக்கும்
சிந்தை கவர்ந்த
முரசே!

அதிரடி அய்யாத்துரை
ஒரு பேச்சு மொழியால்
வார்த்தை கொண்டு
வர்ணிக்கும்
இனிய முரசே!

வர்ணப் படமும்
வண்ண வடிவமும்
சினிமாச் செய்தியும்
அடங்கிய சிங்கார முரசே!

பெண்கள் உள்ளத்தில்
லேடீஸ் ஸ்பெஷல்
மூலம்
பல அணுகு முறைகளை
வாரி வழங்கும்
தேன் சுவையான முரசே!

சின்ன இதயங்களுக்கு
பாப்பா முரசு பகுதியில்
அறிவு விஞ்ஞான
விளக்கங்களும்
சிந்தனையில் படும்
தத்துவக்கதைகளை
வாரி வழங்கும்
அன்பு முரசே!

உண்மைச் சம்பவம்
போல்
எடுத்துக்காட்டும்
சிறுகதைப் பகுதியில்
சிறந்து வழங்கும்
முரசே!
தினமும் முழங்கு முரசே!

# புலிகளின் பயங்கரவாதமும் தமிழர்களின் அபிலாஷையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களல்ல.

## -நியூயோர்க்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளையும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்று கடந்த கால இலங்கை அரசாங்கங்கள் பார்த்ததாலேயே புலிகள் இயக்கத்தை அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் தோற்கடித்து, அவர்களை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தனிமைப்படுத்த முடியாமல் போனதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியூயோர்க்கில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஐ.நா.வின் 61ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தூது கோஷ்டியோடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியூயோர்க்கிற்கு வருகை தந்திருந்தார். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய அவர் மேலும் கூறுகையில் :-

முன்னைய இலங்கை அரசாங்கங்கள் எதுவுமே புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளையும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளையும் பிரித்துப் பார்க்கத் தவறி விட்டன. ஆனால் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகம் தேசிய ரீதியிலும் சர்வதேச மட்டத்தில் ராஜதந்திர வழிமுறைகளுடாகவும் தற்போது இப்பிரச்சினையைக் கையாள முனைகிறது. தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை ஈடு செய்து தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றினைக் காண்பதே எனது முற்று முழுதான முயற்சியாகும்.



ஹவானா அணிசேரா மாநாட்டுக் கூட்டத்தின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து கைலாகு கொடுக்கும் காட்சி.

இராணுவரீதியில் புலிகளைத் தோற்கடிப்பதும், இலங்கை வாழ் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு நீடித்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதும் என்ற இந்த இரு பிரச்சினைகளுக்கு இன்றைய அரசாங்கம் முன்னுரிமை அளிக்கிறது. இன்றைய இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றினையே காண வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு அரசியல் தலைமையொன்றினை அளிப்பதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு மேலும் சீர்திருத்தங்களைச் செய்வதன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாண சபையைப் பலப்படுத்த முடியும். தேசிய மட்டத்திலான சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தாமலேயே அரசியலமைப்பின் 154 (9.2) பிரிவின்படி திருத்தங்களை மேற்கொண்டு மாகாண சபைக்குக் கூடிய அதிகாரங்களை வலுப்படுத்த முடியும். வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு அரசியல் தலைமையொன்றை அளிப்பதன் மூலம் புலிகள் இயக்கத்தின் தலையீட்டைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அரசியல் நடவடிக்கையையும் இராணுவ நடவடிக்கையையும் வெவ்வேறாகக் கையாள வேண்டும்.அரசியல் தீர்வொன்றினைக் காண்பதன் மூலமே தமிழ் மக்களை புலிகளிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த மேலும் தெரிவித்தார்.

# கனடாவில் கேதீஸ்வரன் நினைவஞ்சலிக் கூட்டம்

"புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் மட்டும் தோற்கடித்துவிட முடியாது. புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முனையும் அதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நீதியான, நியாயபூர்வமான அரசியல் தீர்வை முன்வைப்பதன் மூலமே இலங்கை அரசாங்கத்தினால் வெற்றி காண முடியும்" என்று கனடா ரொறன்ரோவிலுள்ள ஸ்காபரோவில் கடந்த பத்தாம் திகதி நடைபெற்ற கேதீஸ்வரன் லோகநாதனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. அரசியல் தீர்வொன்றினை முன்வைப்பதன் மூலமே புலிகள் மீது தமிழ் மக்கள் அழுத்தத்தைச் செலுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகக்குறைந்தது, புலிகளின் யுத்த முனைப்புகளுக்கெதிராகத் தமிழ் மக்கள் எழுந்து நிற்க அது உதவும். எனவே அரசாங்கம் அரசியல் தீர்வொன்றினை முன்வைக்க வேண்டியது மிக முக்கியமானது என்றும் வலியுறுத்தப்பட்டது. ஸ்காபரோ சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ், சிங்கள அமைப்புகளின் பிரதிநிதிகளும் உரையாற்றினர். பெருந்தொகையினர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## நிபந்தனையற்றப் பேச்சுக்கு நிபந்தனை!

சம்பூரில் தோல்வியைச் சந்தித்த பின்னர் புலிகள் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்குத் தயாரென்று அறிவித்துள்ள போதிலும் இனிமேலும் வன்செயல், மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்ற நிபந்தனையைப் புலிகள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வருமென்று ஆளுந்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் ஏற்கனவே பல தடவைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களைச் செய்து விட்டு அவற்றை மீறியதே அவர்களின் வரலாறு. எனவே அவர்களை நம்ப முடியாது. அத்துடன் வன்செயல்களில் இனிமேல் ஈடுபடுவதில்லையென்று பிரபாகரன் சர்வதேச சமூகத்திற்குக் குறிப்பாக இணைத் தலைமை நாடுகளுக்கு உறுதி அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் நிபந்தனை விதிக்குமென்றும் தெரிய வருகிறது.

## நுவரெலியாவில் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்தத் திட்டம்

அடுத்த மாதம் இரண்டாம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் உலக மக்கள் குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நுவரெலியாவில் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று நுவரெலியா, ஹவா எலியவில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான முன்னோடிக் கூட்டமொன்று எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# பொத்துவில் படுகொலைகள் சமாதான விரோதிகளின் கொரூரம்!

## -ஆளுநர் அலவி சீற்றம்



பொத்துவிலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்களின் சடலங்கள்

பொத்துவில் ரதல்லவேவா என்ற இடத்தில் பத்து அப்பாவி முஸ்லிம்கள் குத்தியும் வெட்டியும், கொத்தியும் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பல்வேறு தரப்புகளிலிருந்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சொல்லப்படுகின்ற போதிலும் உண்மை நிலையைக் கண்டறிவதற்காகப் பக்கச் சார்பற்ற நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு வேறு பல அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் ஸ்தலத்திற்கு நேரடியாகச் சென்று கொழும்பு திரும்பிய அலவி மௌலானா இவ்வாறு தெரிவித்தார். அதிரடிப்படையினர் தான் முஸ்லிம்களைக் கொன்றார்கள் என்று புலிகள் சொல்கிறார்கள். வெலிக்கந்தயில் இவ் வாறு பாதைத் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த 12 சிங்கள இளைஞர்களை இரு மாதங்களுக்கு முன்னர் வெட்டியும் கொத்தியும் கொன்ற புலிகளே இதனைச் செய்திருக்கிறார்களென்று அரசு சார்பில் குற்றம் சாட்டப்படுகிறது.

அங்குள்ள அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரிக்கும் பிரதேச மக்களுக்குமிடையில் பிரச்சினைகள் நிலவியதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனரென்று கூறியிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். என்னைப் பொறுத்த வரையில் ஒன்றை மட்டும் என்னால் தெளிவாகச் சொல்ல முடியும். கொல்லப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள். யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்போடும் சம்பந்தப் படாதவர்கள். இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட்டு இனசௌஜன்யம் நிலவுவதை விரும்பாத தீய சக்திகளே இம்மிலேச்சத்தனமான படுகொலைகளைச் செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும் என்று ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார்.

இதே போன்று மூதூரில் தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சர்வதேச அனுசரணையோடு நீதி விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். அதே போன்று இலங்கையில் நடைபெறும் சகலவித மனித உரிமை மீறல்களையும் தடுப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு தயாராகவிருப்பதாக ஐ.நா.செயலாளர் நாயகம் ஜனாதிபதியிடம் உறுதியளித்திருக்கிறார். கெப்பிட்டிகொல்லாவ படுகொலைகள், மூதூர் நிவாரண ஊழியர்கள் படுகொலை, வெலிக்கந்த மற்றும் பொத்துவில் படுகொலைகள் போன்ற மிலேச்சத்தனமான செயல்கள் இனியும் தொடராமல் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகுமென்றும் அவர் சொன்னார்.

# புலிகள் ஆறாவது ஆயுதக் கப்பலையும் இழந்தனர்

கடந்த நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட யுத்த நிறுத்த காலத்தில் புலிகள் இயக்கத்தின் மூன்று ஆயுதக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வரலாமென்ற சந்தேகத்தில் தாம் உஷாராக இருந்ததாலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனைக் கடலுக்கு நூறு கடல் மைல்கள் அப்பால் ஆயுதங்கள் கடத்தி வந்த புலிகளின் கப்பலைத் தம்மால் தாக்கியழிக்க முடிந்ததென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தோனேசிய நீர்ப் பரப்பிலிருந்து ஆயுதங்களை ஏற்றிவருவதாகத் தமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்து புலிகளின் கப்பலைத் தாக்கக் கூடியதாக இருந்ததென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் இயக்கம் இதுவரை மொத்தம் ஆறு ஆயுதக் கப்பல்களை இழந்துள்ளன. 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி நாயாறு கடலுக்கு அப்பால் 'ஹொரிசன்' என்ற கப்பலை புலிகள் இயக்கம் இழந்தது. முல்லைத்தீவுக் கடலுக்கு அப்பால் 'பிறற் செஸ்கொம்' என்ற கப்பல் 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி தாக்கியழிக்கப்பட்டது. அந்தமான் தீவுகளுக்கு அப்பால் புலிகளின் 'மாரியம்மன்' என்ற ஆயுதக் கப்பல் 1998ஆம் ஆண்டு மார்ச் பதினொராம் திகதி தாக்கியழிக்கப்பட்டது. புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இரு ஆயுதக் கப்பல்களைப் புலிகள் இயக்கம் இழந்தது. முல்லைத்தீவுக் கடலுக்கு அப்பால் 2003ஆம் ஆண்டு மார்ச் பத்தாம் திகதி 'கொய்மெர்' கப்பலையும் 2003ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் திகதி 'சோஷின்' என்ற கப்பலையும் புலிகள் இயக்கம் இழந்தது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் இயக்கத்தின் வர்த்தக மற்றும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் கப்பல்களை மடக்கி, அவர்களின் நடவடிக்கைகளை முடக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில்தீர்மானமெடுத்த பின்னணியிலேயே, புலிகளின் ஆயுதக் கப்பல் கடந்த 17ஆம் திகதி மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. 2003ஆம் ஆண்டு புலிகளின் கப்பல்கள் இரண்டும் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட போது, அப்போதைய பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன அந்த நடவடிக்கையை ஆதரித்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## பொது இணக்கப்பாட்டு யோசனைகள் விரைவில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்குமிடையில் இனப்பிரச்சினை தொடர்பாக பொது இணக்கப்பாட்டை எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்குமென்றும் அநேகமாக நவம்பர் மாத மத்திய பகுதிக்கு முன்னர் அரசியல் தீர்வு தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்படுமென்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு யோசனையே முன்வைக்கப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்ட பின்னர் அவை புலிகள் இயக்கத்துக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு அரச தரப்பிலிருந்து புலிகளுக்கு விடுக்கப்படலாமென்றும் எதிர்வு கூறப்படுகிறது.

# இந்தியத் தலைவர்களைச் சந்திக்கச் சென்ற பத்மினி, சிவாஜிலிங்கம் நாடு திரும்பினர்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியையும் சந்தித்து இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவதற்காக இந்தியா சென்றிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஐவரில் இருவர் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் தமிழகம் சென்ற இந்த ஐவர் குழுவைச் சேர்ந்த பத்மினி சிதம்பரநாதனும், சிவாஜிலிங்கமுமே நாடு திரும்பியவர்களாவர். ஆர்.சம்பந்தன் எம்.பி. தலைமையில் கஜேந்திரன் குமார்பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தமிழகம் சென்றிருந்தனர். கலைஞர் கருணாநிதியை சந்தித்துப் பேச இவர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றதையடுத்து வைகோவையும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான வரதராஜனையும் மட்டுமே சந்தித்துப் பேசினர்.

புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண முன்வர வேண்டுமென்று வரதராஜன் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் வலியுறுத்தியிருந்தார். இதற்கிடையில் சுரேஷ் பிரேமச்சந்திரனும், செல்வம் அடைக்கலநாதனும் தமது குழுவினரோடு கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றுள்ளனர்.

பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திப்பதற்கான முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனரென்று புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வடக்கு – கிழக்கு இணைப்புக்கு இந்தியா ஆதரவு

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1987ஆம் ஆண்டு தற்காலிகமாக இணைக்கப்பட்ட இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிக்காமல் அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதே சரியான வழியென இந்தியா கருதுவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார். அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட இரு நாட்டுத் தலைவர்கள் சந்தித்துப் பேசியபோதே இக் கருத்து வெளியிடப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறின. இலங்கையில் வாழும் சகல இன மக்களின் அபிலாஷைகளுக்குத் தீர்வு காணப்படுவதையே இந்தியா விரும்புவதாகவும், இதற்கு முன்னோடியாகத் தென்னிலங்கையில் பொது இணக்கப்பாடொன்றினைக் காண இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் முயற்சியைப் பாராட்டுவதாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார். இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும், இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பொது இணக்கப்பாடொன்றினைக் காணும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது நல்ல சகுனமென்றும் சிங் தெரிவித்தார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## மனித உரிமைகள் குறித்து கூடிய கவனம் தேவை

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**ஜனாதிபதி** மஹிந்த ராஜபக்ஷ கியூபாவில் நடைபெற்ற பதினாலாவது அணி சேரா நாடுகளின் கூட்டத்தில் பங்கு கொண்டு ஆற்றிய உரை, பல நாட்டுத் தலைவர்களாலும் வரவேற்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது உரையில் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் பெரும் தடையாக இருப்பது பயங்கரவாதம் என்றும், பயங்கரவாதமானது போதைவஸ்துக் கடத்தல், சிறுவர்களை ஆயுத மோதலில் ஈடுபடுத்தல், சிவில் யுத்தங்கள், பொருளாதார இலக்குகளை இலக்காகக் கொண்ட தாக்குதல்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் மீதான படுகொலைகள் என்று பல முகங்களைக் கொண்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அத்தனை பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும் இலங்கை கடந்த இரண்டு தசாப்தத்துக்கு மேலாக முகம் கொடுத்து வரும் நாடு என்பதால் அந்த அனுபவங்களிலிருந்து இந்த உரையை ஆற்றுவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த கால ஆட்சியாளர்களும், தாமும் பயங்கரவாதத்துடன் சமரசப் பேச்சுக்களை முன்னெடுத்தபோதும் அவை வெற்றியளிக்கவில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அபிவிருத்தித் திட்டங்கள், நகரங்களை விட்டு கிராமங்களுக்குள்ளும் பரவ வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். சமரச முயற்சியில் தோல்விகள், நம்பிக்கையீனங்களுக்கு முகம் கொடுத்துவரும் தாம் பேச்சுக்களுக்கூடாக பிணக்குகளைத் தீர்க்க விரும்புவதோடு அதற்கான முன் முயற்சிகளையும் எடுத்துவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உரைக்கு பயங்கரவாதம் கொடுத்த பதில், இன்னொரு ஆயுதக் கப்பலின் வருகையும், அதை விமானப்படையினர் தாக்கி அழித்ததுமாகும்.

இலங்கையின் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட சர்வதேச சமூகம் பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளைக் கூட்டாக முன்னெடுப்பது என்று தமது பிரகடனத்தையும் வரித்துக் கொண்டுள்ளது. இதேவேளை, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பேச்சுவார்த்தைகளூடாகவே இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என மீண்டும் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் முழு ஒத்துழைப்பையும் தருவதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் குறைபாடுகள் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொபி அனான் இப்படிக் கூறுவதற்குப் பிரதான காரணங்களாக அமைந்தவை வடக்கு - கிழக்கில் தொடரும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், 17 தொண்டுப் பணியாளர்களின் கொலை, சிறுவர்கள், பெண்களின் பிரச்சினைகள் என்பனவாகும். இப்போது இந்தப் பட்டியலில் பொத்துவிலில் 10 அப்பாவி முஸ்லிம் தொழிலாளர்கள் கழுத்து வெட்டிக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் சேர்ந்துள்ளது.

இதற்கிடையே அடுத்த வாரம் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வர இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற வன்முறைகள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்றால் மோதல் ஓய்வுக்குக் கொண்டு வரப்பட்டு, மீண்டும் சமரசப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். எரிக் சொல்ஹெய்மின் வருகை மேற்படி எதிர்பார்ப்புக்கு எத்தகைய பங்களிப்பைச் செய்யப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஏற்கனவே இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தின் முடிவில் இருதரப்பும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் எனவும் ஒக்டோபர் மாத முற்பகுதியில் பேச்சு நடைபெறுமெனவும் எரிக் சொல்ஹெய்ம் கூறியிருந்தாலும் அரசும் - புலிகளும் சொல்ஹெய்மின் கூற்றை முற்றாக நிராகரித்து விட்டன. இந்த நிலையில் சொல்ஹெய்மின் விஜயம் பலனளிக்குமா என்பது சந்தேகம்தான்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்குமவரை

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இணைத்தலைமை நாடுகள் - அரசு - புலிகள்
# மும்முனை யுத்தம்!

**அ**ரசுக்கும் புலிகளுக்குமிடையில் அதிகரித்துவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் வழிவகைகள் பற்றி ஆராய்வதற்காக, இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமை நாடுகள் கடந்த 12ஆம் திகதி பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸில் கூடின. இக் கூட்டம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கத்துக்கும் நோர்வேக்குமிடையில் ஒரு சொற்போரையே ஆரம்பிக்க உதவியிருக்கிறது. அரசும் - புலிகளும் யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை மேசைக்கு வர இணங்கியுள்ளதாகவும், அக்டோபர் முதல் வாரத்தில் பேச்சுவார்த்தை நடைபெறுமென்றும் கூட்ட முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையே அரசுக்கும் - நோர்வேக்குமிடையில் சொற்போரை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்து விட்டது.

இலங்கையின் அனுமதியோ இணக்கமோ இன்றி யுத்த நிறுத்தத்துக்கு அரசு தயாரென்று இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்துக்குத் தலைமை வகித்த நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கூறியிருப்பதே, பாதுகாப்புப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலயின் வயிற்றில் புளியைக் கரைத்து வார்த்து விட்டிருக்கிறது. இலங்கையின் இறைமையை நோர்வே மதிக்க வேண்டுமென்றும் இலங்கை அரசின் அனுமதியின்றிப் பேச்சுவார்த்தை பற்றியோ யுத்த நிறுத்தம் பற்றியோ நோர்வே தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாதென்றும் அரச தரப்புப் பேச்சாளர் அறிவித்திருப்பது சரியானதுதான்.



இணைத்தலைமை மாநாட்டில் எரிக் சொல்ஹெய்ம்

யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் புலிகள். நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்துக்கான அறிவிப்பை நோர்வேக்கு விடுத்தவர்களும் புலிகள்தான். இலட்சக் கணக்கான அப்பாவித் தமிழ், முஸ்லிம் மக்களைப் பெருமளவில் பாதித்திருக்கும் இந்த யுத்தம், உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்பது நியாயமான கோரிக்கைதான். அதில் இரண்டு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது என்பதும் உண்மையே. யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருக்கிறது, என்று யுத்தம் நடத்திக் கொண்டே அரசும், புலிகளும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் அறிவித்தமை வேடிக்கையான விடயம்தான். அதாவது யுத்த நிறுத்த ஒப்பந்தமும் அமுலிலிருக்கிறது. யுத்தமும் அமுலிலிருக்கிறது. யுத்தத்தைப் புலிகள் ஆரம்பித்திருக்காவிட்டால், அரசாங்கப் படைகள் பதிலடி கொடுத்திருக்க மாட்டா. புலிகள் சம்பூரைப் படையினரிடம் பறிகொடுக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்க மாட்டாது. எதிர்பாராதவிதமாகப் புலிகள் சம்பூரைப் படையினரிடம் பறிகொடுத்தது மட்டுமல்ல, முகமாலையூடாக ஆனையிறவை நோக்கி முன்னேறி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை அரசாங்கத் துருப்புகள் கைப்பற்ற முனைந்தபோதுதான், புலிகளுக்குத் திடீரென நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் பற்றிய ஞானோதயம் வந்தது. அதாவது, புலித் தரப்பு பலத்த இழப்புகளைச் சந்தித்த பின்னர், யுத்தத்தை நிறுத்துவோமென்று கோரிக்கை விடுத்திருக்கிறது. இதுதான் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தக் கோரிக்கையின் சூட்சுமம்.

2001ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப் படுத்தினார்கள். நிபந்தனையற்ற விதத்தில் 'பேச்சுவார்த்தை மேசைக்கும் வந்தார்கள். பின்னர் ஒன்றன்பின் ஒன்றாகப் பல்வேறு கோரிக்கைகளை அல்லது நிபந்தனைகளை முன்வைத்துவிட்டு, சமாதான மேசையிலிருந்து ஓடிப் போனார்கள். ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், அவர்கள் ஓடிப் போவதற்கு முன்னர் முன்வைத்த கோரிக்கை இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்பதாகும். வடக்கு - கிழக்குக்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் புலிகளுக்கு ஏகபோகச் சொத்தாக மொத்தக் குத்தகைக்கு வழங்கும் அதிகாரம், அரசாங்கத்துக்குக் கூட இல்லை. முஸ்லிம்கள் மற்றும் தமிழ் ஜனநாயகக் கட்சிகளின் ஒப்புதலும் பங்குபற்றுதலும் அதற்கு இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக முதலில் சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தினால் அது அங்கீகரிக்கப்பட வேண்டும். அதற்காக அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். இந்த அரசியல் வழிமுறையைப் புரிந்து கொள்ள முடியாத புலிகள், ஆயுதமுனையில் சித்து விளையாட்டுகள் காட்ட முனைவதால்தான் அப்பாவி மக்கள் பலியெடுக்கப்படுகிறார்கள். இதனைத்தான் புலிகள், இலங்கையில் இந்தியப் படை நிலை கொண்டிருந்த 1987ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் செய்தார்கள். இந்தியப் படையினர் மீது தாக்குதல்களைத் தொடுத்தார்கள். காட்டுக்குள் பதுங்கியிருந்து கொண்டு வேட்டுகள் மூலம் தமிழீழம் காண முனைவது, யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாத பிரபாகரனின் பாமரத்தனத்தையே காட்டுகிறது.

இறுதி யுத்தமென்று சொல்லி, ஐரோப்பிய நாடுகளில் டொலர் கணக்கிலும் பவுண் கணக்கிலும் கோடி கோடியாகச் சேர்த்தார்கள். இறுதி யுத்தத்துக்காகக் கனடாவிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் கிபீர் விமானங்களைத் தாக்கும் சாம் - 18 ஏவுகணைகள் வாங்க அமெரிக்கா சென்ற புலிக் குட்டிகள் மாட்டிக் கொண்டார்கள். இலங்கையிலும் வரி, கப்பம் என்ற போர்வைகளில் நிதி திரட்டினார்கள். யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னர், யுத்தத்தில் வெற்றிபெற முடியுமா வென்ற தூரநோக்குப் புலிகளுக்கு இருந்திருக்க வேண்டும்.

கருணா தரப்பு அரசுக்குக் கைகொடுக்குமென்பதையும் புலிகள் தமக்கிருக்கக் கூடிய 'மைனஸ் பொயின்ற்' றாக உணர்ந்திருக்க வேண்டும். சம்பூரைக் கைப்பற்றிப் புலிகளின் முதுகெலும்பை ஒடித்து, வெற்றிப் படியில் ஏறி நிற்கும் அரசு, புலிகள் தோல்வியில் துவண்டு விட்ட பின்னர், புலிகளின் அபயக் குரலுக்குச் செவிசாய்க்குமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஒருவேளை யுத்தம் நிறுத்தப்படுமென்ற அதீத நம்பிக்கையாலோ அல்லது அரசு சமாதான மேசைக்கு உடனடியாக ஓடிவந்து விடுமென்ற நப்பாசையாலோ எரிக் சொல்ஹெய்ம் ஒரு தலைப்பட்சமாகப் பேசியிருக்கலாம். ஆனால், அது சுவரில் எறிந்த பந்து போலச் சொல்ஹெய்மின் முகத்தில் தாக்கியிருக்கிறது.

நிபந்தனையற்ற விதத்திலான பேச்சுக்கு தோல்வியுற்ற நிலையில் புலிகள் அழைப்பு விடுத்திருப்பது, தாக்குப் பிடிக்க முடியாமல் மண்டியிடுவதற்குச் சமனாகும். நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு வந்தால், அந்த யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி தம்மை ஆயுத ரீதியாகவும் ஆளணி ரீதியாகவும் சுதாகரித்துக் கொண்டு, மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கலாமென்பதே புலிகளின் திட்டம். பேச்சுக்கு நாம் தயார். ஆனால் ஒரு வேட்டுச் சத்தம் கூடப் புலிகள் தரப்பிலிருந்து கேட்கக் கூடாது என்று பாதுகாப்புப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அளித்திருக்கும் பதில் அபாரம். புலிகள் மீண்டும் யுத்தத்தை தொடுப்பார்களேயானால், மிகச் சிறந்த ஆயுத வசதிகளையும் திடசித்தமும் கொண்ட இலங்கைப் படையினருக்கு முகங் கொடுக்க வேண்டியேற்படும் என்று முன்னர் இலங்கையில் பணியாற்றிய அமெரிக்க உயர் ஸ்தானிகர் ஜெப்ரி லங்ஸ்ரட் விடுத்த எச்சரிக்கையை, இனியாவது புலிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுவதற்காக எரிக் சொல்ஹெய்ம் சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பாடு செய்த ஒஸ்லோ கூட்டத்துக்குச் சென்ற தமிழ்ச்செல்வன், அங்கு இலங்கையின் சமாதான செயலகத் தலைவர் கலாநிதி பாலித கொஹனயின் தலைமையில் சென்ற இலங்கைத் தூதுகோஷ்டியைச் சந்திக்க மறுத்தது ஏன்? யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுவது தொடர்பான திட்டம், நிகழ்ச்சி நிரலில் இல்லையென்றும், அமைச்சர்கள் இடம்பெறாத இலங்கைத் தூதுகோஷ்டியுடன் பேசப் போவதில்லையென்றும் தமிழ்ச்செல்வன் தட்டிக் கழித்தது ஏன்? இன்று நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்துக்கு வரும் புலிகள், அன்று நிபந்தனையுடனாவது பேசியிருக்கலாமே? 'சோழியன் குடுமி, சும்மா ஆடாது' என்பது சொல்ஹெய்முக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் ரம்புக்வெலவுக்குப் புரியும். தமிழ்ச்செல்வனின் தாளத்துக்கு ஆடுவதைச் சொல்ஹெய்ம் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது முற்று முழுதான தடையை விடுத்த பின்னர்தான், யுத்த நிறுத்தம் பற்றிப் பேசும் சாக்கில் புலிக் கோஷ்டியை ஒஸ்லோவுக்கு அழைத்தார். அவர்கள் பேச மறுத்துவிட்டு சுவிற்சர்லாந்துக்குப் போய் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வழி சமைத்துக் கொடுத்தவரும் சொல்ஹெய்ம் தான்.


சிங்கள தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளைப் போன்றோ அல்லது சிங்கள பௌத்த கோட்பாடு என்று கூப்பாடு போடும் கட்சியைப் போன்றோ யுத்தத்தைத் தொடர்ந்து நடத்து என்று நாம் வலியுறுத்த முடியாது. அல்லது நோர்வேயை ஒட்டு மொத்தமாக வெளியேறு என்றும் கோர முடியாது.

யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப் படுபவர்கள் அப்பாவி மக்கள் என்பதால், அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் என்பதால் யுத்தம் நிறுத்தப்பட்டுத்தானாக வேண்டும். வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்காகவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். பன்னிரண்டு பந்திகளில் வெளியிடப்பட்ட இணைத்தலைமை நாடுகளின் கூட்டறிக்கை, இந்த விடயத்தைத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறது. பயங்கரவாதத்தையும் வன்செயல்களையும் புலிகள் கண்டித்துக் கைவிட்டு அரசியல் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டுமென்று மிகச் சரியாகவே கூட்டறிக்கை வலியுறுத்தியிருக்கிறது. அரசியல் பேச்சுவார்த்தை என்பது, அர்ப்பண சிரத்தையோடும் நெகிழ்ச்சித் தன்மையோடும் விட்டுக் கொடுப்போடும் நடத்தப்பட வேண்டும். இதற்குப் புலிகள் முன்வருவார்களா என்பதே முக்கிய கேள்வி? இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பொது இணக்கப்பாடொன்றினைக் காண அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளைக் கூட்டறிக்கை வரவேற்றிருக்கிறது.

பிரபாகரன் எதற்காகப் போராடுகிறார் என்பதை முதலில் அவரிடமிருந்தே எரிக் சொல்ஹெய்மும், யசூசி அகாசியும் தெரிந்துகொள்ள வேண்டும். தஞ்சாவூர்ப் பொம்மை போலத் தலையாட்டிக் கொண்டிருக்கும் தமிழ்ச்செல்வனிடமிருந்து அல்ல. ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களின் அபிலாஷைகளையும் தேவைகளையும் ஈடு செய்யக் கூடிய தீர்வே தேவையென்றும் கூட்டறிக்கை வலியுறுத்தியுள்ளது. அப்படியானால், சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வேண்டும். தீர்வைக் காண்பதற்கான காலக்கெடுவொன்று முன்வைக்கப்பட வேண்டும். யுத்த நிறுத்த மீறல்களும் மனித உரிமை மீறல்களும் அளவுக்கதிகமாக இடம் பெறுவதாகக் கூட்டறிக்கை மிகச் சரியாகவே சுட்டிக் காட்டியிருக்கிறது. வடக்கு - கிழக்கில் அப்பாவிகள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஆட்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போகிறார்கள். கொழும்பில் இருபதுக்கு மேற்பட்ட தமிழ் வர்த்தகர்களும் நிதித்துறையோடு சம்பந்தப்பட்டவர்களும் கடத்தப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுமாறு அரசைக் கோருவது நியாயமானதே. யுத்தத்தின் பக்க விளைவுகள்தான் இந்த மனித உரிமை மீறல்கள். எனவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். தங்களைத் தயார் செய்து கொள்வதற்கான காலக்கெடுவைத் தேடுவதற்காகப் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கோரினால், அதனைத் தடுத்துப் புலிகளை வழிக்குக் கொண்டு வருவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய பொறுப்பு இணைத்தலைமை நாடுகள் உள்ளிட்ட சர்வதேச சமூகத்தையும் சாரும் என்பதை மறந்துவிடக் கூடாது.

இலங்கை அரசும், புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடாதென்ற நிபந்தனையை முன்வைத்தே பேச வேண்டும். அது மட்டுமல்ல, வக்கற்ற யுத்த நிறுத்தஒப்பந்தத்தை மீளாய்வு செய்து, மீளப்புதுப்பித்தே அரசியல் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் வேண்டும்.

# ஊரிலிருந்து....



***ஏ-9*** வீதிப் போக்குவரத்து நெருக்கடி காரணமாக இப்போது குடாநாட்டு மக்களுக்கு இருக்கும் ஒரே வழி கடல் பயணம் தான். பயணிகள் போக்குவரத்தினை விட மிக அவசியமாகத் தேவைப்படுவது அத்தியாவசியப் பொருட்கள்தான். சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்த புலிகள், இதையே துரும்புச் சீட்டாகப் பாவித்து தங்கட சம்மதத்தை மறுக்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பில் இருந்து விலகியுள்ளது.

ஆனால் எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாத கடற்படை, இது எங்கட கடற்பகுதி எண்டு கொஞ்சம் உரக்கவே சொல்லிவிட்டு தங்கட சொந்தப் பாதுகாப்பில 3 சரக்குக் கப்பலையும், 2 பயணிகள் கப்பலையும் நடாத்திக் காட்டிப்போட்டுது. இனியும் கப்பல் சேவை தொடரும் எண்டும் சொல்லிப்போட்டுது.

மாவிலாறு, சம்பூர், யாழ் தீவகம், முகமாலை இவற்றை விட கப்பல் போக்குவரத்தும், கப்பல் மூழ்கடிப்பும்தான் சரியான நெத்தியடி எண்டு ஊரில சனங்கள் பேசுதுகள்.

# குற்றவாளிகள் பாதுகாக்கப்படும்போது குற்றங்கள் குறைய வாய்ப்பில்லை!!


தலைநகர் கொழும்பில் தமிழர்கள் கடத்தப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக வர்த்தகர்களும், பணம் படைத்தவர்களுமே கடத்தப்படுகின்றனர் என்பதை இதுவரை நடந்த கடத்தல் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

கொழும்பைப் பொறுத்தவரை ஏனைய மாவட்டங்களை விடவும் அதிகூடிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட இடமாகும். ஆகவே இந்தப் பாதுகாப்புச் சூழலுக்குள் கடத்தல் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்று பலர் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் நிராகரிக்க முடியாது. ஆகவே இந்தக் கொலைகளுக்கும் படுகொலைகளுக்கும் அரசாங்கம்தான் பொறுப்புக் கூற வேண்டும் என்று குரல்கள் எழுப்பப்படுவதும் நியாயமானதுதான். அதேவேளை, இவ்வாறான குற்றச் செயல்களைத் தொடரவிடாமல் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அரசு வழங்க வேண்டுமென முழக்கமிடுவதும் ஒரு வகையில் நியாயமானதுதான். ஏனெனில் இறைமையுள்ள அரசு என்பதால் தன் பரிபாலனத்துக்குட்பட்ட அனைத்துத் தரப்பு மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தார்மீகப் பொறுப்பாகும்.

அரசு தனியே இதைச் செய்ய முடியுமா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் சிலர் தமது எதிராளியை கையாள்வதற்குக் கைக்கூலிகளை அணுகுகின்ற இந்தச் சூழலில், குற்றவாளிகளைப் பாதுகாப்பாகத் தமது வாகனங்களில் அழைத்துக் கொண்டு திரிவதும் நடக்கத்தான் செய்கிறது. தங்களின் தவறுகளை மறைக்க குற்றவாளிகளை மிக நெருக்கமாக வைத்துக் கொண்டிருக்கும் அரசியல் பிரமுகர்களும் இருக்கிறார்கள்.

இதனால் குற்றவாளிகள் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்குள் சிக்காமல் சுதந்திரமாக நடமாடுவதற்கும் செயற்படுவதற்கும் பின்பலமாக அரசியல் பிரமுகர்களே இருக்கிறார்கள். இந்த உண்மைகளையும் மறுக்க முடியாது.

எப்படி இருந்தாலும் ஒரு தவறுக்கு இன்னொரு தவறு சரியாகி விடாது என்ற



அடிப்படையிலிருந்து பார்க்கின்றபோது தொடரும் கடத்தல்கள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவும், இதை நோக்கி அரசின் கவனத்தைத் திருப்பவும், மனோ கணேஷன் எம்.பீ. எடுத்துக் கொண்ட முயற்சி பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதேபோல் தன் அரசியல் எதிராளி என்றாலும் பொதுவான பிரச்சினை என்பதால் மனோ கணேஷன் எம்.பீ.யோடு இணங்கிச் செயற்படும் மகேஸ்வரன் எம்.பீ.யின் செயற்பாடும் ஆரோக்கியமானதுதான். இவர்கள் இருவரும் கொழும்பு மாவட்டத்தில் ஒரே கட்சியில் போட்டியிட்டு எம்.பீ.யானவர்கள். அவர்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் இடம்பெறும் கடத்தல் தொடர்பாகக் கவனமெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இதில் ஏனைய சிங்களத் தரப்புகளின் பிரசன்னமும் வரவேற்புக்குரியதான போதும், அவர்களின் கருத்துக்களும், அறிக்கைகளும், அரசின் மீதான காழ்ப்புணர்வின் வெளிப்பாடாகவே தோற்றமளித்ததைக் காண முடிந்தது. அதேபோல் ரவிராஜ் எம்.பீ.யின் பேச்சும் பிரசன்னத்துக்கான பேச்சாகவே இருந்தது. குறிப்பாக தங்களின் ஏகப்பிரதிநிதிகள் எனப் புலிகளை வரித்துக்கொண்டு அரசியல் செய்யும் எவருக்கும், படுகொலைகளையோ, ஆட்கடத்தல்களையோ கண்டிக்கும் அருகதை இல்லை எனலாம்.

கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி, நாடு தழுவிய ரீதியில் தொடரும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், வன்முறைகளைப் பக்கச்சார்பற்றுக் கண்டிக்க முடியாத இவர்கள், புலிகளின் செயற்பாடுகளில் இனங்காணப்படும் தவறுகளைக் கூட கண்டிக்க வலு இல்லாதவர்கள். இப்படிப்பட்டவர்கள் தனியே தலைநகரில் மட்டும் குரல் கொடுப்பது வேடிக்கையானது. அதிலும், தங்களைத் தவிர வர்த்தக சங்கங்கள் தமது கண்டனத்தையோ, அறிக்கையையோ விடவேண்டாம் என்று கூறுவதும், வன்மையான கண்டனத்துக்குரியதாகும். அது சர்வாதிகாரப் போக்கின் ஒரு வெளிப்பாடாகும். கடத்தப்பட்டவர்களின் விபரங்களைப் பார்க்கின்றபோது வர்த்தகர்களும், வசதி படைத்தவர்களுமாகவே உள்ளனர். ஆகையால் தமது அங்கத்தவரின் கடத்தலை, கொலையைக் கண்டிக்கும் உரிமை வர்த்தக சங்கங்களுக்கு உண்டு. அதை அடக்குவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

மறுபக்கத்தில், தலைநகரில் இவ்வாறானதொரு சூழலை ஏற்படுத்த வேண்டிய தேவை புலிகளுக்கும் உண்டு என்பதையும் பார்க்கவேண்டிய கட்டாயம் உண்டு. அப்படியாயின் ஏன் புலிகளால் மேற்படி கடத்தல்களையும், கொலைகளையும் செய்திருக்கமுடியாது. தலைநகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளால் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இல்லை என்பதை கடந்தகாலம் நன்கு உணர்த்தியுள்ளது.

தீவிர பாதுகாப்பான பகுதிகள் எனக் கருதப்பட்ட விமானத்தளம், பாதுகாப்புத் தலைமையகம் என்பன தாக்கப்பட்டது உட்பட படுகொலைகளையும் இணைத்துச் சிந்திக்கும் எவருக்கும் புரியக்கூடிய மிக இலகுவான விடயம் என்னவெனில் புலிகளுக்குத் தலைநகரில் ஆட்களைக் கடத்துவதற்கோ, யாரையும் படுகொலை செய்வதற்கோ முடியும் என்பதுதான்.

அப்படி புலிகள் செய்வதாக இருந்தால், இன்று இவற்றுக்கெதிராகக் குரல் கொடுக்கும் பலர் அதற்குத் துணையும் போகக் கூடும். ஏனெனில் உயிருக்கு அஞ்சித் துப்பாக்கிகளுக்கு சோரம் போகும் போக்கு என்பது இவர்களுக்கு ஒன்றும் புதியதல்ல. அதை எதிர்த்து உண்மைகளுக்காக வாழ்வதற்கு இவர்கள் எவரும் அகிம்சாவாதிகளுமல்லர்.

இந்த நிலைதான் யதார்த்தம் என்றால் அரசுக்கு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதும், சட்டத்துக்கு முன்னால் நிறுத்துவதும் பெரும் சிரமமான காரியம்தான். குற்றவாளிகளைப் பாதுகாத்துக் கொண்டு, குற்றங்களை நிறுத்த நடவடிக்கை எடுங்கள், இல்லாவிட்டால் போராட்டம் நடத்தப் போகிறோம் என்பது முழுக்க முழுக்க அரசியல் இலாபம் கருதிய செயற்பாடேயல்லாமல், வேறொன்றும் இல்லை.

பொதுமக்களின் படுகொலைகளையும், காணாமல் போதல்களையும் நடுநிலைமையாக நின்று கண்டிக்கவோ, தடுக்கவோ முடியாதவர்கள் அந்தப் பிரச்சினைகளை தமது அரசியல் லாபம் கருதிப் பிரயோகிப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

எவ்வாறெனினும், தலைநகரில் நடைபெற்ற கடத்தல்கள், கொலைகள் தொடர்பாக அவசரமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கை

அலசுவது

**- மதியூகி -**

துரிதப்படுத்தப்பட்டிருப்பது ஆறுதலளிக்கிறது. இந்த விசாரணைகளுக்கு வர்த்தக சமூகமும், ஏற்கனவே கடத்தப்பட்டு, பணம் கொடுத்து விடுதலையாகி இருப்பவர்களும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களும், சம்பவங்கள் தொடர்பில் விபரம் தெரிந்தவர்களும் இணைந்து பங்களிப்புச் செய்து இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் தொடராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். தவிரவும், இந்தக் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களைக் கண்டிப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் மேலும் தொடராதபடி மக்களும், பாதுகாப்புத் தரப்பும் கூடுதல் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதுவே இன்றையே பொதுவான தேவையாகும். ◎

தலைநகரில் நடைபெற்ற கடத்தல்கள், கொலைகள் தொடர்பாக அவசரமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டிருப்பது ஆறுதலளிக்கிறது. இந்த விசாரணைகளுக்கு வர்த்தக சமூகமும், ஏற்கனவே கடத்தப்பட்டு, பணம் கொடுத்து விடுதலையாகி இருப்பவர்களும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களும், சம்பவங்கள் தொடர்பில் விபரம் தெரிந்தவர்களும் இணைந்து பங்களிப்புச் செய்து இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் தொடராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். தவிரவும், இந்தக் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களைக் கண்டிப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் மேலும் தொடராதபடி மக்களும், பாதுகாப்புத் தரப்பும் கூடுதல் விழிப்பாக இருக்க வேண்டும்

## அதிரடி அய்யாத்துரை



**நெருப்பு** சுடும் எண்டது தெரிஞ்சும் திரும்பத் திரும்ப நெருப்பில கையை வச்சு சுட்டுக்கொண்டு திரியிறவரை என்னெண்டுங்கோ சொல்லிறது. இலங்கையின்ர விவகாரம் அவை நினைக்கிற மாதிரி இல்லையுங்கோ. இங்க பிரச்சினை தீர வேணுமெண்டால் விடாக்கண்டனும், கொடாக்கண்டனும் உணர்வுபூர்வமாக விரும்ப வேணுமுங்கோ. அப்புடி ஒரு நிலைமை உருவாகிச்சுதெண்டால் மத்தியஸ்தமும் தேவையில்லை, கண்காணிப்பும் தேவையில்லையுங்கோ. பிரச்சினையோடை சம்பந்தப்பட்டவையே சமரசத்துக்கு வருகினம்?. உது நடக்காதெண்டு ஆகிப் போட்டுது. ஆனால் எரிக்கானவர் ஏதோ தான் சொன்னால் இவை கேட்டுக் கொண்டு பேச்சுக்கு வந்துடுவினம் எண்ட நினைப்போடை சொன்ன கதைகள் இப்ப கிளப்பிவிட்டிருக்கு. நிபந்தனை இல்லாமல் இருதரப்பும் பேச்சுக்குத் தயார் எண்டு என்ன நேரத்தில சொன்னாரோ தெரியல்லை. ரெண்டு தரப்பும் நிபந்தனை மேல நிபந்தனை விதிக்கத் தொடங்கிட்டினம். உந்த நிபந்தனைகளைப் பார்க்கும் போது, ஒரு தரப்பின்ர நிபந்தனையை இன்னொரு தரப்பு ஏற்றுக்கொள்ள முடியாதுங்கோ. உதுக்கே தனியா இருதரப்பும் ஒரு யுத்தம் செய்ய வேணும். உந்த இலட்சணத்தில எரிக்கானவர் என்ன நிதானத்தில உப்பிடி ஒரு கதையைக் கதைச்சவரோ தெரியல்லையுங்கோ.

**வீணைக்** கட்சியின்ர தலைவர் தேவமானவர் அதிகாரமானவரோடை வெளிநாட்டுப் பயணம் செய்திருந்தார். உந்த நேரத்தில, இந்தியப் பிரதமர், கொபி அனான் எண்டு உலக முக்கிஸ்தர்கள் பலரையும் சந்திச்சுப் பேசியிருக்கார். அவையும், புன்னகையோடை கைலாகு குடுத்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கினம். உதில என்ன விஷயம் எண்டால், எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் அண்டை நாட்டின்ர பிரதமரைச் சந்திக்கப் போய் காய்ஞ்சு கொண்டு கிடக்கினம். இது ஒரு பக்கமிருக்க, இவையின்ர ஏகப்பிரதிநிதிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறும் பல உலகத் தலைவர்களை இவை சந்திக்க வாய்ப்புக் கிடைக்குமோ எண்டு தெரியாத நிலையில தேவமானவரை அவை சந்திச்சு கலந்து பேசினம் எண்டால், உதில ஏதோ ஒரு உண்மை இருக்குதுங்கோ. அது என்ன உண்மை தெரியுமோ? பயங்கரவாதிகளின்ர சதியாலை எம்.பி.யானவையையும், பயங்கரவாதிகளையும் சர்வதேச சமூகம் எண்டைக்கும் அங்கீகரிக்கயில்லையுங்கோ. தனியன் எண்டாலும் ஜனநாயக ரீதியில தெரிவு செய்யப்பட்டு இன்று பயங்கரவாதத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து வாரவர் எண்டதாலதானுங்கோ தேவமானவரை சர்வதேச சமூகம் மரியாதையோடை பார்க்குது எண்டு விஷயமறிஞ்சவை சொல்லினமுங்கோ...

**அண்டை** நாட்டில, அதுவும் தாய் மொழி ஊடகங்களில கொஞ்ச நாளாக தமிழர்கள் தொடர்பாகக் கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும், நேரடி ரிப்போர்ட்டுகளுமாக உணர்ச்சி பொங்கி வழிஞ்சுது. அதில சிலதுகள் உண்மை எண்டாலும் பலதுகள் கற்பனையும், மிதமிஞ்சினதும், பொய்களுமாக இருந்துது. சரி, தமிழ் மக்களின்ர உணர்வு வெளிப்படுகுது. அதில போய் பிழை பிடிச்சுக் கொண்டு நிற்பான் ஏன் எண்டு கண்டும் காணாமலும் நான் இருந்தனுங்கோ.

இப்ப என்ன நடக்குது தெரியுமோ? இவ்வளவு நாளும் அவை அவை தங்களுக்குச் சாதகமாக முழக்கின தமிழர் உணர்வுகளை எழுத்தாளர்களும், புத்திஜீவிகளும், தங்கட பாணியில விமர்சிக்க வெளிக்கிட்டிட்டினம். அதுலையும் சில பேர், "மீனுக்குத் தலையும், பாம்புக்கு வாலும்" காட்டிற ஸ்டைலோடையும் விமர்சிக்கினம். மொத்தத்தில உணர்ச்சி பொங்கி முடிஞ்சு இப்ப பயங்கரவாதத்தையும், தமிழர்களையும் முடிச்சுப் போடாதேங்கோ எண்ட கணக்கா கதை மாறிப்போச்சுங்கோ. இதற்கு உதாரணமாக "சோ" "நக்கீரன்" வாசந்தி போன்ற முக்கியமான எழுத்தாளர்களின்ர அண்மைய கருத்துக்களை நீங்களும் பாக்கலாமுங்கோ...

**அதிகாரமானவர்** சமாதானத்தில தனக்கு இருக்கிற விருப்பத்தை வெளிக்காட்டிற அதே நேரம், அதுக்காக பயங்கரவாதத்திடம் தன்னால் மண்டியிட முடியாது எண்டதையும் ஐயம் திரிபறச் சொல்லிப்போட்டாருங்கோ...உந்தப் போக்கு தென் இலங்கை பெரும்பான்மை மக்கள் மத்தியில அவர் மேல ஒரு புது நம்பிக்கையையும், ஆதரவையும் ஏற்படுத்தி இருக்கு எண்டு ஆய்வுகள் மூலமாக தெரிய வருகுதுங்கோ. உந்த ஆதரவு, கட்சி பேதங்களைத் தாண்டின வகையில இருக்கு எண்டும் சொல்லினமுங்கோ. ரெண்டெழுத்தாரின்ர தலைவர் சொன்ன மாதிரி, தான் ஒரு யதார்த்தவாதி எண்டது இது தானோ... ஹி...ஹி...

**தமிழ்**, முஸ்லிம் மக்களுக்குள்ள ஒரு இனக் கலவரத்தைத் தூண்டி விடுகிற முயற்சி இன்னும் கைவிட்ட பாடு இல்லை போல...உந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பிறகு எண்டு பார்த்தால் வாழைச்சேனையில, பிறகு கந்தளாயில,பிறகு மூதூரில, பிறகும் மூதூரில எண்டு பொதுமக்களை படுகொலை செய்து, அதை ஒரு இனச் சாயம் பூசி குழப்பத்தை உண்டு பண்ணும் முயற்சியை ரெண்டெழுத்தார் தொடர்ந்து கொண்டிருக்கினமெண்டினம், பொத்துவில் சகோதரர்கள் பொத்துவிலில பத்து முஸ்லிம் அப்பாவி கூலித் தொழிலாளர்கள் ஆடு; மாடு வெட்டிற மாதிரி தொண்டையை அறுத்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கினம். உந்தச் சம்பவத்தைக் கேட்ட அத்தனை பொதுமக்களும் குழப்பிப் போயிட்டினம். ஊருக்கு அமைதி எண்டதே தொலைஞ்சு போய், பதற்றமும் பீதியும் பூசிய முகங்களாக சனம் இருக்குதுகள்.

காலங் காலமாகத் தங்களை உப்பிடித்தான் பயங்கரவாதம் பலியெடுக்குது. உதுக்கு மேலையும் நாங்கள் கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதெண்டு பெடியள் தரவளி குமுறிக் கொண்டிருக்கினம். உந்தக் கோபமும், உணர்ச்சியும் நியாயமானதுதான். ஆனால் உப்பிடி உசுப்பேத்தி, ஊர்சனம் கடுப்பாகி, தமிழ்ச் சனத்தைப் பழி வாங்கினால்தான் தமிழ்ச் சனம் தங்களைத் தேடி ஓடிவரும்; இயக்கத்துக்கும் ஆள் சேர்க்கலாமெண்டு பயங்கரவாதிகள் போட்ட திட்டத்தை, கோபப்பட்டு நிறைவேற்றிக் கொடுக்கப் போறியளோ? எண்டு சில ஊர் பெருசுகள் ஆறுதல் சொல்லினம். இளந் தலைமுறை உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதும், அனுபவசாலிகள் ஆறுதல் சொல்லிறதும் இயல்புதான் எண்டாலும் உதுக்கு ஒரு முடிவும் கட்டப்பட வேணுமுங்கோ...இனியும் உது தொடரக் கூடாதுங்கோ.

**கூட்டணித்** தலைவர் ஆனந்தசங்கரியாருக்கு யுனஸ்கோ நிறுவனம் சகிப்புத்தன்மைக்கும், வன்முறை எதிர்ப்புக்கும் விருது கொடுக்குது எண்டது நமக்கு பெருமையான விஷயமுங்கோ. தன்ர சகாக்கள் எல்லாம் துரோகம் செய்து அவரை தனி மனிதனாக்கினது மட்டுமில்லாமல், அரசியலில இருந்தும் அவரை ஓரம் கட்டிப்போட்டம் எண்டும் காட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கேக்க... யுனஸ்கோ உந்த உயர்ந்த விருதை அவருக்குக் கொடுத்திருக்குது. இதனூடாகத் தெரியிற உண்மை என்ன எண்டால் உந்தக் கூத்தமைப்பு எம்.பி.மார், எம்.பி... சும்பி எண்டு வானத்துக்கும் பூமிக்கும் குதிச்சாலும் அடிப்படையில வன்முறைக்குத் துணைபோனவர்களாகவும், தங்களையே அடகு வச்சவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கேக்க, உது தனக்குச் சரிவராது; அப்புடி வாழிறது உண்மையான மக்கள் நலன் சார்ந்த வாழ்க்கை இல்லை; அந்த வாழ்க்கையில சுதந்திரமாக முடிவு எடுக்க முடியாது எண்டதையெல்லாம் யோசிச்சு, உயிர் அச்சுறுத்தல், அரசியல் பின்னடைவு எண்டதையெல்லாம் துணிந்து எதிர்கொண்டு வாழ்ந்த மனிதன் என்ற கௌரவத்தை சங்கரியார் இண்டைக்குப் பெற்றிருக்காருங்கோ. புதினம் தெரியுமோ? இதே சர்வதேச சமூகம் இலங்கையில ஒருவரை பயங்கரவாதியாகக் குறிப்பிட்டுள்ளது. அதே சர்வதேச சமூகம் அதையெல்லாம் சகித்துக் கொண்டவர் எண்டு ஒருவருக்கு விருது குடுக்குது. பாத்தியளோ, படை பரிவாரங்கள் எல்லாம் ஒரு தனி மனிதனிட்ட தோற்றுப் போயிட்டுது....

# பஸ் தரிப்பிடம்

தலைநகரின் பஸ் தரிப்பிடத்திற்குப் போகும் போதெல்லாம், அங்கு இருக்கும் பரபரப்பும், நெரிசல்களும், இயந்திரத்தனமாக என்னையும் முட்டி மோதித் தள்ளிக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு ஊருக்காகவும் வரிசையாகப் பஸ்ஸும் அதில் இருக்கையைப் பிடிப்பதற்காக பயணிகள் முட்டி மோதி அவசரப்படுவதும் எனக்குள் ஒரு பரவசத்தை ஏற்படுத்தும்.

வறுமையில் உழல்பவன்தான் எப்போதும் வறுமைக்கு எதிராகக் குரல் கொடுப்பான் என்பது போல், வசதியான ஒவ்வொரு நிகழ்வும் எனக்கு என் ஊரின் ஞாபகத்தையே மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

எனது கிராமத்தில் பஸ் வண்டியின்




முக்கியத்துவம் உணரப்பட்டிருக்காத காலம் அது. எனக்குப் பத்து வயது இருக்கும். சைக்கிள், மாட்டு வண்டி, அரை ரெக்டர், ரெக்டர் என்பவையே பிரதான வாகனங்கள். இவற்றுக்கும் வசதி இல்லாதவர்களுக்கு கால் நடையே நிரந்தரம்.

இப்படி நாகரீக வளர்ச்சிக்கும், வாழ்வின் மேம்போக்குக்கும் இடையில் வாழ்ந்து கொண்டிருந்த அந்தக் கால கட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஒரே ஒரு பஸ் வண்டி எங்களூருக்கு வந்து சேர்ந்தது. பஸ் வண்டி ஊருக்கு வந்ததே எங்களுக்கு ஆச்சரியமான நிகழ்வுதான். மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட எங்கள் ஊருக்கு கடல் வழியாக மிதப்புப் படகில் ஏற்றப்பட்டு பஸ் வண்டி வந்தது எங்களுக்கு ஆச்சரியம்தான்.

அந்தப் பஸ் வண்டி எங்கள் ஊரின் பிரதான வீதியில் கிழக்கிலிருந்து மேற்காகவும், மேற்கிலிருந்து கிழக்காகவும் மட்டும் தான் பயணிக்கும். மேற்கில் போய் எங்கே நிறுத்தப்படுகிறது? அங்கே எந்தப் பகுதியிலிருந்து பயணிகள் ஏறி வருகிறார்கள்? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

கிழக்கில் இருப்பவர்கள் நாங்கள். எனக்குத் தெரிய பஸ் வண்டியின் தரிப்பிடம் என்பது துறையடிக்குக் கொஞ்சம் வடக்காக இருக்கும் பெரிய வாகை மரத்தடிதான் எங்களூர் பஸ் தரிப்பிடம். மற்றப் படிக்கு மேற்குப் பக்கமாகப் போக விரும்பும் ஒருவர், குறிப்பிட்ட வாகை மரத்தடிக்குத்தான் போக வேண்டும் என்றில்லை. பிரதான வீதியில் எந்தவொரு இடத்திலும் நின்று கையை அசைத்தால் பஸ்ஸை நிறுத்துவார்கள். ஏறிப்போக வேண்டியதுதான். பிரதான வீதியில் பஸ் தரிப்பிடம் என்று ஒன்று இல்லாததால் பஸ் தரிப்பிடம் பற்றித் தெரியாது.

சிறிது காலத்துக்குப் பிறகு பஸ்ஸை ஏன் வாகை மரத்தினடியில் நிறுத்த வேண்டும், அதை மாற்றி வைத்தியசாலை அமைந்திருக்கும் சந்திக்கடை அருகில் நிறுத்திவைத்தால் வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கும், வைத்தியசாலையிலிருந்து வீடுகளுக்குப் பயணிப்பவர்களுக்கும் பேருதவியாக இருக்குமே என்று விவாதிக்கப்பட்டு, பின்னர் பஸ் வண்டியை, சந்திக்கடை அருகிலேயே நிறுத்திவைப்பதென்று முடிவு எடுக்கப்பட்டது. அன்றிலிருந்து பஸ் தரிப்பிடம் என்பது சந்திக்கடை தான் என்று அடையாளமாகிவிட்டது.




பிற்காலத்தில் ஏற்பட்ட சிறிய மாற்றம் - எங்கள் ஊரில் ஒரு பஸ் தரிப்பிடம் கட்டப்பட்டது. அந்தத் தரிப்பிடம் கட்டப்பட்டது, சோகம் நிறைந்த சந்தோசமான நிகழ்ச்சி.

எங்கள் வைத்தியசாலைக்கு அருகாகப் பிரதான வீதியின் பக்கத்தில் ஒரு நாள் காலை கடற்கரை மணல், செங்கற்கள், சீமெந்து, கூரை ஷீட் என்று சொற்பமான பொருட்கள் கொண்டுவரப்பட்டன. என்ன கட்டப்போகிறார்கள் என்பதே எங்களுக்குத் தெரியவில்லை. வீதி ஓரமாக யாரும் வீடு கட்டப்போகிறார்களோ என்று தான் ஊரில் பலரும் நினைத்துக் கொண்டார்கள்.

கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. பத்தடி நீளம், இரண்டரை அடி அகலமான ஒரு கட்டிடம். அதற்குள் இருக்கை போன்று ஒரு கட்டும் கட்டப்பட்டிருந்தது. பின் பக்கமும், இரண்டு பக்கவாட்டிலுமாக மூடப்பட்ட மதில்கள். முன் பக்கமாக நான்கு அடி உயரத்தில் அரை மதில். மேலே ஷீட் போட்டு இருந்தது. முன்னால் இருக்கும் அரை மதிலில் பிரதான வீதியில் இருந்து பார்க்கும் பக்கமாக இறந்து போன ஒருவரின் நினைவுகள் தாங்கிய கருங்கல்லிலான விளம்பரப் பலகை பதிக்கப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளுடன் கட்டப்பட்டிருப்பது பஸ் தரிப்பிடம் என்று கூறப்பட்டது. எப்படியோ எங்கள் ஊரிலும் ஒரு பஸ் தரிப்பிடம் கட்டப்பட்டது பெருமையாக இருந்தது. மறுபக்கத்தில் இப்படி ஒரு பஸ் தரிப்பிடம் கட்டப்படுவதற்கு ஒருவர் இறந்து போக வேண்டியதாக இருந்திருக்கிறதே என்று நினைக்கையில் துக்கமாகவும் இருக்கிறது.

எனக்கு அந்த அஞ்சலிக்குரியவரின் பெயரை நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை. ஆனால் நிச்சயமாக அது ஒரு தமிழருடைய நினைவு மண்டபம்தான் என்பது நன்றாகத் தெரியும். இறந்தவரின் மகன், தன் தந்தையின் நினைவாகக் கட்டித் தந்த அந்தக் கட்டிடம், எங்கள் முழு ஊருக்கும் பிரதான பஸ் தரிப்பிடமாக சுமார் பதினைந்து இருபது வருடமாக இருந்து வந்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

அப்படி ஒரு தருணத்தில் கட்டப்பட்ட பஸ் தரிப்பிடம், பின்னால் பட்ட பாடு இருக்கிறதே அதை இப்போது நினைத்தாலும் சிரிப்பாகத்தான் இருக்கிறது. ஓரிருவரை விட, மக்கள் கூட்டம் கூட்டமாகப் பஸ்ஸுக்காகக் காத்திருந்து பஸ் ஏறியதை நான் காணவில்லை.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
முரசு விமர்சனம்
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.

## நிறைவேறிய நோக்கம் என்ன?

அண்மையில் சூரியன் எப்.எம்.தனியார் வானொலிச் சேவையின் செய்திமுகாமையாளர் நடராஜா குருபரன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே. ஆனால் அவரைக் கடத்தியது யார்? எதற்காகக் கடத்தினார்கள்? என்ற விடயங்கள் இதுவரை வெளியாகவில்லை. காரணம் சம்பந்தப்பட்டவர் இதுவரை பொலிஸாரின் விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதேயாகும். மேலும் எதிர் காலத்தில் ஊடகவியலாளர்கள் கடத்தப்படும்போது அல்லது பாதிக்கப்படும்போது அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என்று கூறுவதற்கு இடமில்லாமல் போகுமளவுக்கு ஒரு ஊடகவியலாளர் நடந்து கொள்வது கவலைக்குரியது என்பதுடன் "கடத்தியவர்களின் நோக்கம்" நிறைவேறியதும் தம்மை விடுவித்து விட்டதாக குருபரன் கூறியிருந்தார். அந்த நோக்கம் என்பதற்குள் உள்ள மர்மம் எதுவென்று அவருக்கு மட்டுமே வெளிச்சம். இப்படியான ஒரு நிலையில் அவரது சார்பாக இனிவரும் காலங்களில் வெளிவரும் செய்திகளில் எவ்வளவு நம்பகத் தன்மை இருக்கும் என்ற ஐயப்பாட்டையும் பலர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. எனவே ஒரு ஊடகவியலாளர் என்றுமே துணிவுடனும் நடுநிலையுடனும் நடந்து கொள்வதே மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

*-ரி.ராஜேஸ், வவுனியா.*


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

**நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...**

**பண்டாரவளை மலையாள மகா வசிய மாந்திரீகம்..**

**ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள**



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

# ஷர்மா சுவாமிகள்

**உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.**

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அதிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

**பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.**

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சந்திப்பு**
பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**
- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

# ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...


# விளம்பரப் பகுதி


**மலையாள மாந்திரீகம்**



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

**அருள் சித்த எண்ணெய்**



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

**ஜாதகம்**



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி
**P.K.சாமி (J.P.) ஐயா**

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

**ABI Beauty Parlour**



Abi Beauty Parlour

பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன முற்பதிவுகளுக்கு தொடர்புகொள்ளவும்.

No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)

இன்னொருவர் பார்வையில்

# அணி சேரா நாடுகளும் அணி சேரும் பிரச்சினைகளும்!

**ஹவானாவில் நடைபெற்ற பதினான்காவது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பாக 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. உலகம், அமெரிக்காவினதும் சோவியத் யூனியனினதும் செல்வாக்கு பிராந்தியங்களாகி இரு முகாம்களாக பிளவுப்பட்டிருந்த காலத்தில் மூன்றாவது சக்திவாய்ந்த முகாமாக தோற்றம் பெற்ற அணிசேரா இயக்கம், சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஒரே ஒரு வல்லரசான அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக எப்படி மாறியது என்பதை விளக்குகிறார் அமீன் இஸ்ஸதீன்.**

"**ஹவானாவில்** நடந்தது என்ன? இளம்பரம்பரைக்கு அது பற்றி எதுவுமே தெரியாது போல் தெரிகிறது. அதேவேளை, பனிப்போர் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்தோர்க்கெல்லாம் அன்றைய அதிகார சமநிலை இப்போது இல்லையென்பது வேதனையாக இருக்கிறது. பனிப்போர் காலத்தில், வலுவான மூன்றாவது அணியாகத் தோற்றம் பெற்ற அணிசேரா இயக்கம், அதன் பயன்பாட்டைத் தற்போது கைவிட்டு விட்டுத் தனது இருப்புக்கான புதிய காரணங்களைத் தேடிப் பிடிக்கப் போராடுவது போல் தெரிகிறது. காலனித்துவம், ஏகாதிபத்தியம், இனவெறி ஆகியவற்றிற்கு எதிரான அணிசேரா இயக்கத்தின் முயற்சிகளில் முன்னணி வகித்த சில நாடுகள் உட்பட அதன் பெரும்பாலான அங்கத்துவ நாடுகள், இன்றைய நிலையில் இருக்கக் கூடிய ஒரேயொரு மேலாதிக்க வல்லரசோடு தம்மை இணைத்துக் கொண்டுள்ளன அல்லது நவகாலனித்துவப் பலிபீடத்தில் தமது இறைமையைச் சரணடையச் செய்வதற்கு போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியலமைப்பு முறை, இரு மேலாதிக்க வல்லரசுகளுக்கிடையில் மிக மோசமான போட்டா போட்டிக்கான களத்தை ஏற்படுத்தியிருந்ததோடு, சர்வதேச சமூகத்தை இரு முகாம்களாகப் பிரித்தும் இருந்தது. அப்போது ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள் தமக்கிடையே ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முனைந்தன. அத்துடன் காலனித்துவ எதிர்ப்பைத் தமது உன்னத இலட்சியமாக இந்த இயக்கம் கொண்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. இந்த நாடுகள் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தைய முகாமுடனோ அல்லது சோவியத் யூனியன் தலைமையிலான கிழக்கத்தைய முகாமுடனோ அணி சேர்ந்து கொள்ளவில்லை. எவருடனும் பகைமை பாராட்டுவதில்லையென்பதும், அனைவருடனும் நட்புறவைப் பேணுவது என்பதும் அணிசேரா இயக்கத்தின் இலட்சியமாக இருந்தது.

அணிசேரா இயக்கத்துக்கான விதை, புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளால் 1950களின் ஆரம்பத்தில், தெற்கு - தெற்கு ஒத்துழைப்பை ஒரு முன்னேற்றச் செயற்பாடாக எடுத்தபோதே விதைக்கப்பட்டது. இந்த மாபெரும் அணியை நோக்கிய சிறு அடி 1951ஆம் ஆண்டின் கொழும்புத் திட்ட மாநாட்டோடு முன்னெடுக்கப்பட்டபோதும், இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் 1955ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய - ஆபிரிக்க உச்சி மாநாட்டில் அந்த விதை சிறுகன்றாக வளர்ச்சி பெற்றது. பாண்டுங் மாநாட்டை எகிப்து, இந்தோனேசியா, பர்மா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன. பாண்டுங்கில் ஆசியாவையும் ஆபிரிக்காவையும் சேர்ந்த 29 நாடுகள் அமெரிக்கா, சோவியத் யூனியன் அல்லது வேறெந்த ஏகாதிபத்திய சக்திகளுக்கும் எதிரான தமது நிலைப்பாட்டைப் பிரகடனம் செய்தன. ஆசிய, ஆபிரிக்கத் தலைவர்கள் பாண்டுங்கில் ஒருமித்த குரலில் பேசினர். இருந்தும் அப்போதைய இலங்கைப் பிரதமராக விளங்கிய சேர் ஜோன் கொத்தலாவல, தனது உரையில் சோவியத் எதிர்ப்பை வெளிக்காட்டியதன் மூலம், சீன, இந்தியத் தலைவர்களை எதிர்பாராத விதமாக அதிர்ச்சியுறச் செய்தார். அவரது உரை, அமெரிக்க ஊடகங்களினதும் நிறுவனங்களினதும் பாராட்டைப் பெற்றது.

எவ்வாறெனினும் சோவியத் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துக் கொத்தலாவல உரையாற்றியமை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அதாவது, கிழக்கு ஐரோப்பாவிலும் மத்திய ஆசியாவிலும் சோவியத் யூனியன் கொண்டிருந்த கொள்கைகள், மேற்குக் காலனித்துவத்துடன் சேர்த்து தணிக்கை செய்யப்பட வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பியது. இந்த மாநாடு சகல விதமான காலனித்துவ வெளிப்பாடுகளையும் ஏகமனதாகக் கண்டிக்க வேண்டுமென்று இணக்கம் கண்டது. அதாவது, மேற்கைப் போன்று சோவியத் யூனியனின் கொள்கைகளையும் கண்டனம் செய்தது.

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவினால் அணிசேராமை என்ற பதம் 1954ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற தயாரிப்புக் கூட்டமொன்றில் முதன் முதலாக முன்வைக்கப்பட்டது. ஐந்து கொள்கைகளின் அல்லது பஞ்சசீல கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த ஓர் அரசியல் தத்துவமாக அணிசேராமையை நேரு முன்வைத்தார். சீன - இந்திய உறவுகளுக்கான ஒரு வழிகாட்டியாக, சக வாழ்வுக்கான மந்திரமாக சீனப் பிரதமர் சூ.என் லாய் முதன் முதலாக இதனை முன் வைத்தார்.

அந்த ஐந்து கொள்கைகளும் வருமாறு :-

1. பரஸ்பரம் மற்றவர்களின் பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் மதித்தல்.
2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை.
3. நாடுகளின் உள்விவகாரங்களில் பரஸ்பரம் தலையிடாமை.
4. சமத்துவமும் பரஸ்பர நலனும்.
5. சமாதான சகஜீவனம்.

வல்லரசு முகாம் எதனுடனும் தன்னை இணைத்துக் கொள்ளாத, சுயாதீனமான அரசியல் முகாமாக அணிசேரா இயக்கம் மலர்ந்தது. இது தனது


ஹவானா உச்சி மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி உரையாற்றியபோது பிடிக்கப்பட்ட படம்

அங்குரார்ப்பணக் கூட்டத்தை யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிறேட்டில் 1961ஆம் ஆண்டு, அப்போதைய யூகோஸ்லாவிய ஜனாதிபதி ஜோஸிப் டிட்டோவின் தலைமையில் நடத்தியது. அவர் யூகோஸ்லாவிய நாட்டவர்களாலும் அணிசேரா இயக்கத்தினராலும் மார்ஷல் டிட்டோ என்று அன்பாக அழைக்கப்பட்டார். அணிசேரா இயக்கத்தின் முன்னோடிகளாக நேரு, டிட்டோ, நாசர் ஆகியோர் திகழ்ந்தனர்.

அன்றிலிருந்து அணிசேரா இயக்கம் அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகளுக்குமெதிராக உறுதியான போராட்டங்களை நடத்தி வந்தது. ஆனால், சர்வதேச அரங்குகளில், பெரும்பாலும் அமெரிக்காவுக்கெதிராகவே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சர்வதேச வர்த்தகம், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலையைப் பெறுதல், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து விசேட உரிமைகளைப் பெறுதல், அல்லது சர்வதேச நீர்ப்பரப்பில் சமுத்திர வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பிரச்சினைகளிலெல்லாம் மூன்றாம் உலக நாடுகளின் ஒருமைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது.

சர்வதேச சட்டப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை கூட, சர்வதேச ஒப்பந்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, மீளவும் புதிதாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்தைப் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள் முன்வைத்தன. ஏனெனில், இந்த நாடுகள் சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் இந்த நாடுகள் எவ்வித பங்களிப்பையும் செய்யும் சந்தர்ப்பம் கிட்டாததாலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்தன. அரசியல் முனையிலும் கூட ஆசிய - ஆபிரிக்க இயக்கம், அளப்பரிய பங்காற்றியது. 1956ஆம் ஆண்டு சூயஸ் கால்வாயை எகிப்து தேசியமயமாக்கியதையடுத்து, ஆங்லோ - பிரெஞ்சு - இஸ்ரேல் எகிப்து மீது நடத்திய தாக்குதலை, இந்த இயக்கம் வன்மையாகக் கண்டித்தது. அதேபோன்று, அதே வருடம் ஹங்கேரி மீது சோவியத் யூனியக் நடத்திய ஆக்கிரமிப்பையும் இந்த இயக்கம் வன்மையாகக் கண்டித்தது. ஆனால், அதேவேளை, இந்த நெருக்கடிகளைத் தணிப்பதிலும் இந்த இயக்கம் பெரும் பணியாற்றியது. 1962ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்திய - சீன எல்லை யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதில் அணிசேரா இயக்கம், சமாதான ஏற்பாட்டாளர் பாத்திரத்தை வகித்தது. பாலஸ்தீன இலட்சியத்தை அணிசேரா இயக்கம் வலுவாக ஆதரித்ததோடு, அல்ஜீரியா, தென்னாபிரிக்கா, சிம்பாப்வே (ரொட்ஷியா), அங்கோலா, மொசாம்பிக் உட்பட ஏனைய பல ஆபிரிக்க நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களையும் ஆதரித்தது.

இந்த இயக்கத்தின் ஆரம்ப வருடங்களில், அநேகமாக அனைத்து அங்கத்துவ நாடுகளினதும் வெளிநாட்டுக் கொள்கைகளில் அணிசேராமையென்ற உணர்வு நன்கு வெளிப்பட்டது. ஆனால், அணிசேராமையென்ற வரம்புக்குள் தம்மை வைத்துக் கொள்வது கஷ்டமானதென்பதை, அங்கத்துவ நாடுகள் விரைவாகவே உணர்ந்து கொண்டன. ஏனெனில், பெரும்பாலான அங்கத்துவ நாடுகள் இராணுவ ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மிக மோசமாகப் பலவீனமுற்றிருந்ததால், இரு முகாம்களால் பிளவுபட்டிருந்த உலக அமைப்பில், சக்திவாய்ந்த மூன்றாவது முகமாக இந்த இயக்கம் தோற்றம் பெறுவதற்கு உதவ முடியாமல் போய்விட்டது. பல அங்கத்துவ நாடுகள் இரு முகாம்களில் ஏதோவொன்றுடன் இணைந்து, ஆதரவு நாடுகளென்று அழைக்கக்கூடிய அளவுக்குப் பரிமாற்றம் பெற்றன.

அணிசேரா இயக்கத்தின் தோற்றுவாய்க்கு முன்னோடியாக விளங்கிய இந்தியாவும் எகிப்தும் சோவியத் யூனியனின் பாதுகாப்புக் கவசத்தைப் பெற வேண்டிய நிலைக்கு விரைவிலேயே தள்ளப்பட்டன. இதேவேளை மற்றொரு முன்னோடி நாடாக விளங்கிய இந்தோனேசியா, அமெரிக்கா பக்கம் சாய்ந்தது. இலங்கை கூட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த போதெல்லாம் மேற்குலகுக்குச் சார்பான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றியதோடு, மேற்குலக முகாம் சார்பானதாகக் கருதப்பட்டிருக்கிறது. சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்தபோது, சோவியத் சார்பு நிலைப்பாட்டை எடுத்ததாகவும் கருதப்பட்டிருக்கிறது.

1979ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானை, சோவியத் யூனியன் ஆக்கிரமித்தபோது, அணிசேரா இயக்கத்துக்குள்ளிருந்த முரண்பாடு வெளிப்படத் தொடங்கியது. இந்தியாவும் ஏனைய சோவியத் சார்பு நாடுகளும் ஆப்கானிஸ்தானை, சோவியத் யூனியன் ஆக்கிரமித்ததை ஆதரித்தன. அதேவேளை, அணிசேரா இயக்கத்தின் பெரும்பாலான நாடுகள், குறிப்பாக அரபு நாடுகள், சோவியத் யூனியனின் நடவடிக்கையை ஏகாதிபத்திய நடவடிக்கையென்றும் மேலாதிக்க நடவடிக்கையென்றும் கண்டித்தன.

ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பதற்கு சில மாதங்கள் முன்னதாக, 1979ஆம் ஆண்டு 'ஹவானாவில் நடைபெற்ற அணிசேரா இயக்கத் தலைவர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனம், அந்த இயக்கத்தின் நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது. ஏகாதிபத்தியம், காலனித்துவம், நவகாலனித்துவம், இனவெறி, சியோனிஸம், சகல விதமான வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள், தலையீடுகள் அல்லது மேலாதிக்கம், பெருவல்லரசுகள் சார்ந்த போராட்டம் ஆகியவற்றுக்கு எதிராக அணிசேரா நாடுகள் நடத்திவரும் போராட்டத்தை ஆதரிப்பதென்றும், இந்த நாடுகளின் தேசிய சுதந்திரம், இறையான்மை, பிரதேச ஒருமைப்பாடு, பந்தோபஸ்து ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் அந்தப் பிரகடனம் வலியுறுத்தியது. 1991ஆம் ஆண்டு பனிப்போர் முடிவுற்ற பின்னர், அணிசேரா இயக்கத்தில் ஒரு வெறுமை தோன்றியது. இந்த இயக்கத்தின் இலக்குகளையும், அந்த இயக்கத்தையும் மீள வரையறை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த பல நாடுகள் இருக்கக் கூடிய ஒரே ஒரு வல்லரசோடு சேர்ந்து கொள்வதே தமது பிழைப்புக்கான உத்தியென நம்பத் தொடங்கின.

இப்பொழுது இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் பல அரபு நாடுகளும் அணிசேர இயக்கத்தில் அங்கம் வகிக்கும் வேறு பல நாடுகளும் தம்மை அமெரிக்காவின் சகாக்கள் என இனங்காட்டிக் கொள்வதில் பெருமை கொள்கின்றன.

முன்னைய யூகோஸ்லாவிய குடியரசில் இருந்து பிரிந்து சென்ற நாடுகள், இந்த இயக்கத்தில் இணைந்து கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இதேவேளை அணி சேரா இயக்கத்தில் அங்கம் வகித்த மோல்டா, சைப்பிரஸ் போன்ற நாடுகள், அந்த இயக்கத்திலிருந்து விலகி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ளன.

அணிசேராமை என்ற உணர்வு இன்று எங்கே போய்விட்டது? இன்றைய அரசியல் நிலைமைகளை வைத்துப் பார்க்கையில் ஈரான், வெனிசூலா, பொலிவியா, கியூபா, சிரியா, சிம்பாப்வே, வட கொரியா மற்றும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நாடுகள் மட்டுமே அரசியல் நோக்கில் உண்மையில் அணிசேராத நாடுகளாகத் திகழ்கின்றன. இவையே 1979ஆம் ஆண்டு முன் வைக்கப்பட்ட 'வானாப் பிரகடனத்தை கௌரவிக்கும் நாடுகளாகவும் இருக்கின்றன. அணிசேரா இயக்கத்தில் 118 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலக சனத்தொகையில் 55 சதவீதமானவர்கள் இந்த நாடுகளில் வாழ்கிறார்கள். ஈரான், ஈராக் போன்ற அணிசேரா இயக்க நாடுகளை, இப்போது இருக்கக்கூடிய ஒரே ஒரு வல்லரசான அமெரிக்கா ஆக்கிரமிப்பதற்கு ஒரு தலைப்பட்சமாக முடிவெடுக்கும் இந்தத் தருணத்தில், அணிசேரா இயக்கத்துக்குப் புதிய பாத்திரமொன்றை வகுப்பதற்காக 'ஹவானா மாநாடு கூட்டப்பட்டது. மூன்றாம் உலக நாடுகளின் மூலவளங்களைச் சுரண்டுகின்ற அல்லது உலக மயமாக்கலை ஊக்குவிக்கின்ற முதலாளித்துவவாதிகளின் பிடியிலிருந்து மூன்றாம் உலக நாடுகளை விடுவிக்கும் முயற்சியில் 'ஹவானா மகாநாடு இறங்கும் என்று நம்பப்பட்டது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளால் உலக மயமாக்கம் என்ற பிரச்சினைகளை தன்னந்தனியனாக எதிர்கொள்ள முடியாது. இந்த நாடுகள் கூட்டாக ஐக்கியப்பட்டு, ஒன்றிணைந்த போராட்டம் ஒன்றினை முன்வைக்க வேண்டும். ஒரே ஒரு மேலாதிக்க வல்லரசு மட்டுமே தற்போது இருப்பதால், அணிசேராமை என்ற பதப்பிரயோகம் தற்போதைய நிலைமையில் சரியானதாக இருக்க முடியாது. அணிசேரா இயக்கத்தின் அங்கத்துவ நாடுகள் தத்தமது தேசிய நலன்களை முன்னிலைப்படுத்தி, தமக்கென தனித்தனியான நிகழ்ச்சி நிரல்களை வரையறுத்து தற்போது முன்வைக்கின்றன. உலகளாவிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை அடக்குவதற்கு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் எடுத்துவரும் முயற்சிகளுக்கு எதிராக ஐக்கியப்பட்ட நிலைப்பாடொன்றை எடுப்பதற்கு அணிசேரா இயக்கம் தவறி வருகிறது.

ஈரானின் அணு சக்தித்திட்டக் கொள்கைக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் அழுத்தங்களுக்கு அணிசேரா நாடுகள் இன்று தலை சாய்த்து வருகின்றன. ஆரம்பத்தில் பல அணி சேரா நாடுகள் ஈரானுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பின. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையில் இந்த விவகாரம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இந்தியா உட்பட பல அணிசேரா நாடுகள் அமெரிக்காவுடனும், ஐரோப்பாவுடனும் சாய்ந்து கொண்டமை வேதனைக்குரியது.

பனிப்போர் நடைபெற்ற காலத்தில் பலம் பெற்றதாக விளங்கிய அணிசேரா இயக்கம் மீண்டும் அதே நிலையை அடைய வேண்டும் என்றால், அங்கத்துவ நாடுகள் குறுகிய சில பொருளாதார மற்றும் அரசியல் நலன்களுக்காக அடிபணிவதைக் கை விட்டு விடவேண்டும். இதுவே சகல அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் பொதுவான நன்மைக்கு உதவக் கூடியதாக இருக்கும். மூன்றாம் உலக நாடுகளின் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இந்தியா பெரும் பங்களிக்க முடியும். ஆனால் இந்தியா அப்படிச் செய்யுமா என்பது கேள்விக்குறி.

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவுடன் கூட்டுச்சேர்ந்து கொள்வது வேறு விடயம். ஆனால் மூன்றாம் உலக நாடுகளின் ஒருமைப்பாட்டை அடகு வைத்து விட்டு, இருக்கக்கூடிய ஒரே ஒரு மேலாதிக்க வல்லரசுடன் இணைந்து கொள்வது அணிசேராமையின் இலட்சியத்துக்கு ஏற்றதல்ல.

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் கூட அணி சேராமை என்ற நிலைப்பாட்டை எடுக்க முடியும். செப்டெம்பர் 11ஆம் திகதிய தாக்குதலுக்குப் பின்னர் புக்கர் பரிசைப் பெற்ற இந்திய நூல் ஆசிரியையான அருந்ததிரோய், தான் பயங்கரவாதிகளுக்குச் சார்பானவரோ அல்லது அமெரிக்காவுக்குச் சார்பானவரோ அல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்குத் தெரிவித்திருந்தார். அதுவே உண்மையான அணி சேராமையின் நிலைப்பாடாகும். கியூபோ சவேஸ், பிடல் கெஸ்ரோ, மக்மூத் அ்.மடினேஜாத் மற்றும் சில மூன்றாம் உலக நாட்டுத் தலைவர்களிடம் தான் தற்போது அணிசேராமை என்ற உணர்வுகளைக் காண முடிகின்றது.

*-நன்றி :- டெய்லி மிரர்*


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**வருடம்** - 1964 என்று ஞாபகம்.

காரின் முன் வரிசையில் வாய் நிறையத் தாம்பூலம் தரித்தவாறு திரு.சி.எஸ். ஜெயராமன் அமர்ந்திருக்க - பின் வரிசையில் நான் பவ்வியமாக உட்கார்ந்திருந்தேன்.

கார், செங்கல்பட்டைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. ஜெயராமன் ஒரு ராகத்தை ஆலாபனம் செய்தவாறு



மெய்மறந்து மூன்று கால சஞ்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். நான் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டு வந்தவன், இடையில் ஓரிடத்தில், "ஆஹா... அற்புதம்" என்றேன்.

உடனே அவர் பாட்டை நிறுத்திவிட்டு, "தம்பீ! உங்களுக்கு சங்கீதம் தெரியுமா?" என்றார். "ஓரளவு ரசிக்கத் தெரியும். சட்ட திட்டங்களெல்லாம் அவ்வளவாகத் தெரியாது." என்றேன் நான். "இப்ப நான் பாடினது என்ன ராகம்?" என்று ஜெயராமன் வினவியவுடன், 'காமவர்த்தினி' என்று நான் பதில் சொன்னதும், "பலே" என்றார் அவர்.

பிறகு அவர் பாடப் பாட நானும்- 'இது ஹரிகாம்போதி, இது நடபைரவி, இது அமீர் கல்யாணி' என்றெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தேன்.

"தம்பீ! நீங்க காவேரித் தண்ணியாச்சே, சங்கீத ஞானத்துக்குக் கேக்கணுமா?" என்று என்னை சிலாகித்தார் ஜெயராமன்.

மதுராந்தகத்தில் இறங்கி ஒரு ஹோட்டலில் இருவரும் காப்பி சாப்பிட்டோம்.

மீண்டும் காரில் சங்கீத சர்ச்சைதான். எம்மார் விஜயராகவாச்சாரியாரின் குருவாக விளங்கிய திரு. சுந்தரம்பிள்ளை, தன்னுடைய தந்தையார் என்ற விபரமெல்லாம் சி. எஸ். ஜெயராமன் என்னுடன் பேசிக்கொண்டே வந்தார்.

பிறகு "தம்பீ! நீங்க என்ன தொழில் பண்றீங்க...?" என்று வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத் தடவியவாறே என்னை வினவினார்.

"பாட்டு எழுதிக்கிட்டி ருக்கிறேன்..." என்று சொன்னதும், "அப்படியா?" என்று வியப்பும் கேள்வியுமாக என் பக்கம் திரும்பி அமர்ந்தார்.

"கிராம.:.போன் ரிக்கார்டுகள்ல யாராச்சும் பாடியிருக்காங்களா?" என்று என்னைக் கேட்டார்.

டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா முதலானோர் பாடியிருப்பதாகச் சொன்னேன்.

"சபாஷ்! சபாஷ்! டி.எம்.சௌந்தரராஜன் என்ன பாட்டுப் பாடியிருக்காரு, கொஞ்சம் பாடிக் காட்டுங்க..." என்றார் சி.எஸ்.ஜெயராமன்.

நானும் திரு.டி.எம்.எஸ்.பாடிய என்னுடைய பாடல்களான, "கற்பனையென்றாலும்," "ஓராறு முகம்.." - திரு.P.B.சீனிவாஸ் பாடியுள்ள, "இசையால் எதுவும் வசியமாகும்..." என்று அப்போது என் நினைவிலிருந்த பல பாடல்களைத் திரு.ஜெயராமனிடம் பாடிக் காண்பித்தேன்.

ஜெயராமன் வெகுவாகப் பரவசப்பட்டுப் போனார்.

"தம்பீ! உங்க சாகித்யங்களெல்லாம் பிரமாதமாயிருக்கிறது. நீங்க சொன்ன இந்தப் பாட்டெல்லாம் நான் ஏற்கனவே கேட்டிருக்கிறேன். ஆனா, அந்தப் பாட்டெல்லாம் எழுதினது நீங்கதான்னு எனக்குத் தெரியாது..." என்று சொன்னவர், இடைமறித்து என்னைப் பேசவிடாமலேயே மேற்கொண்டு தொடர்ந்தார்.

"தம்பீ! உங்களுக்குப் பாட்டெழுத நல்லா வருது. எல்லாம் அருமையான இசைச்சொற்களா இருக்குது, கருத்துக்களும் புதுசா விளங்குது. நீங்க சினிமாவ்ல பாட்டு எழுத முயற்சி பண்ணீங்கன்னா - பிரமாதமா வருவீங்க..." என்று அவர் சொன்னதும்-


"அண்ணே..." என்று நான் குறுக்கிட்டேன். ஆனால் அவர் என்னைப் பேச விடவில்லை.

(தொடரும்.......)




---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




**சோ**வியத் ரஷ்யாவுக்கு எதிராக ஒரு பலமான அபிப்பிராயத்தை உருவாக்குவதற்குத் தான் மேற்கொண்ட முயற்சிகளை விரும்பாத சிலரின் தூண்டுதலாலேயே தன் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார். ஆப்கானிஸ்தான் அகதிகளை ரஷ்யர்கள் கொடுமையாக நடத்துவதைப் பற்றி ஐ.நா. சபையின் கவனத்திற்குத் தான் கொண்டு வந்ததும், சில ரஷ்ய அதிகாரிகள் KGB உளவாளிகள் என தான் நிரூபிக்க முயன்றதும் தன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்குக் காரணம் என்கிறார் அவர். இந்த சம்பவம் பற்றி அபிப்பிராயம் சொல்லுகின்ற சிலர் அந்நிய நாடுகளோடு நல்லுறவினை ஏற்படுத்துவதற்கும், அந்த நாடுகளின் சார்பாக உளவு வேலை பார்ப்பதற்கும் வேறுபாடு தெரியாதவர்களே ராம்ஸ்வருப்பின் செயல்களைத் தவறாக விமர்சித்து நடவடிக்கை எடுத்திருப்பதாக சொல்கிறார்கள்.

நட்புறவை வளர்க்கின்ற செயலா, உளவு வேலை நடவடிக்கையா என்பதைக் கிடைக்கின்ற ஆதாரங்களை வைத்தே முடிவு செய்ய வேண்டியிருப்பதால் இது குறித்து பொதுவான அப்பிராயம் சொல்லுவதற்கு வழியில்லை.

**மக்களின் பங்கு என்ன?**

ஓய்வு பெற்ற சில ராணுவ அதிகாரிகள் நம்முடைய நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உளவு வேலை பற்றிக் கருத்து தெரிவிக்கின்றபோது தேசப் பாதுகாப்பு என்பது அரசாங்க பொறுப்பானாலும் மக்களும் விழிப்புணர்வுடன் இருக்கும்படியான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நம்முடைய தலைவர்கள் தவறிவிட்டதாகச் சொல்கிறார்கள். உளவாளிகளின் நோக்கம், செயல்முறை ஆகியவை மக்களுக்குத் தெரிந்திருந்தால் யாருடைய நடமாட்டம் பற்றியாவது சந்தேகம் ஏற்படுகின்ற போது உரிய இடங்களுக்கு அவர்கள் தகவல் கொடுப்பது சுலபம்.

பெரும்பாலும் இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிய ரகசியங்களும் ராணுவம் பற்றிய ரகசியங்களும் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளின் மூலமாகத் தான் வெளியாகின்றன. ராணுவத்தில் பணிபுரிகின்ற அனைவரும் சந்தேகத்திற்கு இடமில்லாத நாட்டுப்பற்று கொண்டவர்களாக இருப்பது அவசியம் என்று சொல்ல வேண்டியதில்லை. ராணுவத்தில் பணிபுரியும் ஒரு சிலரே இந்தக் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள் என்றாலும், பொதுவாக ராணுவத்தில் அனைவருக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்த இவர்களது நடவடிக்கை காரணமாகி விடுகின்றன.


ராணுவத்திலிருந்து ஓய்வு பெறும் அதிகாரிகள் மூன்றாண்டுகள் வரை எந்தப் பொறுப்பினையும் வகிக்கக் கூடாது என்கிற ஒரு சட்டம் இப்போதும் அமுலில் இருக்கிறது. ஆனாலும் சிலர் மூன்றாண்டு வரையில் காத்திருந்து விட்டு அதற்குப் பிறகு ராணுவத்தளவாடங்கள் தயாரிக்கும் தனியார் நிறுவனங்களில் முக்கியமான பொறுப்புக்களில் அமர்ந்து விடுகிறார்கள். இந்த தொழில் நிறுவனங்களுக்கு ராணுவ அனுபவமுடையவர்களின் தொழில் நுணுக்க ஆலோசனைகள் தேவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக இந்த நிறுவனங்கள் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகளை ஆலோசகர்களாக நியமித்துக் கொள்வதையும் தவறு என்று சொல்லிவிட முடியாது.

வெறும் தொழில் நுணுக்க ஆலோசனைக்காக மட்டும் இந்த நிறுவனங்கள் இவர்களை வேலையில் அமர்த்திக் கொண்டால் சிக்கல் எதுவுமில்லை.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---



## வழக்கு

**பி**ரபல பொப் பாடகி பிரிட்னி ஸ்பெயர்ஸ் தனது முன்னாள் பாதுகாவலர்கள் மூவருக்கு ஊதியம் கொடுக்காமல் இழுத்தடித்து வருகின்றார் என அந்த பாதுகாப்பு அதிகாரிகள் தற்போது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

லுனீ, ரெண்ட்டி ஜோன்ஸ், ஸைலாஸ் டிவுக் ஆகிய மூவர், தங்களுக்கு 70,000 முதல் 1,00,000 பவுண்களைப் பிரிட்னி வழங்க வேண்டும் எனக் கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

பிரிட்னியுடன் தாங்கள் பணியாற்றிய காலத்தில் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டியதொரு பணியைச் செய்து வந்ததாகவும் தங்களுக்கு உணவு அருந்துவற்குக் கூட ஓய்வு கிடைப்பதில்லை என்றும் இந்தப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.


---

## குண்டு வெடிப்பு

America's G9 எனும் சஞ்சிகையின் அட்டைப் படத்தை அலங்கரித்து பிரபல நடிகை கிறிஸ்டினா எக்குயூலீராவின் புகைப்படம் ஒன்று வெளியாகி இருந்தது.

'வெட்கம் இல்லாத உலகப் புகழ் நடிகை எனப் பெயர் பெற்றுள்ள எக்குயூலீரா சாய்ந்து படுத்திருக்கும் இக்காட்சி அவரது புகழை மென்மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது என்பது நடிகையின் நம்பிக்கையாகும்.

கவர்ச்சியான மிகவும் ஒளிமயமான உடலைக் கொண்டிருப்பவர் எக்குயூலீரா! இந்த நிலையில் இவரது இந்தப் புகைப்படத்தைக் கண்டதும் பிரபல பொப்பிசைப் பாடகர் மெர்லின் மொன்றோ என்ன கூறினார் தெரியுமா?



குண்டு வெடித்த ஒரு இடத்தை நோக்கி உலக மக்கள் அனைவரதும் விழிகள் திரும்புவதைப் போல் இந்தப் புகைப்படம் அனைவரதும் பார்வையை ஈர்த்துக் கொண்டுள்ளது என்பதாகும்.

---



## ரகசியம்

**த**னது பருமனான சரீரத்தைக் குறைத்துக் கொண்டதில் தனது கணவருக்கு அதிகப் பங்குண்டு என்கிறார் விக்டோரியா பெக்கம்.

பிரபல மொடல் அழகியான பெக்கம், தனது உடல் பருமனைக் குறைத்துக் கொண்டதன் பின்னர் குழந்தைப் பெற்றுக் கொள்வதிலும் தனது மொடலிங் துறையை வளர்ப்பதிலும், கணவன் - மனைவி உறவை அழகான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் பெரிதும் வசதியாக இருப்பதாகக் கூறுகிறார்.

32 வயதுடைய பெக்கம் நான்கு குழந்தைகளின் தாய் என்றாலும் மொடலிங் உலகில் இன்னமும் கனவுக் கன்னியாக வலம் வருவதன் ரகசியம் இதுதான்!

---

## தாய்ப்பாசம்

**பி**ரபல நடிகை லின்ட்சே லொஹான் A Praire Home Companion எனும் திரைப்படத்தில் நான்கு குழந்தைகளின் தாயாக வேடமேற்று நடித்துள்ளார்.

இவரது நடிப்பு - இளைஞர், யுவதிகளிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

கவர்ச்சித் தாரகையாகக் கண்களுக்கு விருந்து படைத்தவர் நான்கு குழந்தைகளின் தாயாக வந்ததும் பூகம்பம் ஏற்பட்டு விட்டதாம்! என்றாலும் இதையெல்லாம் பெரிதுபடுத்திக் கொள்ளாத லின்ட்சே லொஹான் இந்தத் திரைப்படத்தில் எனது நான்கு குழந்தைகளுக்கு நான் எவ்வாறு அன்பு செலுத்தினேனோ அதே போன்று தனது இரசிகர்களுக்கும் அன்பு செலுத்துவதாகக் கூறியுள்ளார்.



# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் : 24.03.1961 தாயக மண்ணில் : 11.09.1997




## தம்பிராசா வடிவேல்
## (தோழர் ராஜு )

தோழனே எங்களை விட்டு பிரிந்து ஒன்பது ஆண்டுகளா? நம்பமுடியவில்லை. நாம் விடும் இடைவெளியே எதிரிக்கு வாய்ப்பளிக்கும் இப்படி எப்போதும் விழிப்பூட்டும் உன் நினைவுகளை என்றும் சுமக்கிறோம். உடலால் உங்களைச் சாய்த்தாலும் உணர்வுகளால் எங்களோடு பயணிக்கிறாய்.


-உன் பிரிவால் துயருறும் தோழர்கள்.

# ஈராண்டு நீங்காத நினைவுகளில்...



**மாயவன் சந்திரமோகன்**
**(தோழர் அருள்தாஸ்)**

மண்ணின் மடியில் : 26.05.1976
மக்கள் மனதில் : 11.09.2004



**தம்பித்துரை சிவகுமாரன்**
**(தோழர் பவான்)**

மண்ணின் மடியில் : 16.04.1963
மக்கள் மனதில் : 18.09.2004



**சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம்**
**(தோழர் சிங்கம்)**

மண்ணின் மடியில் : 21.05.1965
மக்கள் மனதில் : 23.09.2004

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த சமாதான காலத்தில், புலிகளின் பாசிஸத்துக்கு இரையாக்கப்பட்ட எங்கள் பாசமிகு தோழர்களுக்கு எமது வீர மரியாதையைச் செலுத்துகின்றோம். மக்கள் பணியை தமது உயிர் நாடியாகவும், நியாயத்தை தமது உயர்ந்த இலட்சியமாகவும் கொண்டு அநீதிகளைக் கண்டு வெகுண்டெழும் குணம் படைத்த எம் தோழர்களின் பூவுடலை பாசிஸ புலிகள் சுட்டுச் சரிக்கலாம். ஆனால், அவர்களின் கொள்கைகளை அல்ல. சமாதான காலத்திலும் புலிகள் தமது கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக் கொண்டோரைப் படுகொலை செய்வது என்பது கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளும் பக்குவம் இன்னும் புலிகளுக்கு ஏற்படவில்லை என்பதையும், புலிகள் ஒரு நாளும் ஜனநாயக வழிமுறைக்கு வரத் தயார் இல்லை என்பதையுமே, புலிகளினால் இந்தச் சமாதான காலத்தில் வரிசையாகக் கொல்லப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தோழர்களின் படுகொலைகள் சர்வதேசத்துக்கு உணர்த்தி நிற்கின்றன. எம் இனிய தோழர்கள் எம்மை விட்டு மறைந்து போனாலும் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பணிகளை முன்னெடுத்துச் செல்ல தோழர்களாகிய நாங்கள் அர்ப்பணிப்போடு செயற்படுவோம். அவர்கள் கண்ட கனவினை நிறைவு செய்வோம் என்ற நம்பிக்கையும் உறுதியும் என்றென்றும் எமக்கு உண்டு. தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்! என்றும் நாம் மக்களுக்காக!


## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



கலகத் தரக்கர் பலர், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

- சுப்பிரமணிய பாரதியார்

## நந்தினி தூங்கினா நீ தூங்கணும்!



முன்னொரு காலத்தில் திலீபன் என்ற மன்னன் ஒரு நாட்டை ஆண்டு வந்தான். வீரமும் புகழும் பெற்ற அவன், குழந்தைப் பேறு இல்லாமல் மிகவும் வருந்தினான். வசிட்ட முனிவரிடம் சென்று முறையிட்டான்.

"திலீபா! ஒரு சாபத்தால் உனக்குக் குழந்தை இல்லாமல் உள்ளது," என்றார்.

உடனே பதற்றமடைந்த திலீபன், "சுவாமி! நான் யாருக்கும் எந்தத் தீங்கும் புரியவில்லையே...எனக்கு யார் சாபமிட்டது?" என்று வினவினான்.

"திலீபா! நீ ஒரு சமயம் தேவலோகம் சென்ற போது உன் எதிரில் வந்த காமதேனு பசுவை அவசரத்தில் நீ வணங்காமல் இருந்துவிட்டாய். நீ வேண்டுமென்றே அவமதித்ததாகக் கோபம் கொண்டு உனக்குக் குழந்தையே பிறக்கக்கூடாது என்று சாபம் தந்தது அந்தப் பசு," என்று நடந்ததைச் சொன்னார் முனிவர்.

"குழந்தையில்லாமல் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏது சுவாமி? நீங்கள் தான் எனக்கு நல்வழி காட்ட வேண்டும்," என்று வசிட்ட முனிவரிடம் வேண்டினான் திலீபன்.

"திலீபா! அந்தக் காமதேனுவின் கன்றாகிய நந்தினி இங்குதான் உள்ளது. அதன் மனம் மகிழ்ச்சியடைந்தால், அதனுடைய தாயாகிய காமதேனுவின் உள்ளம் மகிழும். "உன் சாபமும் நீங்கும்," என்றார் வசிட்ட முனிவர்.

"சுவாமி! நந்தினியை வழிபடும் முறைகளைக் கூறுங்கள்!" என்றான் திலீபன்.

**பாப்பா முரசு சிறுகதை**


"காமம் போன்ற அழுக்குகளைத் துறக்க வேண்டும். காய்கனிகளை மட்டும் உண்ண வேண்டும். மனத் தூய்மையுடன் அதனை வழிபட வேண்டும். நந்தினி நின்றால் நீயும் நிற்க வேண்டும்...அது நடந்தால் நீயும் நடக்க வேண்டும். அது தூங்கும் போது நீயும் தூங்க வேண்டும்," என்றார் வசிட்டர். அவர் கூறியபடியே திலீபன் நடந்தான். நந்தினியை வழிபட்டுக் கொண்டு அதன்பின் சென்றான். கடமையில் கண்ணாக இருந்தான். அவ்வாறே இருபத்தியொரு நாட்கள் சென்றன. திலீபனின் அன்பைச் சோதிக்க எண்ணியது நந்தினி. அது மேய்ந்து கொண்டே அருகிலுள்ள காட்டிற்குள் நுழைந்தது. திலீபனும் பின் தொடர்ந்தான். திடீரென்று அங்கு வந்த சிங்கம் ஒன்று கர்ச்சனை செய்தபடி நந்தினியின் மேல் பாயத் தயாரானது. நந்தினி அஞ்சி நடுங்கியது. இதனைக் கண்ட திலீபன் தன் இடைவாளை உருவ முயன்றான். அவனால் வாளை எடுக்க முடியவில்லை.

திகைத்த அவன், "சிங்கமே! இந்தக் கன்றை எதுவும் செய்ய வேண்டாம். அதற்குப் பதில் என்னை உண்டு பசியாறு," என்று வேண்டினான். உடனே அந்தச் சிங்கம் அங்கிருந்து மறைந்தது. நடந்தது எல்லாம் மாயக் காட்சிகள் என்று திலீபனுக்குப் புரிந்தது. நந்தினி அவனைப் பார்த்து, "உனது பேரன்பைக் கண்டு வியந்தேன். உனது எண்ணம் நிறைவேறும். சென்று வா!" என்று வாழ்த்தியது.

திலீபன் மகிழ்ச்சியுடன் அரண்மனை திரும்பினான். அடுத்த ஆண்டே அவனுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

நீதி : குழந்தைகளே! சாபம் மிகப் பொல்லாதது. தேவையில்லாமல் பிறரது சாபத்தைப் பெறுவது தவறு. எனவே, எப்போதும் நல்லதே செய்யுங்கள். நலமுடன் வாழுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.09.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 662**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 660

**பரிசுக்குரியவர்:**
**ந. நாவலன், தி/இ/கி/ச. ஸ்ரீகோணேஸ்வரா, இந்து கல்லூரி இல.01, சினேக் வீதி, திருகோணமலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எப். மசிபா மவ்ஜூட், B-14 1/7, சொய்சாபுர, மொரட்டுவ. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்த. | எம். தேவ மனோஜினி, இல. 31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. |
| அப்துல் மாஜித், தரம் 3A, அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு - 12 | டி. ஆர். ஜெனிங் டிவின்சன், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15 |
| எம். சிந்துஜா, 35/4, பிரஜா சேவா, மண்டல மாவத்த பெரியமுள்ளை, நீர்கொழும்பு. | கே. பிரசாந்தி, 89, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| றிஷ்மா, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15 | நூருள் ஹிதாயா, கே/பல்கும்புர முஸ்லிம் வித்தியாலயம், பல்கும்புர, வெரலகம. |

## ஆத்திசூடி

### தந்தை தாய் பேண்!


நீ உன்னை ஈன்ற தாய் தந்தையரை அவர்களுக்கு இயலாத காலத்தில் போற்றி ஆதரித்து வேண்டுவன செய்.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## அகிலம் உன்னை வணங்கிடுமே!


காலையில் சீக்கிரம்
எழுந்திடுவாய்
காலைக் கடன்களை
முடித்திடுவாய்
குளிர்ந்த நீரில் குளித்திடுவாய்
துய உடைகளை உடுத்திடுவாய்.
பாதையின் ஓரம் நடந்திடுவாய்
பள்ளிக்கூடம் சென்றிடுவாய்
பாடங்களை நன்கு படித்திடுவாய்
- நல்ல
பண்புகளைப் பெற்றிடுவாய்.
நல்லவரோடு பழகிடுவாய்
நானிலம் போற்ற வாழ்ந்திடுவாய்
சொல்லில் உண்மை பேசிடுவாய்
சோம்பலைத் தூர விலக்கிடுவாய்.
ஆசிரியர் சொல்படி நடந்திடுவாய்



அறிவை நீயும் கற்றிடுவாய்
அன்னை தந்தை வணங்கிடுவாய்
அகிலம் உன்னை வணங்கிடுமே!

## அதிசய உலகம்

### சிங்கம் தோற்கும்




வரிக் குதிரையானது தனது பலம் வாய்ந்த பின்னங் கால்களினால் தன்னைத் தாக்க வரும் சிங்கத்தை உதைத்துத் தள்ளிவிடும். ஆபிரிக்க மானும், காட்டு எருமையும் கூட தங்களது கூரிய கொம்புகளால் சிங்கத்தைத் தாக்கும். ஒட்டகச் சிவிங்கியும் சிங்கத்தைத் தனது பின்னங்கால்களால் உதைத்துத் தாக்கும்.

### எலிக்காது வௌவால்கள்!

எலிக்காது வௌவால்கள் அதிகம் காணப்படுவது ஐரோப்பா கண்டத்தில்.

குட்டிகள் பிறந்து சில நாட்கள் வரை, தாய் இரை தேடச் செல்லும்போது குட்டியைச் சுமந்து செல்கின்றன. குட்டி வளர்ச்சியடைந்ததும் தாய், தனது இருப்பிடத்திலேயே தலை கீழாகத் தொங்கவிட்டுச் சென்று விடும். அதன் பிறகு குட்டிதான் இரைக்காக தனியே பறக்க வேண்டும்.



## சில விடுகதைகள்

1. ஏழு வண்ணங்களில் எப்போதாவது காட்சி தருவான் - அவன் யார்?
2. சிரித்தவனை அழ வைத்த சின்னப்பொண்ணு - அவள் யார்?
3. கயிற்றில் சுற்றி விட்டால் ஓயும்வரை ஆடுவான் - அவன் யார்?
4. சின்னக்கத்தி சிங்காரக்கத்தி கைக்குள்ளே வளரும் கத்தி - அவன் யார்?
5. ஆட்டத்தில் அசத்துபவள் அலற வைப்பாள் பாம்பை மட்டும் - அவள் யார்?
6. அடிபட்டவன் அழுதால் ஆனந்தக் கொண்டாட்டம் - அவன் யார்?
7. ஒற்றைக்காலில் நின்றபடி காலில்லாதவனை வேட்டையாடுவான் - அவன் யார்?
8. ஊசி முனையில் ஒய்யார சங்கீதம் -அது என்ன?
9. தண்ணீருக்குக் - கொதித்தவன் வாயை ரத்தமாக்கினான் - அவன் யார்?
10. பாட்டுப் பாடியவன் பலவானின் வாய்க்குள் - அவன் யார்?

**விடைகள்**
1. வானவில்
2. வெங்காயம்
3. பம்பரம்
4. நகம்
5. மயில்
6. மத்தளம்
7. கொக்கு - மீன்
8. இசைத்தட்டு
9. வெற்றிலை பாக்குடன் சேர்க்கப்படும் சுண்ணாம்பு
10. தவளை.




## தோற்றுப் போன சாதனை



**நீருக்குள்** அமிழ்ந்து நீண்டநேரம் மூச்சைத் 'தம்'பிடித்து ஏற்படுத்தப்பட்ட உலக சாதனையை முறியடிக்கும் முயற்சியில் தோற்றுப் போன டேவிட் பிளெய்ன் என்பவர் நீருக்குள் மூச்சுப்பிடித்து அமிழ்ந்திருப்பதை படம் காட்டுகிறது. தோல்வியைக் கூடச் சகித்துக் கொள்ளும் இந்த மனிதர் அபூர்வமானவர்தான். ஏற்கனவே ஒன்பது நிமிடங்கள் நீருக்குள்ளிருந்து ஒருவர் ஏற்படுத்திய உலக சாதனையை முறியடிப்பதற்காக டேவிட் பிளெய்ன் நியூயோர்க்கில் 2006ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் திகதி இந்த முயற்சியை மேற்கொண்டார். ஆனால் ஏழு நிமிடங்கள் எட்டு செக்கன்களுக்கு மேல் அவரால் நீருக்குள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இவரது சாதனை முயற்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர் நீருக்குள் தத்தளிப்பதைக் கண்டதும் அவரை வெளியே இழுத்தெடுத்து, அவரை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றி விட்டார்கள்.

## உ... உ... உ... உயர்ந்தவர்

**உலகிலேயே** மிக உயரமான மனிதன் சீனாவில் வாழ்கிறார். ச்சீசுன் என்ற பெயர் கொண்ட இந்த நபர் 1951ஆம் ஆண்டு சீனாவில் பிறந்தார். இவரது உயரம் 2.36 மீற்றர்களாகும். அதாவது 7 அடி 8.95 அங்குல உயரமுடையவர். சீனாவின் மொங்கோலியாவிலுள்ள சீபெங் நகர ஆஸ்பத்திரியில் கடந்த வருடம் ஜனவரி மாதம் 15ஆம் திகதி இவரது உயரம் உத்தியோகபூர்வமாக அளவிடப்பட்டது. சீனாவுக்கு வெளியே இவர் முதல் தடவையாக 2005ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் விஜயம் மேற்கொண்டார். அதாவது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தை வெளியிடும் லண்டன் அலுவலகத்துக்கு மேற்கொண்ட விஜயமே இவரது முதலாவது வெளிநாட்டுப் பயணமாகும்.



## உயரமான சுவர்




**உலகிலேயே** மிக உயரமான சுவர் 96 அடி ஆறு அங்குலம் கொண்டது. அமெரிக்காவின் தென் புளோரிடா மாநிலத்திலுள்ள செமினோல் ஹார்ட்ரொக் ஹோட்டல் அன்ட் கெசினோ என்ற வாகனங்கள் நிறுத்தும் பகுதியிலேயே இந்த சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இந்தச் சுவரின் அகலம் சில பகுதிகளில் 6 அடியாகவும் இன்னும் சில பகுதிகளில் 12 அடியாகவும் உள்ளது. ஓர் இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் இறாத்தல் கொங்கிரீட் இதன் நிர்மாண வேலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னைய அதி உயரமான சுவரை விட இது 5 அடி உயரம் கூடியது.

## உறைந்த உடல்

**ஐயாயிரம்** ஆண்டுகளுக்கு முந்திய மனிதன் ஒருவனின் சடலப் பகுதிகள் தைரொலின் அல்ப்ஸ் மலைப்பகுதியில் 1991ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்தாலிய ஒஸ்ரிய எல்லைப்பகுதியிலுள்ள மலையின் பனிப்படலத்தில் இச் சடலச் சிதைவுகளை மலையேறும் இருவர் கண்டுபிடித்தனர். 1300 வருடங்களுக்கு முன்னர் இந்த மனிதர் இறந்திருக்கலாமென்று கருதப்படுகிறது. இந்த மனிதர் பூர்வீக மனிதப் பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்கலாமென்றும் மத்திய ஐரோப்பாவின் பழைமை வாய்ந்த தொழில்நுட்ப மற்றும் கலாசார விடயங்களைக் கண்டறிய இச் சடலச் சிதைவுகள் உதவலாமென்றும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.




## கையெழுத்து வேட்டை





**கிட்டார்** என்றழைக்கப்படும் சர்வசாதாரண இசைக் கருவியொன்று 28 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போயிருக்கிறது. இலங்கை ரூபா பெறுமதியில் 30 கோடி ரூபா. இந்த கிட்டார் ஏலவிற்பனையை நடத்தியவர் புகழ்பெற்ற கனடியப் பாடகரும் இசையமைப்பாளருமான பிரையன் அடம்ஸ் சுனாமியில் பாதிக்கப்பட்ட ஆசிய மக்களுக்குக் குறிப்பாகப் பாடசாலை சிறுவர்களுக்கு உதவுவதற்காக நிதி சேகரிக்கும் முயற்சியாக இந்த ஏல விற்பனை நடத்தப்பட்டது. இதனைக் கொள்வனவு செய்தவர் கட்டார் நாட்டின் முடிக்குரிய இளவரசியான ஷேய்க்கா மியஸ்ஸா அல் தானி என்பவர். இவர் ஆசியாவில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வரும் தொண்டர் அமைப்பொன்றின் தலைவியுமாவார். இந்த ஏல விற்பனையையொட்டி டோகாவிலுள்ள ரிற்ஸ் கார்ல்ரன் ஹோட்டலில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன், நடிகர் ஜெற் லீ உட்படப் பல பிரபலங்களும் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் 2004 ஜூன் 24 ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெற்ற டொலர்களுக்கு விலை போன கிட்டாரே சாதனை படைத்திருந்தது. விசேஷம் என்னவென்று கேட்கிறீர்களா? ஒன்றுமில்லை. உலகப் புகழ் பெற்ற இசை வல்லுநர்கள் அந்த கிட்டாரில் தமது கையெழுத்துக்களை வைத்திருந்தனர்.

சூர்யா - ஜோதிகா திருமணக் காட்சிகள்











முகப்பில் : சூர்யா - பூமிகா



## ராமராஜன் புதுப்படம்

ராமராஜன் நீண்ட இடை வெளிக்குப்பின் 'சொந்த ஊரு சோழவந்தான்' என்ற படத்தை இயக்கி நடிக்கிறார். இந்தப் படத்துக்குக் கதாநாயகி தேடுகிறார்.

சினேகா நாயகியாக நடித்தால் பொருத்தமாக இருக்கும் என்று பலர் யோசனை சொன்னார்களாம். சினேகாவின் கால்ஷீட் வாங்க முயற்சி நடக்கிறது. அவர் நடிப்பாரா? மறுப்பாரா?

## சிம்பு - ரீமாசென் மீண்டும் நடனம்

'வல்லவன்' படப்பிடிப்பில் சிம்புவுடன் ரீமாசென் சண்டை போட்டு நடிக்காமல் மும்பை பறந்தது பழைய செய்தி. படுகவர்ச்சியான ஆடையை அணியும்படி ரீமா சென்னை சிம்பு வற்புறுத்தியதால் இந்தத் தகராறு ஏற்பட்டது.

பின்னர் சமரசம் செய்து இரண்டு பேரையும் நட்பாக்கி மீண்டும் படப்பிடிப்பு நடத்தி முடித்தனர்.

இப்போது வல்லவனில் ஒரு குத்துப் பாட்டைச் சேர்க்க முடிவாகியுள்ளதாம்.

இதில் சிம்புவும் ரீமாசென்னும் மீண்டும் ஆடுகிறார்கள்.

## தேர்தல் விளம்பரத்தில் நடித்தவர் நாயகன்

சட்டமன்றத் தேர்தலின் போது 'உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்க' என்ற டி.வி.விளம்பரத்தில் நடித்த யோஹாவுக்கு 'மறந்தேன் மெய்மறந்தேன்' படத்தில் கதாநாயகன் வாய்ப்புக் கிடைத்துள்ளது. விளம்பரத்தைப் பார்த்த இயக்குநர் சிவராமன் இவரை இப்படத்தில் ஒப்பந்தம் செய்துள்ளார். இவருக்கு ஜோடியாக ஸ்ரேயா ரெட்டி நடிக்கிறார். யோஹா என்ஜினீயரிங் படித்துள்ளார். கிக்பாக்ஸிங், கலரி சண்டை, பரதநாட்டியமும் தெரியும். மேற்கத்திய நடனத்தில் டிகிரி வாங்கியுள்ளார். வாட்டசாட்டமான இவர், படத்தில் சிலிண்டரைத் தூக்கி உடற்பயிற்சி செய்வதும் 60க்கும் மேற்பட்ட சிலிண்டர்களை ஒரே ஆளாக லாரியில் ஏற்றுவதும் பேசப்படுமாம். ஏற்கனவே '19 ரெவலூஷன்ஸ்' என்ற ஆங்கிலப் படத்தில் நடித்துள்ளார்.

# பரத் பேட்டி

இயக்குநர் ஷங்கரின் 'பாய்ஸ்' படத்தின் மூலம் நான்கைந்து பையன்களில் ஒருவராக அறிமுகமாகி காதல், 4 ஸ்டூடன்ஸ், 'செல்லமே' பட்டியல் ஆகிய வெற்றிப் படங்களின் மூலம் இளம் முன்னணி நாயகர்கள் வரிசையில் இடம் பிடித்திருப்பவர் பரத்.

இவரது, வெற்றிப்பட வரிசையில் சமீபத்தில் ரிலீஸாகி, ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவை, பெற்றிருக்கும் 'எம்(டன்)'மகன்' படமும் முக்கிய இடம் பிடித்திருக்கும் வேளையில் பரத்தை பேட்டி கண்டோம்...

இடையில் பெப்ரவரி 14 போன்ற படங்களின் தோல்வியைச் சந்தித்திருந்தாலும், காதல், செல்லமே, பட்டியல், எம்(டன் மகன் ஆகிய படங்களின் அடுத்தடுத்த வெற்றியால் சந்தோஷத்தின் உச்சத்தில் இருக்கும் பரத், இனி நம் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார்...

**பரத், 'எம்(டன்) மகன்'வெற்றியை எதிர்பார்த்தீர்களா?**

இந்தப் படத்தின் கதையை இயக்குனர் 'மெட்டி ஒலி' திருமுருகன் என்னிடம் கூறிய பொழுதே எதிர்பார்த்தேன். ஒரு கண்டிப்பான அப்பாவிற்கும், அவரது கட்டளைக்கு கீழ்படியும் மகனுக்கும் இடையில் ஒரு எதிர்பாரா சந்தர்ப்பத்தில் ஏற்படும் பாசப்போராட்டம்தான் எம்(டன்) மகன் படத்தின் கதை என்பதால் இந்தக் கதை 5 முதல் 60 வயது வரை அனைத்து தரப்பினரையும் கவரும் என்று எதிர்பார்த்தேன்.

**கடைசி நேரத்தில், எம்டன் மகன், எம்மகன் என டைட்டில் மாறியது குறித்து பரத்தின் கருத்து...?**

தமிழ்ப் படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டினால்...தமிழக அரசின் 15 சத விகித கேளிக்கை வரி ரத்து ஆகும் என்பதற்காக இந்த பெயர் மாற்றம். 'எம்மகன்' எனும் டைட்டிலும் இந்தப் படத்திற்கு பொருத்தமானதே என்பதால் எம்டனை 'எம்' ஆக்கிவிட்டோம்.

**பரத், நிஜத்தில் தங்களது தந்தை எப்படி? 'எம்(டன்) மகன்' நாசர் மாதிரிதானா? அல்லது..?**

ஐய்யய்யோ, என் தந்தை எனக்கு ஃபுல் ஃப்ரீடம் கொடுத்து வளர்த்தவர். 'சிட்டி பேஸ்டு' பையனாக முழுக்க, முழுக்க சிட்டியில் செல்லமாக வளர்ந்தவன் நான். எம்(டன்) மகன் படத்தில் ஒரு சர்வாதிகாரி அப்பாவிற்குப் பயந்து நடுங்கும் பிள்ளையாக, அதுவும் கிராமத்து இளைஞனாக தத்ரூபமாக நடித்திருப்பதைப் பார்த்து பாராட்டாதவர்களே இல்லை எனலாம். நான் இந்தப் படத்தில் நாசர், வடிவேலு, சரண்யா போன்றவர்களுடன் போட்டி போட்டு நடித்திருக்கிறேன் என்றால்...அதற்கு முழுமுதற்காரணமும் இயக்குநர் திருமுருகனையே சாரும்.

**பரத், தங்களது வயது தற்பொழுது என்ன? பரத்தின் திருமணம் காதல் திருமணமா, அல்லது...?**

எனக்கு 22 வயசுதான் ஆகுது. அதனால நான் இன்னும் திருமணத்தைப் பற்றி முடிவு செய்யவில்லை. ஆனால் நிச்சயமாக என் திருமணம் காதல் திருமணமாகத்தான் இருக்கும்.

**கோபிகா, சந்தியா...இப்படி, நடிகைகள் யாரையும் மனதில் நினைத்திருக்கிறீர்களா பரத்? 'எம்(டன்) மகன்' படத்தில் கோபிகாவுடன் காதல் காட்சிகளில் நடித்தது எப்படியிருந்தது?**

நிச்சயமாக இல்லை... லவ் மேரேஜ் என்பதை மட்டுமே முடிவு செய்துள்ளேன். காதல் படத்தில் சந்தியாவுடன் நடித்தது போன்றுதான், 'எம்(டன்) மகன்' படத்தில் கோபிகாவுடன் இணைந்து நடித்தேன். அது போன்றே இதுவும் நன்றாக வந்திருக்கிறது. காதல் காட்சிகளில் நடிப்பது யாருக்குத்தான் போரடிக்கும்..?! இவ்வாறு கூறினார்.



நான் கடவுள் ஆர்யா








# 'ஜோ'வுக்கு தடா

கடந்த 11.09.06 அன்று திருமண விழா கண்ட ஜோதிகாவும் சூர்யாவும் 12.09.06 பத்திரிகையாளர்களை சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் சந்தித்தனர்.

அப்பொழுது பத்திரிகையாளர்களிடம் பேசிய சூர்யா, இனி தன் மனைவி ஜோதிகா சினிமாவில் நடிக்கப் போவதில்லை...எனும் தகவலை தெரிவித்தார். மேலும் அவர் தானும், ஜோதிகாவும் ஹனிமூனுக்காக ஐரோப்பா செல்ல இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது பற்றிய விபரம் வருமாறு :-

11.09.06 அன்று தமிழக முன்னாள், இந்நாள் முதல்வர்கள் உள்ளிட்ட வி.ஐ.பி.கள் கலந்துகொள்ள திருமணவிழா கண்ட தமிழகத்தின் பிரபல சினிமா நட்சத்திரங்கள் ஜோதிகாவும் - சூர்யாவும் நன்றி தெரிவிக்கும் விதமாகப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

அப்பொழுது, சூர்யாவிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும்...இங்கு உங்களுக்காக...

♥ **இனி, ஜோதிகா நடிப்பாரா?**

இப்போதைக்கு அவருக்கு நடிக்கும் எண்ணமில்லை...

♥ **ஜோதிகா இனி, உங்களுக்குக் காஸ்டியூம் டிசைனராகப் பணிபுரியவுள்ளாராமே, நிஜமா சூர்யா...?**

அதைவிட சூப்பரான ஒரு போஸ்ட் அவருக்குக் கிடைத்திருக்கிறது. அதுதான் என் மனைவி எனும் போஸ்ட்.

♥ **தனியாக வீடு கட்டியிருப்பதாகவும், தனிக்குடித்தனம் போக இருப்பதாகவும் வரும் செய்திகள் குறித்து...?**

எங்க வீட்டிலேயே அப்பா, அம்மா, தம்பி எல்லோருடனும் கூட்டுக் குடித்தனம்தான் செய்ய இருக்கிறோம். எங்க வீட்டு மாடியிலேயே ஒரு அறை ரெடியாயிட்டிருக்கு... மத்தபடி தனிக்குடித்தனம் எல்லாம் எதுவுமில்லை. (பலத்த சிரிப்பு...)

♥ **ஹனிமூன் எங்கு? எப்பொழுது போகிறீர்கள்...?**

ஐரோப்பா செல்கிறோம்.

எத்தனை நாள்...?


திரும்பி வந்து நிறைய வேலை பார்க்க வேண்டியிருப்பதால் கூடிய விரைவில் கொஞ்சமே கொஞ்ச நாள் எங்களது ஹனிமூன் ட்ரிப் இருக்கும் - என்றார் சூர்யா.

♥ **அப்பொழுது, ஜோதிகா எதுவும் பேசமாட்டாரா? எனப் பத்திரிகையாளர்கள் கேட்டனர்.**

அதற்கு ஜோதிகா 'நான் மிகவும் சந்தோசத்தில் இருக்கிறேன். அதனால் நிறையப் பேச முடியவில்லை. இனி சூர்யாவின் விருப்பமே என் விருப்பம்...எல்லோருக்கும் நன்றி' என்றார்.

இந்த பேட்டியின் போது சூர்யாவின் தந்தை நடிகர் சிவகுமார், சகோதரர் கார்த்தி ஆகியோரும் உடனிருந்தனர்.









சூர்யா - ஜோதிகா திருமணக் காட்சிகள்

## புதுமுக தயாரிப்பாளர்கள்

கோடம்பாக்கத்துக்கு புதுமுக தயாரிப்பாளர்கள் வருகை அதிகரித்துள்ளது. சத்யராஜ், குஷ்பு நடிக்கும் பெரியார் படத்தை எடுப்பது புதுமுகத் தயாரிப்பாளர்கள்.

பாரதிராஜா இயக்கும் 'பொம்மலாட்டம்', வெவ்வேறு டைரக்டர்கள் இயக்கத்தில் உருவாகிவரும் தொடக்கம், லெவன், அழகான பொண்ணுதான், பிறகு, மாயா, ஆடுபுலி ஆட்டம், செங்காத்து ஆகிய படங்களையும் புதுமுக தயாரிப்பாளர்கள்தான் எடுக்கிறார்கள். இவர்களைத் தவிர, திரைப்படத்துறையைச் சேர்ந்த இயக்குநர் லிங்குசாமி, சத்யராஜ், மோகன்ராஜா, ஹரிக்குமார் ஆகியோரும் தயாரிப்பாளராகியுள்ளனர்.

## த்ரிஷாவின் அரசியல் ஆசை!


'நம்பர் ஒன்' நடிகை த்ரிஷாவிற்கு, பின்னாளில் அரசியலில் குதிக்கும் ஐடியா ஏதும் இருக்கும் போலும். இல்லையென்றால், சமீபத்தில் தன் இரசிகர் மன்றத்தை, நற்பணி மன்றமாக அறிவித்து, அதற்கென்று ஒரு கொடி, குச்சி...எல்லாம் நட்டு மீடியாக்களை தன் பக்கம் திருப்பியவர், இப்பொழுது இரண்டு நாட்களுக்கு முன், சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் உள்ள குழந்தைகளுக்கு மதிய விருந்து அளித்து அசத்துவாரா...? திடீர் விஜயமாக த்ரிஷா புற்று நோய் ஹாஸ்பிடலுக்குப் போயிருக்கிறார். அங்கு, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், த்ரிஷாவுக்கு மலர் கொத்து கொடுத்து வாழ்த்தினர். அவர்களுக்கு பொம்மைகளைப் பரிசளித்தார் த்ரிஷா. இவை எல்லாம் த்ரிஷாவின் திட்டமிட்ட ஏற்பாட்டின்படியே நடந்துள்ளது. ஆனால் அம்மணி இவ்வாறு கூறிவருகிறார்...எவ்வாறு...? 'புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளோடு சில மணி நேரம் இருக்க வேண்டும் என்ற எனது ஆசை நிறைவேறி இருக்கிறது. எனது ரசிகர் மன்றத்தினர் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளனர். மேலும் கண்தானம், உடல்தானம் செய்யும் ஆசையும் உள்ளது' என்றும் கூறிவரும் த்ரிஷா, தனக்கு அரசியல் ஆசை இருப்பதை மட்டும் சொல்லிக் கொள்வதே இல்லை! ஆனால், இது மாதிரி நடவடிக்கைகள் அவருக்கு 'அந்த' ஆசை இருப்பதையே உறுதி செய்கின்றன! அடே!!




## குருதிச் சிந்துதலுடன் தேசம்

கண் சிமிட்டலின்
பொழுதினில்
பொசிங்கிடும் மனிதம் எத்தனை
எம் தேசத்தின் மீது

வீணை மீட்டும் விரல்கள்
ஸ்வரங்களாய் தெறிபட
இசையை விழுங்கும்
செவிப்பறை
குருதிச் சிந்துதலுடன்
தேசம்



போக்கிரியின்
அதிர்வில் அதர்மம்
நீள்கையில் தர்மம் கூனிக்குறுகிய படி

கொக்குகள் பால் வண்ணமென
நா விழிகளின் ரசனையில்
நேற்றைய வாழ்தல்

முறிவான வாழ்தலின்
பொழுதுகளில்
இன்று
செங்குருதி சகதியே
காணக்கிட்டும்

ஒரு யுகத்தின்
சுமை கொண்டு
இரவுகள்
அல்லோலப்பட்டு விடியும்


இப்படித்தான்
நம் தாயகத்தில்
எமதின் ஜீவிதம்
முறிகிறது...!

*—கிண்ணியா,*
*ஜே.பிரோஸ்கான்.*

## உதாசீனமானவன்

நுதலுக்கு மேல்
ஒரு பாலைவனப் பிரதேசம்
பிறப்பெடுக்கிறது.

புயலைச் சுவாசித்த
நுரையீரல்
தென்றலோடும்
போராடுகின்றது.



கேட்கும் நரம்புகளுக்கு
என்ன கேடு வந்ததோ?
இடி முழக்கம் கூட
கேட்பதாக இல்லை!

இரு விழிகளும் ஒளியிழந்து
காணும் காட்சிகள்
மங்கலாக...

இரவுகள் ஒவ்வொன்றிலும்
என் இளமை
இல்லாமல் போக
உறவுகளுக்கு சுமையானேன்.

நாழிகைகள் நகர
புள்ளிவிபரத்தில்
நானும் இணைவேன்
முதியோர் இல்லத்தில்
முதியவர்கள்
அமோக வளர்ச்சி!



*—து.செல்வகுமார்,*
*தர்காநகர்.*

## இளவரசனின் மரணமும் பேடிகளும்

நிசப்தத்தை சப்பி
இருளின் முகத்தில் - காறி
உமிழ்ந்து விட்டு
ஓடிக்கொண்டிருந்தது இரவு
உயிர்களைத் துரத்திய படியே...!

பட்டுப் போன பனைமரங்கள்
அணிவகுத்து நிற்கும் - அந்தப்
பாழும் வெளியில் வைத்துத்தான்
அவனைக் கொன்றிருக்க வேண்டும்.

இழுத்து வந்து தெருவில்
போட்டிருந்தார்கள்.

ஒரு காலத்தில் இளவரசனாக
இருந்து - அவன்
பாடல்கள் பாடியதைக் கூறி,
தாய் அழுதுகொண்டிருந்தாள்.

மார்பில் புதைந்திருந்த
குண்டினைப் பார்த்து,
உண்மையென்றே உணர்ந்து
கொண்டேன்.

இறந்துபோன இளவரசனைச் சுற்றி
ஏராளம் பேர்கள்
அவன் சட்டைப் பொத்தானில்
கொப்பிப் பேப்பரில் எழுதி
ஒரு சீட்டு...
'துரோகி' என்று.

இப்போது அவனுக்குத் துணையாக
எவருமே இல்லை.
அழுது களைத்துப் போன
அவன் தாயைத் தவிர.

உயிரைக் கால்களுக்கிடையில்
ஒளித்துக் கொண்டு - எல்லாப்
பேடிகளும்,
ஓடிப்போய் இருந்தார்கள்.

*—வை.சாரங்கன்,*
*யாழ்ப்பாணம்.*



## துரோகம்

கைகள் நடுங்குகிறது
கண்ணீர் சொரிகிறது
வார்த்தைகள் வாதாடுகிறது
வாலிபனே! உன்
வஞ்சகம் என்னை
வாட்டுகிறது...

காதல் வார்த்தைகளில்
கனிவைத் தந்த
கயவனே...!
கண் மூடும் போதெல்லாம்
கவலைப் படுவேன்
என்பாயே!...
கண் விழிக்கும் போதெல்லாம்
கவர்ச்சி என்பாயே!...
எல்லாம் கானல் நீரான
வார்த்தைகளா?
கண்கள் சொல்லும்
வார்த்தைகளில் களவாடிய
என்னை - காதலின்
துரோகத்தால்
தொலைவாக்கி விட்டாயே!...

*—ம.ராசிதா,*
*முதலியார்குளம்.*

## தோற்றங்கள்

ஊரை விழுங்கிய இரவுக்குள்
மௌனம் சயனித்தபடி
நிலவு சுமக்கும் மேகம்
வானில் தொங்குகிறது!

கோபம் தணிந்த குழந்தை மனமாக
ஆர்ப்பரிக்கும் கடல் மெள்ள மெள்ள
அடங்கி
அமைதி காண்கிறது!

நிசப்த பொழுதுகளில்
கரையும்
சில் வண்டுகளின் ரீங்காரம்
செவியைத் துளைக்கிறது!

உஷ்ணத்தை அணைக்கும்
ஈரப்பதமாக
குளிர் நீரில் தாகம் தீர்(ப்பு)க்கும்
குளியல் ஆனந்தம் தருகிறது!

ஒரு விடியலைச் சந்திக்க வலுவின்றி
விரைந்து போகும் நிலவும்
விண்மீன் கூட்டங்களும்
மேகப் போர்வைக்குள் சுருண்டு
விடுகின்றன!!

*—ஏ.ஆர்.எம்.நதார்,*
*ஜின்னாநகர்.*

## புதுமைப் பெண்

உனது தந்தையும்
தாயும் இணைந்து
எழுதி வெளியிட்ட
புதியதோர் கவிதைப்
புத்தகம் நீ.

வாசிப்பதற்கென்று
ஒருவன் வருவானென்று
உருவாக்கியவர்களின்
இரு விழிகளும்
எதிர்பார்க்கிறதின்று.

என்றாலும்...
வாசிக்கப்படாத
புத்தகமாகவே உனது
வாழ்க்கைப் பொழுதுகள்
கழிந்து போகின்றன.



இரு இமையங்களும்
ஒரு தேன் கிண்ணமும்
உனக்குள்ளும்
இருக்கிறது தான்...
இன்பராகமும்
இழையோடுகிறது தான்...

ஆனாலும்...
ஊளை பிடித்த
கோழை உலகம்
ஏழையின்
வெளியீடென்று உன்னை
ஒதுக்கி வைப்பது தான்
ஏங்கச் செய்கிறது
என்னை.

*—தமிழ்முத்து*
*தமிழேந்திரன்.*

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி



பெயர் : கோ. சசிகரன்
வயது : 18
முகவரி : ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில், திருக்கடலூர், திருகோணமலை.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : M. T. நவாஸ்
வயது : 15
முகவரி : இல. 619, அறபா நகர், தம்பலகாமம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், சித்திரம் வரைதல்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான க்ருபா, ஷங்கர், ஹரன் பிரசன்னா, வானம்பாடி, சிவா, மற்றும், புலவர் சொ. இராமலிங்கம் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

## அன்னமிட்டவன்...

சாலையோரத்தில் வரையப்பட்ட
சாக்பீஸ் ஓவியத்தை
நல்லவேளை
மழை இன்று அழிக்கவில்லை.

கலைநுணுக்கம் வெளிப்படுத்த
போன வாரம் பிள்ளையார்
நேற்று மேரி மாதா
இன்று அனுமன்
நாளை நீங்களாகவும் இருக்கலாம்.

ரசிக்கப்பட்ட அனுமனின்
நெற்றியில் வைக்கப்பட்ட
நாலணாவையும்
தோள்பட்டையில் கிடந்த ஒரு
ரூபாயையும்
வால்முனையில் அமர்ந்திருக்கும் ஐம்பது
காசையும்
எண்ணிப்பார்த்து
சிரித்துக் கொண்டிருக்கிறது வயிறு.

எத்தனை ஓவியங்கள் வரைந்தபோதும்
எப்பொழுதுமே மிச்சம் இருக்கின்றன
கொஞ்சம் சாக்பீஸ் துண்டங்களும்
கொஞ்சம் பசியும்.

*—க்ருபா ஷங்கர்.*

## கல்லறை மொழி

நிசப்தங்களுக்கு மத்தியில்
வாழ்க்கையின் மீது
மௌனமாகப் புன்னகைத்தபடி
கல்லறைகள்
எல்லா நிசப்தங்களுமே
அடிப்புள்ளியில் சப்தங்களால்
நிறைந்தவை
நிசப்தங்களைப் பின்தொடர்ந்து ஊடுருவிப்
பார்த்தால்
அவற்றின் நுண்ணிய சப்தங்கள் துலங்கத்
தொடங்கும்
கல்லறைக்குள்ளிருந்து வெளிவரும்
ஆன்மாக்களின் பெருமூச்சு
இடையறாது நம்மோடு பேசுகின்றன
வீசும் காற்றின் ஒலியையோ
ஊளையிடும் நாயின் ஒலியையோ
தூரத்தில் சலசலக்கும் ஓடையின்
ஒலியையோ
சில சமயம் மொழியையுங்கூட
நம் அவசர கதியில் தாண்டிச்
செல்கிறோம்
நிசப்தமென
எப்போதும் கல்லறைகள்
முளைவிட்ட சிறு செடிகளோடு
எதையோ சொல்ல எத்தனித்தபடி.

*—ஹரன் பிரசன்னா.*

## காதலின் அலட்சியம்

இடறி விழும் மனது
நீ செல்லும் பாதைகளில்
எடுத்தாள மறுத்து
தாண்டிச் செல்கிறாய்!!!

புதிதாய் கனவுகள்
விரியும் பட்டாம்பூச்சியாய்
ரசிக்க மறுத்து
ஒடித்துப் போகிறாய், கனவுச் சிறகுகளை!!

சில்வண்டுகள் ரீங்காரமிடுகிறது
சின்னச் சின்ன ஆசைகள்
உன்னுடையதுதான் என்று சொன்னால்
சிரித்து மலுப்பிச் செல்கிறாய்!!!

ஆரவாரமாயும் மனதை
அமைதிப் படுத்தியும் வழி
எதுவென்றாவது சொல்
இப்படி அலைபாய்ந்து
கொண்டிருக்க எனக்கு
மட்டும் ஆசையா என்ன???

*—வானம்பாடி*

## மணப்பெண்

மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்
ஒன்றையே பற்றி யூசலாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை
நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாதுபோய் விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை யஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை யணுகிவிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமைகா ணோமெனப் பொருமுவாய், சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போல
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததி லிசைவாய்.
அங்ஙனே
என்னிடத் தென்று மாறுத லில்லா
அன்புகொண் டிருப்பாய், ஆவிகாத் திடுவாய்
கண்ணினோர் கண்ணாய்க் காதின்காதாய்ப்
புலன்புலப் படுத்தும் புலனா யென்னை
உலக வுருளையில் ஒட்டுற வகுப்பாய்,
இன்பெலாந் தருவாய், இன்பத்து மயங்குவாய்,
இன்பமே நாடியெண் ணிலாப்பிழை செய்வாய்,
இன்பங் காத்துத் துன்பமே யழிப்பாய்,
இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்,
தன்னை யறியாய், சகத்தெலாந்
தொலைப்பாய்,
தன்பின் னிற்குத் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய், காணெனிற் காணாய்,
சதத்தின் விதிகளைத் தனித்தனி யறிவாய்,
பொதுநிலை யறியாய், பொருளையுங்
காணாய்,
மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
நின்னொடு வாழு நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனை நாட்போல் இனியு நின்னின்பமே
விரும்புவன்; நின்னை மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன்; முத்தியுத் தேடுவேன்;
உன்விழிப் படாமல் என் விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்ப மோங்கிடச் செய்வேன்.

*-சிவா,*

## என்னைக் கவர்ந்த எழில்

கீழிவான் சிவந்து கிழக்கு வெளுத்தது;
பாழ் இருள் நீக்கிப் பகலவன் - வாழுயிரை
மண்ணில் எழுப்பிய மாண்புடைக் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

ஆடும் மயிலின் அழகும், மரக்கிளையில்
பாடும் குயிலின்நல் பண்ணிசைக்கும் -
காடுமென்
அன்னை இயற்கையின் அற்புதக் காட்சியுமே
என்னைக் கவர்ந்த எழில்

ஏற்றம் இறைக்கும் இசைநிறை பாட்டுடன்
போற்றும் ஏர் பூட்டிப் புலம் உழுது -
நாற்றுநடும்
கண்ணைக் கவரும் கவினுறு காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

மலை வீழ் அருவியும் மாமுகில் போர்த்தக்
கலைவாழ் மலையும் கருத்தில் - நிலைத்திடுத்
எண்ணில் அடங்கா இயற்கையின் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

வண்ணச் சிறுகற்கள் வானப் பரப்பினில்
எண்ணற் கரிதாய் எழில் சிந்த;
பெண்ணணங்காய்
பொன்நிலவு தோன்றிப் பொழிந்திடும் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

அன்னைத் தமிழுக் கணிகலனாய்க்
காப்பியங்கள்
முன்னை இலக்கியங்கள் முத்தொளித்து -
மின்னிவர
பண்ணார் தமிழ்மகளைப் பார்போற்றும்
காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

*—புலவர் செ.இராமலிங்கன்.*




# உடல் இளைக்க பால் உதவும்!

**இது** நாள்வரை பால் சாப்பிட்டால் எடை அதிகரிக்கும் என்ற கருத்து நிலவி வந்தது. சமீபத்தில் மருத்துவ அறிவியல் ஆய்வுகள் அப்படியல்ல என்று கண்டு பிடித்துள்ளன. உடலில் உள்ள கொழுப்புச் செல்களைத்




துரத்தித் துரத்தி எரித்துவிடும் ஆற்றல், பாலில் உள்ள கல்சியம் சத்திற்கு உண்டு என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இதனாலேயே எடை குறைவது எளிதாகிறது.

பால் பொருட்களே சாப்பிடாமல் இருந்தால் கல்சியம் சத்தே கிடைக்காத சூழலில் உடலில் உள்ள கொழுப்பு செல்களின் அளவும் பெரிதாகி, உடல் பருக்கிறது. பால் பருகுவது உடல் எடையைக் குறைத்து, உடலை இளைக்கச் செய்வதோடு ஆரோக்கியத்தையும் கூட்டுகிறது. அமெரிக்காவின் டென்சி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கேல் ஜெமீல், நீண்ட கால ஆராய்ச்சியின் முடிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நடைமுறை நேரடி அனுபவ சோதனைகள் மூலம் டயட்டில் இருப்பவர்கள் இளைப்பதைக் காட்டிலும் பால் சாப்பிடுவதன் மூலம் இளைத்தவர்களின் எண்ணிக்கை கூடுதல். டயட்டில் இருப்பவர்கள் ஆறு மாதத்தில் 5 கிலோ எடை குறைந்தால், பால் குடித்து இளைப்பவர்கள் 8.6 கிலோ எடை குறைந்திருந்தனராம்.

பால் மற்றும் பால் பொருட்கள் உடலுக்கு அதிகமான கல்சியம் சத்தினைத் தருகின்றன. கல்சியம் சத்து நிறைந்த இரத்தம், மிகுந்த சத்தும் ஆரோக்கியமும் நிறைந்ததாகிவிடுகிறது. மேலும், உடலில் உள்ள



கொழுப்புச் செல்களைக் கரைக்கும் மற்றும் எரிக்கும் ஆற்றல், இந்த அதிகபட்ச கல்சியம் சத்திற்கு உண்டு. இவை கொழுப்புச் செல்களை துரத்தி துரத்தி எரித்துவிடுகின்றன. எனவே எடை, குறைவது எளிதாகிறது. உடலில்



கல்சியம் சத்துக் குறைந்தால் கொழுப்புச் செல்கள் கரைவது கடினமாகிவிடும்.

கல்சியம் மாத்திரைகளை விட, கல்சியம் சத்தும் இன்னும் பிற சத்துகளும் நிறைந்த பால் சரியான சரி விகித கலப்புணவாகும். பாலை நன்றாகச் சீரணிக்கும் உடல்வாகு உள்ளவர்களுக்கு உடற்பயிற்சிகளுடன் பால் அருந்துவது உடல் இளைக்க உதவும். ஆனால் பாலில் உள்ள லேக்டோஸை (ஒருவகை சர்க்கரைச்சத்து) ஜீரணிக்க முடியாதவர்கள் மட்டுமே எடை கூடுதல், வாயு தொந்தரவுகளை சந்திக்க நேரிடும்.

மற்றபடி உடல் இளைக்க விரும்பும் எவரும் தினசரி, உணவைக் குறைத்துக் கொண்டு நிறைய பாலை அருந்தலாம்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

40

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
**26.09.2006**

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -40**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**பரிசுப் போட்டி இல - 38**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம். அனுராதேவி,**
**இல. 31, ரொசிட்டா பஜார், கொட்டகலை**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## சேனைக்கிழங்கு கட்லட்

### தேவையான பொருட்கள் :-

சேனைக்கிழங்கு - 1 கப் (கரட் துருவலில் துருவியது)
பொட்டுக்கடலை மா - 2 தேக்கரண்டி
வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது)
உப்பு - தேவையான அளவு
இஞ்சி - சிறு துண்டு (பொடியாக நறுக்கியது)
காரத் தூள் - 1/4 தேக்கரண்டி
மசாலாத் தூள் - 1/4 தேக்கரண்டி
கறிவேப்பிலை - தேவையான அளவு
ரஸ்க் தூள் - 2 தேக்கரண்டி.


### செய்முறை :-

சேனைக் கிழங்கைத் துருவி ஆவியில் வேக வைத்து எடுக்கவும். அத்துடன் பொட்டுக்கடலை மாவைச் சேர்த்து, வெங்காயம், இஞ்சி, உப்பு, காரத்தூள், மசாலாத் தூள், கறிவேப்பிலை எனப் போட்டு பிசையவும். பிசைந்த மாவை வடைகளாகத் தட்டி, எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

பொரித்தெடுத்த கலவையை, ரஸ்க் தூளில் புரட்டி எடுக்கவும். தோசைக் கல்லில் போட்டு சுற்றிலும் எண்ணெய் விட்டுத் திருப்பிப் போட்டு எடுத்து ரஸ்க் தூளில் புரட்டி எடுத்துப் பரிமாறலாம்.


# பளபளப்புத் தரும் ஆப்பிள்!

**ஆ**ப்பிளில் இல்லாத சத்துக்களே இல்லை. உடலை வளர்க்கும் விட்டமின்களும், உடலின் செயல்களை ஊக்குவிக்கும் தாதுப் பொருட்களும், உடல் உள்ளுறுப்புகளும், சுரப்பிகளும் செயல்பட உதவும் நுண்ணூட்ட சத்துக்களும், ஹார்மோன் மற்றும் பல்வேறு அமிலங்களை சரியாகச் சுரக்க வைத்து சீர்படுத்த உதவும் பல்வேறு அமிலங்களும் ஆப்பிளில் அடங்கி உள்ளன.



ஆப்பிளில் சர்க்கரைச் சத்து, நீர்ச்சத்து, மாவுச்சத்து, நார்ச்சத்து போன்றவைகள் உள்ளன. புரதச்சத்து, சுண்ணாம்பு, சோடியம் பாஸ்பரஸ் போன்ற சத்துக்களும் விட்டமின் ஏ, பி-1, பி-2 போன்ற விட்டமின் பி. கூட்டு உயிர்ச்சத்தும் விட்டமின் சி போன்றவைகளும் அடங்கியுள்ளன. ஆக்சாலிக் அமிலம், லைசீன், ஹிஸ்டிடின், சிஸ்டின், வேலைன், டைரோசின், மாலிக் அமிலம், ஆல்புமென் போன்ற பல்வேறு அமிலங்களும் அடங்கியுள்ளன.

ஆப்பிள் வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குபடுத்தும். விட்டமின் குறைவால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தும், உடல் செயல்களை ஒழுங்குபடுத்தி, நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும்.



ஆப்பிளை எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம். அப்படியே கடித்து உண்ணலாம். பழத்தை நறுக்கி மிக்ஸியிலிட்டு கூழாக்கி, தேன் சேர்த்தோ, பால் சேர்த்தோ அருந்தலாம்.

குழந்தைகளுக்கு ஆப்பிளைக் கொடுத்துவர அவர்களின் எலும்பு வளர்ச்சிக்கும், பற்களின் உறுதிக்கும் உதவுகிறது. ஆப்பிள் சாறு அருந்திவர தோல் சுருக்கம் மாறி உடல் பளபளப்பாகும்.

ஆப்பிளை நசுக்கி, தேன் சேர்த்துச் சாப்பிட வயிற்றுக் கோளாறுகள் அனைத்தையும் குணப்படுத்தும். ஆப்பிள் பழத்தை வெறும் வயிற்றில் சாப்பிட குடல் புண், இரைப்பை புண், சாப்பிட்டதும் ஏற்படும் வயிற்றுவலி குணமாகும். குடலுக்குப் பலத்தைத் தரும் பழம் ஆப்பிள். வாய் நாற்றம்




உள்ளவர்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் ஆப்பிள் சாப்பிட்டு வர வாய் துர்நாற்றம் உடனே போகும்.

இரத்த சோகை உள்ளவர்கள் ஆப்பிள் சாப்பிட்டு வர, இரத்த அணுக்கள் பெருகி இரத்த சோகை அடியோடு குணமாகும். ஆப்பிளிலுள்ள பாஸ்பேட் சத்து எலும்புகளை உறுதிப்படுத்தும். மூளை சுறுசுறுப்பைத் தரும். ஞாபக சக்தியையும் அதிகரிக்கச் செய்யும்.




**1933ஆம்** ஆண்டு. நவம்பர் 27-ஆம் திகதி. இரண்டு கட்டில் கால்கள் கழற்றுவதற்குத் தயாராக்கப்பட்டன, குண்டாந் தடிகளாக உபயோகிப்பதற்காக. பிற்பகல் நாலு மணி ஆயிற்று. ஸீராவுக்காகக் காத்திருந்தேன். அட்டெண்டெண்ட் வந்தான். குறிப்பு எதுவும் கொண்டுவரவில்லை. "ஜீஸஸ் அந்த இடத்தில் - உங்களுக்குத் தெரியுமாமே - காத்திருப்பானாம். ஸீரா



சொல்லச் சொன்னார்," என்று வாய்மொழியாகக் கூறிவிட்டுப் போனான்.

அன்று இரவு அரபுக்காரனிடம் மாசுரெட் "இன்றைக்கு நள்ளிரவுக்குப் பிறகு வா, அதிக நேரம் நாம் பேசிக் கொண்டிருக்கலாம்," என்றான். அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டான் அவன்.

நடு நிசி. நாங்கள் தயாராயிருந்தோம். பன்னிரெண்டு அடித்துப் பதினைந்து நிமிடமாயிற்று. அரபுக்காரன் உள்ளே வந்து மாசுரெட்டின் கால் விரலை இழுத்து விட்டுச் சென்றான். பையனும் அவன் பின்னால் போனான். நான் என் கட்டில் காலை வேகமாக உருவி எடுத்துக் கொண்டேன். கட்டில் கவிழ்ந்ததால் சிறு ஓசை எழுந்தது. ஆனால் ஜோன்ஸின் கட்டிலில் சத்தம் வரவில்லை.

லெட்ரீன் கதவுக்குப் பின்னால் நான் நின்று கொள்வதென்றும், அரபுக்காரன் வெளியே வரும்போது அவன் கவனத்தைக் கவர்வதற்காக ஜோன்ஸ் அவனை எதிர்கொண்ட மாதிரி வருவதென்றும் ஏற்பாடு. இருபது நிமிடம் காத்திருந்தோம். பின் மளமளவென்று காரியங்கள் நடந்தன.

அரபுக்காரன் வெளியே வந்தான். எதிரில் ஜோன்ஸ் வருவதைக் கண்டு வியப்படைந்தவனாக, "நள்ளிரவு நேரத்தில் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? போ உன் படுக்கைக்கு" என்றான்.

அதே நிமிடம் அவனுடைய பிடரியில் போட்டேன் ஒரு போடு. துளியும் சத்தமில்லாமல் கீழே விழுந்தான் அவன். கிடுகிடுவென்று அவன் உடைகளையும், ஷுக்களையும் மாட்டிக் கொண்டேன். ஒரு படுக்கையின் கீழே அவனை இழுத்துத் தள்ளினோம். யார் கண்ணிலும் படாதபடி அவனை மறைத்தோம். அதற்கு முன் அவனுக்கு இன்னோர் அடியும் போட்டு வைத்தேன்.

வார்டிலிருந்த எண்பது பேரில் ஒருவர் கூட அசையவில்லை. நான் வாசலை நோக்கி விரைந்தேன். ஜோன்ஸும், மாசுரெட்டும் பின்தொடர்ந்தார்கள்.

கதவைத் தட்டினேன். வார்டர் திறந்தான். கையிலிருந்த இரும்புத் தடியை அவன் மண்டை மீது இறக்கினேன். இன்னொரு வார்டர் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் விழித்துக் கொள்ளுமுன் அவனையும் வீழ்த்தினேன். நான் அடித்த இரண்டு பேரும் கொஞ்சம் கூடச் சத்தம் போடவில்லை. ஜோன்ஸ் வீழ்த்திய ஓர் ஆள், கீழே விழுமுன், ""ஆ!" என்ற ஒலியுடன் விழுந்தான். என்னிடம் அடிபட்ட இருவரும் அப்படியே பிரமைபிடித்தவர்கள் மாதிரி நாற்காலியில் கிடந்தார்கள். மூன்றாமவன் தரையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்திருந்தான். மூச்சைப் பிடித்துக் கொண்டு கவனித்தோம். அந்த "ஆ!" ஓசை எல்லோருக்கும் கேட்டிருக்கும் என்று தோன்றிற்று. கொஞ்சம் பெரிய கூச்சல்தான் அது. அப்படியும் கூட யாரும் அசையக் காணோம்.

மூர்ச்சையாகிக் கிடந்த வார்டர்களை நாங்கள் வார்டுக்குள் இழுத்துச் செல்லவில்லை. அவர்களுடைய மூன்று துப்பாக்கிகளையும் எடுத்துக் கொண்டு ஓடினோம். முதலில் ஜோன்ஸ், பிறகு பையன், இறுதியில் நான் - இவ்வாறு மூவரும் படிகளில் இறங்கினோம். விளக்கு வெளிச்சம் மங்கலாகப்

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

பரவியிருந்தது. ஜோன்ஸ் கையிலிருந்த கட்டில் காலை எறிந்துவிட்டான். நான் எறியாமல் அதை இடது கையிலும் துப்பாக்கியை வலது கையிலும் பிடித்திருந்தேன்.

கீழ்ப்படிக்கு வந்தோம். எவ்வித சலனமுமில்லை. கன்னங்கரேலென மை பூசினாற் போல் இரவு சூழ்ந்திருந்தது எங்களை. ஆற்றங்கரைப் பக்கம் உள்ள சுவரைக் கண்டுபிடிப்பதற்காக உறுத்துப் பார்க்க வேண்டியிருந்தது. வேகமாச் சென்றோம். அந்த இடத்தை அடைந்ததும் நான் குனிந்து கொண்டேன், ஜோன்ஸ் என் முதுகின் மீதேறி, சுவர் மீது உட்கார்ந்து, கை கொடுத்து மாசுரெட்டையும், என்னையும் ஏற்றிவிட்டான். இருட்டில் குதித்தோம்.

ஜோன்ஸ் குதித்த இடத்தில் ஒரு மோசமான பள்ளம் இருந்தது. அவன் இசகு பிசகாக விழுந்ததால் கால் முறிந்து விட்டது.

நானும், மாசுரெட்டும் சரியாகவே குதித்தோம். சுவரில் ஏறுமுன் துப்பாக்கி நழுவிவிட்டது. இருவரும் எழுந்து கொண்டோம்.

ஜோன்ஸ் எழுந்திருக்க முயன்றான், முடியவில்லை. "கால் முறிந்துவிட்டது," என்றான்.

மாசுரெட்டை அவனுடன் இருக்கச்சொல்லிவிட்டு நான் சுவரின் கோடிக்கு ஓடினேன். கையால் சுவரைத் தொட்டுக்கொண்டே இருட்டில் ஓடியதால், சுவரின் முடிவு வந்ததும் தடாலென்று குப்புற விழுந்தேன். அதற்குள் ஆற்றங்கரைப் பக்கத்திலிருந்து ஒரு குரல் வந்தது.

"நீ தானா?"

"ஆமாம். யார், ஜீஸஸா?"

"ஆமாம்." அவன் ஒரு நெருப்புக்குச்சியைக் கிழித்து, அரை விநாடி நேரம் வெளிச்சம் காட்டினான். அவன் இருக்குமிடத்தை மனதில் பதிவு செய்து கொண்டு தண்ணீரில் தாவி, நீந்தி அவனை அடைந்தேன். படகில் இரண்டு பேர் இருந்தார்கள்.

"முதலில் நீ ஏறிக்கொள். யார் நீ?"

"பட்டாம்பூச்சி."

"நல்லது."

"ஜீஸஸ், படகைப் பின்னுக்குக் கொண்டு செல்ல வேண்டும். என் சிநேகிதனுக்குக் குதிக்கிறபோது கால்முறிந்து விட்டது."

"சரி, இந்தத் துடுப்பைப் பிடித்துக்கொண்டு வலி."

மூன்று துடுப்புகளும் தண்ணீரைத் தோண்டின. இலேசான படகு வேகமாய்ப் பறந்தது.

ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி, சுவரேறிக் குதிக்கும் போது கால் முறிந்து போன ஜோன்ஸை அங்கேயே விட்டு விட்டு நானும் மாசுரெட்டும் சென்று ஜீஸஸின் படகைக் கண்டு பிடித்தோம். பிறகு ஜோன்ஸுக்காகத் திரும்பி வந்தோம்.

ஜோன்ஸ் இருக்குமிடம் நூறு கெஜ தூரம் இருக்கும் என்று கணக்கிட்டுக் கொண்டு படகை வலித்தேன். இருட்டில் எதையுமே பார்க்க முடியவில்லை.

"ஜோன்ஸ்!" என்று கூவினேன்.

"அடேய்! மூடு வாயை! சத்தம் போடாதே!" என்றான் ஜீஸஸ்.

"இந்தாப்பா, உன் லைட்டரைச் சிமிட்டு!"

தீப்பொறிகள் பளிச்சிட்டன. தான் இருக்குமிடத்தை எங்களுக்குக் காட்டுவதற்காக, கால் முறிந்து கிடந்த ஜோன்ஸ் பல்லிடுக்கால் சீட்டியடித்தான். அந்தச் சீட்டி சத்தமே கேட்காது. ஆனால் பாம்பு சீறுகிற மாதிரி இருக்கும்.அந்தச் சீட்டியை கரையில் இருந்தபடி ஜோன்ஸ் அடித்துக் கொண்டேயிருந்தான். அதையே இலக்காக வைத்து அவனிருக்கும் இடத்துக்குப் படகைக் கொண்டு போனோம். ஜீஸஸின் உதவியாள் கரையில் இறங்கி ஜோன்ஸைத் தூக்கி படகில் கிடத்தினான். மாசுரெட்டும் ஏறிக்கொண்டான். பிறகு ஜீஸஸின் உதவியாளும் ஏறிக்கொண்டான். படகில் ஐந்து பேர் இருந்தோம். படகின் விளிம்புக்கும் தண்ணீருக்கும் இரண்டங்குல இடைவெளிதான் இருந்தது.

"யாராவது இடத்தைவிட்டு நகருவதாயிருந்தால், சொல்லிவிட்டு நகருங்கள்"

என்றான் ஜீஸஸ். "பட்டாம்பூச்சி, துடுப்பு வலிப்பதை நிறுத்து. முழங்காலுக்குக் குறுக்கே துடுப்பை வைத்துக்கொள்," என்றான்.

ஆற்றின் ஓட்டமே துணையாக, இருளில் பாய்ந்தது படகு.

அரை மைல் கழித்து, மூன்றாம் தர விளக்குகளின் மினுமினுப்பு வெளிச்சத்தில் சிறை தெரிந்தது. ஆற்றின் நடுவுக்குப் போய் விட்டோம் நாங்கள். ஆற்றின் வேகம் நம்பமுடியாததாக இருந்தது. உதவியாளனும் படகு வலிப்பதை நிறுத்திவிட்டான். படகைச் சீராக வைத்திருப்பதற்காக ஜீஸஸ் மட்டுமே துடுப்பைப் பிடித்திருந்தான்.

"இப்போது நாம் புகை பிடிக்கலாம்: பேசலாம். ஒரு வழியாய்ச் சமாளித்து விட்டோம் என்று நினைக்கிறேன். யாரையும் நீங்கள் குளோஸ் பண்ணி விடவில்லையே? நிச்சயம்தானே?" என்றான் ஜீஸஸ்.

"குளோஸ் பண்ணியிருப்போம் என்று தோன்றவில்லை," என்றேன்.

ஜீஸஸின் உதவியாள் கூச்சலிட்டான்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**இவ்** அடிமைத்தனத்திலிருந்து பெண்களை விடுதலை செய்வதும் மனிதர் ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். மிக நீண்ட அளவில் சரித்திர பின்னணியைக் கொண்ட இலங்கை சனத்தொகையின் ஐந்து சத வீதமுடைய மக்கள் கூட்டத்தில் வசிக்கும் தேயிலைத் தோட்டப் பெண்களின் வாழ்க்கைச் சூழலின் யதார்த்த நிலையினை எனது தொலைநோக்கு அறிவுக்கு எட்டின அளவில் உருவானதும், சேராம்பூர் இறையியல் இளமானி பட்டப்படிப்பில், இலங்கை .இறையியல் கல்லூரி பட்டச் சான்றிதழ் பாடத்திட்டத்தில் ஒரு பாடமாகவும் இவ் ஆய்வுக் கட்டுரை வெளிவருகிறது.

"தளிர் கொய்யும் தநிகைகளும், மலையக மறுமலர்ச்சியும்" என்ற தலைப்பில் எனது ஆய்வுக் கட்டுரையை எழுதுவதற்கு பலர் பல வழிகளில் உதவியுள்ளனர். அதில் எனது ஆய்வினை மேற்கொள்வதற்கு உந்து தலையும், உத்வேகத்தையும் கொடுத்த அருட். திரு.எபனேசர் ஜோசப் அவர்களுக்கு எனது முதற்கண்



நன்றிகளையும், வெளிக்கள ஆய்வினை செயல்படுத்துவதற்கு பல வழிகளிலும் உதவிய அருட். திரு.மரி அன்தனி அவர்களுக்கும் எனது நன்றிகளையும், இவ்வாய்வினை எழுத ஆரம்பித்த நாள் முதல் முடியும் வரை பல ஆலோசனைகளையும் தந்து குறை நிறைகளை செவ்வைப்படுத்தி என்னை வழி நடத்திய அருட். திரு. சர்வானந்தம் அவர்களுக்கும் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆங்கிலேயரின் ஆதிக்கவாதமும் சூறையாடலும்.**

தென் இந்தியாவின் தக்கண மேட்டுநிலம் உலகின் மிகப்பழைய நிலத்திணிவுகளுள் ஒன்றாகும். நாம் வாழும் இலங்கை இத் தக்கண மேட்டுநிலத்திலிருந்து பிரிந்துபோன ஒரு பகுதியாகும் எனக் கூறப்படுகின்றது. ஐரோப்பிய மக்கள் கீழைத்தேய நாடுகளைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டவேளை இந்தியாவை கண்டதுடன் அதற்கு அணிதாக அமைந்துள்ள இலங்கைத் தீவையும் விட்டுவைக்கவில்லை. ஆரம்பத்திலிருந்து அத்தொடர்பை மேலும் வலுப்படுத்தி, பாலம் அமைப்பது போல பல காரியங்களை ஐரோப்பியர் செய்தனர்.

அபிவிருத்தியடையாத நாடுகளை ஆங்கிலேயர் கைப்பற்றும்போது அழிவு ஏற்படுமா? அநீதி விளையுமா? என்ற தூரநோக்குப் பார்வையுடன் கைப்பற்றவில்லை. தாங்கள் வல்லரசு நாடாக மாறவும், பொருளாதார நன்மைகள் கிடைக்குமா? என்ற அவர்களது மைய கருத்தியல் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டே நாடுகளைக் கைப்பற்றினர். "பிரித்தானியரே நாடுகளின் வணிகர்" என்று நெப்போலியன் போனபாட் கூறினதில் தவறில்லை. இவர்களைப்போலவே கைத்தொழில் புரட்சியில் வெறிகொண்ட ஐரோப்பிய நாடுகள், தாங்கள் வல்லரசு நாடாக திகழ வேண்டுமென்ற ஆதிக்கவாத நோக்கத்துடன் அபிவிருத்தியடையாத ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்காவின் சில நாடுகள் போன்றவற்றை கைப்பற்றினர். தங்களது முதலாளித்துவ சுரண்டலுக்குப் பொருத்தமான தேசங்களைக் குடியேற்றவாத அடிப்படையில் கைப்பற்றினர். இதில் ரொக்கட் வேகத்தில் செயல்பட்டவர்கள் பிரித்தானியராகும். நவீன போர்க்கருவிகளைக் காட்டி பயமுறுத்தி, அபிவிருத்தி அடையாத பலவீன நாடுகளான ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளும் அவர்களின இலக்கில் அகப்பட்டன. இன்னமும் ஐரோப்பாவிலிருந்து கீழைத்தேசம் வரை அமைந்துள்ள கப்பற்பாதையில் ஒரு கேந்திர நிலையத்தில் இலங்கை அமைந்திருப்பது ஐரோப்பியர் இங்கு வருவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

ஆக் காலங்களில் சிறந்த அரசியல் பொருளதார சமய சமூக அமைப்புக்கள் இல்லாத நிலையில் இந்நாடுகள் காணப்பட்டன. ஆனால் கைத்தொழில் உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான நீர், நிலம், மனிதன் போன்ற வளங்கள் நிரம்பி காணப்பட்டதால் தங்களது சுரண்டல் வேலையை இந்நாடுகளில் ஆரம்பித்தனர்.அதன் விளைவாக விவசாய கைத் தொழில் அபிவிருத்தியடைந்தது. இலங்கையின் பொருளாதார சமூக அரசியற் துறை போன்ற சகல முறைகளிலும் பெரும் மாற்றங்கள் உண்டாயின.

இவர்கள் கைப்பற்றிய கீழைத்தேய நாடுகளில் (இலங்கை, இந்தியா,மலேசியா, பர்மா, மேற்கிந்திய தீவுகள், பீஜீ தீவுகள்) இயற்கையாகவே எல்லா வளங்களும் நிரம்பி காணப்பட்டதால் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்ற போர்வையில் கோப்பி, தேயிலை, இறப்பர் என்பவற்றைப் பயிரிட்டனர். குறைந்த செலவில் அதிக இலாபம் பெறுவதற்கு இந்தியாவில் மனித வளம் அதிகமாயுள்ளது எனக் கண்டனர். எனவே இவர்களை, முன்பு குறிப்பிட்ட நாடுகளுக்குக் கடத்தினர். இதன் மூலம் ஆங்கிலேயர் தங்கள் முயற்சியிலும் அதாய சிந்தனையிலும் வெற்றி கொண்டு வீறுநடையுடன் முன்னேறினர். ஆளுவோர் அனைத்தையும் அனுபவிக்க, அழைத்துச் செல்லப்பட்டவர்கள் சகலரீதியிலும் அனைத்தையும் இழந்து அங்கலாய்ப்புடன் நாட்களைக் கடத்தினர். பெயரளவில் உணவும் உடையும் வீடும் கிடைத்தன.

**ஸ்ரீ முகன்**

**பிரித்தானியரை எதிர்த்த சிங்கள பௌத்தரும், தென்னிந்தியரின் வருகையும்.**

கடந்த காலம் முதல் இந்நாள் வரையில் பலவிதமான மோதல்களுக்கு, மிகச் சிக்கலான பல்வேறு பிரச்சினைகள் அரசியல் சமூகத்துடன் தொடர்புள்ளதாயிருந்தது. அதிலும் தேயிலைத் தோட்ட மக்களின் வாழ்க்கையில் பிரச்சினைகள் ஒரு தொடர்கதையாகவே தொடர்கிறது. வரலாறு தொடர்பான தகவல்களை வரலாற்றிலிருந்து பெற்றுக்கொள்வதே நியதியாகும். அவ்வாறு நோக்கும்போது, ஆரம்பத்தில் போர்த்துக்கேயரும் அதன்பின் ஒல்லாந்தரும் இந்நாட்டை கைப்பற்றினாலும்அதன் பின் வந்த பிரித்தானியர் மூலமே தென்னிந்தியர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர்.

பிரித்தானியர் கி.பி 1795 இல் திருகோணமலையைக் கைப்பற்றினர். அதன் பிறகு யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி போன்ற இடங்களையும் கைப்பற்றி 1796 இல் ஒல்லாந்தர் வசத்திலிருந்த கொழும்பையும் தங்கள் வசமாக்கினர். *(துளிர்க்கும்)*

சிரிப்பு 24

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



ஏழையின் வாழ்க்கையில் ஜன்னல் திரைகளுக்கு இடமில்லை. ஆகவே இந்த ஓட்டையை இவர் தன் கைக்குட்டையால் அடைக்கிறார்!

ஏழ்மையில் அவருக்குத் துணையாக இருப்பது 'ஸ்கிரேப்ஸ்' (Scraps) என்கிற நாய். அது குளிருக்கு அடக்கமாகக் குப்பைத் தொட்டிக்கு அருகில் ஒரு கூடையில் நிம்மதியாகத் தூங்குகிறது. திடீரென்று சாப்ளினுக்குத் தூக்கம் கலைகிறது. அதற்குக் காரணம் அவர் மூக்கைத் துளைத்த ஒரு தின்பண்டத்தின் வாசனை. வேலிக்கு அந்தப் பக்கம் ஒருவன் சூடான பலகாரங்களைச் செய்யும் ஒரு கடையை வைக்கிறான். ஓட்டை வழியாக அதை எடுத்து இவர் தன் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொள்கிறார். வேலை தேடி அலையத் தொடங்கினார். ஒரு குடி தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்ய ஆட்கள் தேவை என்று அதன் சுவரின் மேல் ஒட்டப்பட்டிருக்கிறது. அதன் வாசலில் எக்கச் சக்கமான கூட்டம். கதவைத் திறந்தவுடனே சாப்ளின் உள்ளே ஓடுகிறார். ஆனால் மற்றவர்கள் அவரை வெளியில் தள்ளி விடுகிறார்கள். நாயை விட்டுவிட்டு வேலை தேட மீண்டும் புறப்படுகிறார். காலையில் ஒரு எலும்புத் துண்டு கிடைக்கிறது. அதைக் கவ்வ 'ஸ்கிரேப்ஸ்' ஓடுகிறது. திடீரென்று பல நாய்கள் வந்து விடுகின்றன. நாய்களுக்குள் சண்டை தொடங்குகிறது. அதைப் பார்த்த சாப்ளின் நடுவில் புகுந்து தன் நாயைக் காப்பாற்றுகிறார். விளைவு எல்லா நாய்களும் சாப்ளினைத் துரத்துகின்றன. ஒரு நாய் அவர் பேண்டையும் கிழிக்கிறது. ஏழைகளுக்கு உதவச் செல்வது, அவ்வளவு சுலபமல்ல. அதனால் விபரீத விளைவுகளும் ஏற்படலாம் என்ற உள் அர்த்தம் இந்தக் காட்சியில்...

சாப்ளின் நடித்த அந்த சிப்பாய் தன்னுடன் துப்பாக்கி மட்டும் இல்லாமல், குடும்பம் நடத்தத் தேவையான பொருட்களையெல்லாம் கொண்டு வருகிறான். போர்வைகள், தட்டு முட்டுச் சாமான்கள், எலியைப் பிடிக்க ஒரு இயந்திரம் இவைகளுடன் ஜாதிக்காயைத் துருவும் ஒரு சிறிய இயந்திரம். அந்த இயந்திரத்தை அவர் சுவரில் மாட்டிவிடுகிறார். முதுகில் திணவு எடுக்கும் பொழுது அது மிகவும் உபயோகமாக இருக்கிறது! அதன் உபயோகமே அது மட்டும்தான்.



சிப்பாய்க்கு உலகத்தில் உறவினர், நண்பர்கள் யாருமே இல்லை. எல்லோருக்கும் கடிதங்கள் வருகின்றன. ஊரிலிருந்து இவருக்கு மட்டும் ஒன்றும் இல்லை. மனதைத் தளரவிடாமல் இருக்க இவர் மனதில் ஒரு யோசனை! நிறைய பக்கங்கள் கொண்ட கடிதத்தை ஒரு சிப்பாய் ரசித்துப் படித்துக்கொண்டிருக்கிறான். அவன் பின்னால் நின்று கொண்டு கடிதத்தைப் படிக்கிறார் சாப்ளின். கடிதம் மனைவி எழுதியது. அவள் எழுதிய வரிகளில் அடங்கிய உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு சாப்ளின் தன் முகத்தை மாற்றிக் கொள்கிறார். கடிதத்தில் ஒரு முக்கியமான செய்தி! சிப்பாய் முதல் முறையாக தந்தை ஆகிவிட்டான் என்பது. அவன் முகத்தில் காணப்படும் சந்தோஷத்தை விட, சாப்ளினின் முகத்தில் அது அதிக அளவில் பரிமளிக்கிறது. தனக்கு யாருமே இல்லை என்ற கவலை நீங்கிவிட்டது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உண்மையைப் புரிய வைக்கிறார்."உன்னுடைய வாழ்க்கையில் சந்தோஷம் இல்லையென்றால் கவலைப்படாதே. மற்றவனின் வாழ்க்கையில் ஏற்படும் சந்தோஷத்தைப் பார்த்து நீயும் சந்தோஷப்படு!" இது அந்தக் காட்சியால் புரிய வந்த பாடம். சாப்ளின் தன்னுடைய படங்களில் எதைப்பற்றியுமே கவலைப்பட்டது கிடையாது. அவர் பிரபலமாகிய "ட்ராம்ப்" படத்தின் சிறப்பே இதுதான்.

யுத்தம் தீவிரமாக நடக்கிறது. இவரும் இவர் குழுவினரும் ஒரு பள்ளத்தில் பதுங்கி இருக்கிறார்கள். அந்த நேரத்தில் சாப்ளினுக்கு கையில் இருக்கும் பியர் பாட்டிலைத் திறந்து குடிக்க வேண்டும் என்ற ஆசை. அந்த பாட்டிலைத் திறக்க சாதனம் எதுவும் அருகில் இல்லை. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத சாப்ளின் ஒரு விநாடி யோசிக்கிறார். பாட்டிலைத் தலைக்குமேல் பள்ளத்திற்கு வெளியே தூக்குகிறார். அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கும் ஒரு குண்டு பாட்டிலைத் திறக்கிறது. மழை பெய்து பள்ளமெல்லாம் தண்ணீர் நிரம்பி வழிகிறது. அதற்குள்ளேயேதான் படுக்க வேண்டும்... தண்ணீருக் குள்ளேயே நனைந்திருந்த தலையணையைத் தட்டிவிட்டு சுகமாகச் சாய்கிறார். தண்ணீருக்குள்ளேயே மூச்சை எப்படி விடுவது? அவருடைய பையில் அந்நாளில் கிராமப்.'.போன் பெட்டியில் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு 'லௌவுட் ஸ்பீக்கர்' இருக்கிறது. அதை மெகாப் போன் என்பார்கள். அதன் வழியாக சுகமாக சுவாசிக்கிறார்.



தான் ஒருவனே பல ஜெர்மன் சிப்பாய்களைக் கைது செய்கிறார். எப்படி அது முடிந்தது என்று மற்றவர்கள் கேட்டபொழுது நான் எல்லோரையும் சுற்றி வளைத்துவிட்டேன் என்கிறார்.

யுத்தம் தீவிரமாகிறது. போர் முனைக்குச் செல்ல உயிரை இழக்கச் சித்தமானவர்களைக் கூப்பிடுகிறார்கள். சாப்ளின் முன்னாடி செல்கிறார். உயிரை இழக்கக்கூடிய துணிச்சலான அந்த வீரச் செயலுக்கு சாப்ளின் லாயக்கில்லை என்று நிராகரிக்கப்படுகிறார். அதைப் பொருட்படுத்தாமல் கீழே விழுந்து கிடந்த ஒரு சிறிய மரத்தைக்



கையில் பிடித்துக்கொண்டு, தன்னை மறைத்துக்கொண்டு மரம் போலவே எதிரிகளின் எல்லைக்குள் நுழைந்து விடுகிறார். திணவு எடுக்கும் போது மரக்கிளை அவருக்கு உதவுகிறது! யுத்த பூமியின் நடுவில் காற்றில் அடித்துக் கொண்டு வரும் மரத்தைப் போல இவர் முன்னேறுகிறார். யாராவது பார்க்கும் நேரத்தில் மரத்தோடு மரமாக ஒளிந்து கொள்கிறார். முடிவில் ஜெர்மன் நாட்டு அரசனையே பிடித்து விடுகிறார். அந்த வேடத்தில் நடித்தவர் ஸிட்னி சாப்ளின்.

யுத்த பூமி என்பது சாவு, அடிதடி, இரத்தம், குண்டுவீச்சு போன்றவைகள் நிறைந்திருக்கும் ஒரு இடம். அப்படிப்பட்ட இடத்திலும் மக்களைச் சிரிக்க வைக்க முடியும் என்று பலர் அறியாத உண்மையை மக்கள் முன்வைத்தார் சாப்ளின். உலகம் போரின் தாக்கத்தால் தத்தளித்துக்கொண்டு, தவித்துக் கொண்டிருந்த மக்கள் இந்தப் படத்தை மீண்டும் மீண்டும் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார்கள். பல பிரபல இயக்குநர்கள் சாப்ளினை மனதாரப் பாராட்டினார்கள்.

சாப்ளினால் மட்டும் தான் இப்படிப்பட்ட ஒரு படத்தை எடுக்கமுடியும் என்றார் ஒரு பிரபல பிரெஞ்சு இயக்குநர்.

**(தொடரும்)**

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 28

## புரியாத புதிர் யோன் ராணி

மனைவியை இழந்து, பிள்ளைகள் உள்ள ஒரு ஆணும், அதேபோல பிள்ளைகள் உள்ள ஒரு விதவையும் திருமணம் செய்தால் எப்படி இருக்கும்? அதுவும் இருவரும் ராஜ பரம்பரையாக இருந்து விட்டால்? அதுதான் இன்று வரை புரியாத புதிராக இருக்கும் யோன் ராணியின் அந்தரங்கம்.

13ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் மேற்கு இங்கிலாந்தில் காணப்பட்ட ஒரு சிறிய தேசம் பிரிட்டானி ஆகும். 13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரிட்டானியை நவாரே எனும் மன்னன் ஆண்டு வந்தான். அந்த நவாரே மன்னனின் ஒரே மகள்தான் யோன்.

யோனுக்கு 16 வயது நடந்து கொண்டிருந்த போது அவளுக்கு ஒரு திருமணம் செய்து வைப்பதற்காக நவாரே மன்னன் பல சம்பந்தங்களையும் பேசினான். இறுதியாக பிரிட்டானியில் இருந்த பெரும் செல்வந்தரான டியூக் பிரபுவிற்கும் யோனிற்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு வெகு சிறப்பாக நடந்தேறியது.


டியூக் பிரபு - யோன் தம்பதியினரின் 13 ஆண்டு கால திருமண வாழ்வில் அவர்களுக்கு 9 குழந்தைகள் பிறந்தன. இந்நிலையில் எதிர்பாராத விதமாக 1399ஆம் ஆண்டில் டியூக் பிரபு சுகயீனம் காரணமாக மரணமடைந்தார். அவ்வேளை யோனின் மூத்த மகனுக்கு ஆக 12 வயதுதான் ஆகியிருந்தது. அவன் பராயமடையாத படியினால் வேறு வழியின்றி தனது மூத்த மகனுக்காக யோனே பிரிட்டானியின் நிர்வாகத்தைக் கவனித்து வந்தாள்.

இந்தச் சமயத்தில் இங்கிலாந்தை 4ஆம் ஹென்றி மன்னர் அரசாண்டு வந்தார். அச்சமயம் 4ஆம் ஹென்றி மன்னருக்கு 7 குழந்தைகள் இருந்தன. ஆனால் எதிர்பாராத விதமாக இறுதிப் பிரசவத்தின் போது ராணி மரணமடைந்து விட்டாள்.

அக் காலகட்டத்தில் இங்கிலாந்து தேசத்தினை சுற்றியுள்ள சிறிய தேசங்களுடன் ஹென்றி மன்னர் சிறந்த ஒரு உறவினைப் பேணி வந்தார். குறிப்பிட்ட சிறிய தேசங்களுக்கு ஆபத்து என்றால் படைப்பாதுகாப்பு வழங்குவதில் இருந்து சிறந்த வர்த்தக உறவுகளையும் அவர் பேணி வந்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையில், 4ஆம் ஹென்றி மன்னர் பிரிட்டானியின் அரச நிர்வாகத்தைக் கவனித்து வந்த யோனை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. ஏற்கனவே நவாரே மன்னரை நன்கு அறிந்திருந்தாலும் உத்தியோகபூர்வமாக யோனை சந்தித்த முதல் தடவையே ஹென்றி மன்னரின் மனதை அவள் கவர்ந்து விட்டாள்.

இத்தகையதொரு சூழ்நிலையில் 1402ஆம் ஆண்டு தான் யோனை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறி ஒரு தூதுவரை அவளிடம் ஹென்றி மன்னர் அனுப்பினார். முதலில் எத்தகையதொரு முடிவையும் எடுக்காமல் இருந்த யோன், இது குறித்து போப்பாண்டவரின் அனுமதியைக் கோரினாள்.

கத்தோலிக்க கிறிஸ்தவ மரபில் விவாகரத்திற்கும் விவாகரத்துப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் மறுதிருமணம் செய்து கொள்ள தடை உள்ளதே தவிர, விதவைகள் மனைவியை இழந்தவர்கள் மறுதிருமணம்



செய்துகொள்ள எந்தவிதமான தடையும் இல்லை எனத்தெரிவித்த போப்பாண்டவர் அவர்கள் திருமணம் செய்ய தனது அனுமதியினை வழங்கினார்.

இதனை அடுத்து 1402ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி எல்தாம் மாளிகையில் இருவரும் சந்தித்துக் கொள்ளாமலேயே பதிலாள் (Proxy) திருமணம் நடைபெற்றது. பதிலாள் திருமணம் என்பது தூதுவரையே மணமகளின் பிரதிநிதியாகக் கருதி நடாத்தப்படும் திருமணம் ஆகும்.

ஏறக்குறைய ஒரு வருட காலத்திற்குப்பின் 1403ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி 4ஆம் ஹென்றி மன்னருக்கும் யோனிற்கும் வின்செஸ்டர் கதீற்றலில் நேரடித் திருமணம் நடைபெற்றது. அவ்வேளையில் 9 குழந்தைகளின் தாயாகிய யோனிற்கு 38 வயது. 7 குழந்தைகளின் தந்தையாகிய 4ஆம் ஹென்றிக்கு 37 வயது. இதன்படி இருவரும் கணவன், மனைவியாகிய போது மொத்தம் 16 குழந்தைகளுக்குப் பெற்றோராக மாறினார்கள்.

அப்போது இங்கிலாந்துச் தேசத்தை சுற்றி பல சிறிய சிறிய தேசங்கள் காணப்பட்ட படியினால் ஹென்றிம் யோனும் திருமணம் முடித்ததை அடுத்து பிரிட்டானியின் அரசவை ஒப்புதலுடன் அந்த தேசம் இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது.

திருமணம் முடித்து இங்கிலாந்து தேசத்திற்கு வந்து மகாராணியாகிய பின்பும் யோனுக்கு தனது முதல் கணவர் மீதான மதிப்பும் மரியாதையும் சிறிதும் குறையவில்லை. கைதேர்ந்த சிற்பிகளைக்கொண்டு தனது கணவருக்காக 1408ஆம் ஆண்டு வெண் சலவைக் கல்லினால் ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கினார்.

அதனை பிரிட்டானியின் நொன்டெஸ் எனும் இடத்திலுள்ள காலம்சென்ற தனது முதல் கணவன் டியூக் பிரபுவின் கல்லறையில் நிறுவுவதற்காக அனுப்பியும் வைத்தாள். ஆனால் அதே வேளை தனது தற்போதைய கணவரான 4ஆம் ஹென்றி மன்னருக்கு விசுவாசமுள்ள மனைவியாகவும், 16 குழந்தைகளுக்கும் அன்பான தாயாகவும் அவள் விளங்கினாள்.

காலம் இவ்வாறு சென்று கொண்டிருக்கையில் 1413ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒரு சம்பவத்தினை அடுத்து நிலைமையே தலைகீழாக மாறும் என எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

**(தொடர்ச்சி அடுத்த இதழில்)**

*(இரகசியங்கள் தொடரும்...)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்தியாவின் 'சுழல் காற்று' இலங்கையில் ஏற்படுத்திய சூறாவளி

'ஒப்பரேசன் பவான்' என்றால், சுழல்காற்று இராணுவ நடவடிக்கையென அர்த்தம். இதனை இந்திய இராணுவம் புலிகளுக்கெதிராக ஆரம்பித்தமைக்குப் புலிகளின் வன்செயல் நடவடிக்கைகள் அதிகரித்தமையே காரணம். புலேந்திரன், குமரப்பா உட்படப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தற்கொலை செய்து கொண்டதையடுத்து, திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில சிங்களக் கிராமங்களைப் புலிகள் தாக்கி, அப்பாவி மக்களை கொன்றனர். தாம் காவலில் வைத்திருந்த எட்டுச் சிங்களப் பொலிஸ்காரர்களைச் சுட்டுக் கொன்றதோடு, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த சிங்கள அதிகாரிகளையும் சுட்டுக் கொன்றனர். பலாலி தொலைக்காட்சி அலைபரப்பு நிலையத்திலிருந்த சிங்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் புலிகளின் துப்பாக்கிகளுக்கு இரையானார்கள். இதனையடுத்து, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் புலி இயக்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை ஜனாதிபதி ஜெயவர்த்தனா ரத்துச் செய்தார். பிரபாகரனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பத்து இலட்ச ரூபா சன்மானம் வழங்கப்படுமென்றும் இலங்கை அரசாங்கம் அறிவித்தது. இந்தியப் படைகளால் புலிகளை அடக்க முடியவில்லையென்றும், புலிகளுக்கெதிராகப் போரிட இலங்கைப் படைகள் வடக்கு, கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் சிங்கள மக்கள் மத்தியில் உணர்வு மேலோங்கியிருந்தது. ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கூட்டறிக்கையொன்றினை வெளியிட்டனர். அக்டோபர் 7ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்தக் கூட்டறிக்கையில், வடக்கு, கிழக்கில் வன்செயலில் ஈடுபடும் எவரையும் கண்ட இடத்திலேயே சுடுமாறு இலங்கை - இந்தியப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.




இந்திய அரசாங்கம் புறம்பான அறிக்கையொன்றினை வெளியிட்டது. "அப்பாவி ஆண்கள், பெண்கள், பிள்ளைகளைக் கொலை செய்யும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கை - இந்திய ஒப்பந்த விதிகளை அமுல்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளதோடு, சமாதானத்தையும் இன சௌஜன்யத்தையும் பேணுவதற்கு எம்மிடம் இருக்கக் கூடிய அனைத்து சக்தியையும் பயன்படுத்துவோம்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ராஜீவ் காந்தி "மக்களைப் படுகொலை செய்பவர்களை அல்லது ஆயுதங்களுடன் திரிபவர்களைக் கைது செய்யுமாறு இந்திய அமைதிப் படைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது" என்று கூறினார். இதேவேளை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிலிருந்த புலி இயக்க முகாம்கள் மீது, இந்திய அமைதிப் படை ஏக காலத்தில் தாக்குதலை நடத்தியது.



முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா, ஆகியோருடன் ஜெனரல் கல்கட்.

அக்டோபர் மாதம் 8ஆம் திகதி அப்போதைய இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.சி.பந்தும் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர்ஜியும் கொழும்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து வடக்குக் கிழக்கில் எழுந்துள்ள வன்செயல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது பற்றி கலந்துரையாடினர்.

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு குறுக்கே நிற்கும் சகல வன்செயல் சக்திகளுக்கும் எதிராகத் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பதென்று இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது" என்று இச் சந்திப்புக்குப் பின்னர், கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.சி.பந்த் கூறினார்.

இந்தியாவின் 'சுழல் காற்று' இராணுவ நடவடிக்கை சிங்கள,

**(அரசியல் தொடர்)**

தமிழ் தரப்புகளில் மட்டுமல்ல, இந்திய படைத்தரப்பிலும் பெரும் சூறாவளியை ஏற்படுத்தியது. இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய கட்டளைத் தளபதியாக சென்னையிலிருந்த திபேந்தர் சிங், புலிகள் இயக்கத்துக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதை எதிர்த்தார். புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று ராஜீவ் காந்தியை வலியுறுத்துமாறு தனக்கு நெருக்கமான சில அரசியல்வாதிகளையும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தியப் படைவீரர்கள் உட்பட இலங்கையில் அப்பாவி மக்களையும் புலிகள் கொன்று வருவதால், அவர்களைக் கட்டுப் படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வேறு சில இந்திய அரசியல், இராணுவத் தலைவர்கள் தெரிவித்தனர். ஆனால், புலிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முற்றுமுழுதான இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று புதுடில்லி அரசாங்கம் உறுதியாக இருந்தது.

இந்திய உளவுப் பிரிவான 'றோ'வும் சில தமிழீழக் குழுக்களும் புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தின. சிங்கள மக்கள் மீதும், இந்தியப் படையினர் மீதும் புலிகள் இயக்கம் நடத்திவரும் தாக்குதல்கள் குறித்து அதிருப்தியும் கவலையும் அடைவதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்தனர். இந்திய அரசாங்கம் முன்னின்று மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டுமென்றும் அவர்கள் அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தனர். தூர திருஷ்டியற்ற தன்மையும் அரசியல் மற்றும் வரலாற்று முன்னெடுப்புகளைப் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவமும் புலிகள் இயக்கத்துக்கு இல்லாததாலேயே இந்தியப் படைக்கெதிராகப் போர் புரிய தீர்மானித்தனர் என்று அமிர்தலிங்கம் கூறினார். அவர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தந்திரத்திற்குள் சிக்கிக்கொண்டு விட்டனரென்றும் அமிர்தலிங்கம் சொன்னார். இதைத்தான் ஜெயவர்த்தனாவும் சொன்னார். "தமிழர்களைப் பாதுகாக்க இலங்கைக்கு வந்த இந்தியப் படையை அவர்களுக்கெதிராகப் போரிட வைத்தேன்" என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தம்பட்டம் அடித்துக் கொண்டார்.

ஆனால் உண்மையில் அது ஜே.ஆரின் கெட்டித்தனமல்ல. புலிகளின் முட்டாள்தனம் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறியமை புலிகளின் தவறு என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டினர்.

'சுழல் காற்று' இராணுவ நடவடிக்கையை வடக்கு, கிழக்கில் ஆரம்பிப்பதற்கு முதல் நாள், சென்னையிலிருந்த புலிகள் அலுவலகத்தை தமிழகப் பொலிஸார் முற்றுகையிட்டு ஆவணங்கள் பலவற்றைக் கைப்பற்றினர். தனது ஆலோசனையின் பேரிலேயே புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு ராஜீவ் காந்தி இணங்கினாரென்று அப்போதைய இந்திய இராணுவத் தளபதியான ஜெனரல் சுந்தர்ஜி பின்னாட்களில் ஒத்துக் கொண்டார்.

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் புலிகளை வழிக்குக் கொண்டுவருவதற்கு இராணுவ நடவடிக்கையே ஒரே

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

வழி என்பது ஜெனரல் சுந்தர்ஜியின் கருத்தாக இருந்தது.

இதற்கிடையில் இலங்கையில் எழுந்துள்ள நிலைமைகளைக் கையாள்வதற்கு மும்முனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று 'றோ' என்ற இந்தியப் புலனாய்வு அமைப்பின் தலைவரான ஆனந்தவர்மா, ராஜீவ் காந்திக்கு ஆலோசனை கூறினார். புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இராணுவ நடவடிக்கை தொடர வேண்டு மென்பது, அவரது கருத்தின்படி முதலாவது விடயமாகும். இந்தியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைப் புலிகள் இயக்கம் கைவிடத் தூண்டுவதற்காக அந்த இயக்கத்தவருடன் தொடர்புகளை ஏற்படுத்த 'றோ'வுக்கு அனுமதி தர வேண்டுமென்பது அவரது இரண்டாவது யோசனை. புலிகள் இயக்கத்தை ஜனநாயக வழிக்கு மீளக் கொண்டுவருவதற்காக தமிழ் மக்களுக்குக் கூடியளவு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென்பதால், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவோடு நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்த 'றோ' அமைப்புக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்பது அவரது மூன்றாவது யோசனையாகும். இதற்கு ராஜீவ் காந்தி பொதுவாக இணக்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 'சுழல் காற்று' இராணுவ நடவடிக்கையின் ஆரம்பத்தில், இந்தியா படுதோல்வியையே சந்தித்தது. அப்போது புலிகளின் அலுவலகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலேயே இயங்கி வந்தது. பிரபாகரன் உட்படப் புலி இயக்க முக்கிய தலைவர்களைக் கைது செய்யும் நோக்கில், இந்தியப் படையினர் பரசூட்கள் மூலம் பல்கலைக்கழக வளாகத்தில் குதித்தபோது தரையிலிருந்து சரமாரியாக அவர்களைப் புலிகள் சுட்டுக்கொன்றனர். புலிகளின் தலைமையகத்தைக் கைப்பற்றும் பணி, சீக்கிய மென்ரகப் படையணிக்கும் ஒன்பதாவது அதிரடிப் படையினருக்கும் வழங்கப்பட்டிருந்தது. ஹெலிகொப்டர்களிலிருந்து வெண்ணிற பரசூட்கள் மூலம் அவர்கள் இறங்கிய போது நிலவொளி நன்றாகத் தெரிந்தது. இதனால் இந்தியத் துருப்புகளை இலகுவாகச் சுட்டுத்தள்ள புலிகளால் முடிந்தது. பலத்த மோதலின் பின்னரே புலிகளின் தலைமையகத்தை இந்தியப் படையினரால் கைப்பற்ற முடிந்தது. ஆனால், புலிகளின் முக்கிய தலைவர்கள் அனைவரும் தப்பியோடிவிட்டனர். இந்தியப் படை யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் வந்திறங்குவதற்கு நான்கு மணித்தியாலத்திற்கு முன்னதாகவே அவர்களின் உத்தேச தாக்குதல் பற்றிய விபரம், பிரபாகரனுக்குத் தெரிந்திருந்தது. இந்தியப் படையினரின் வானொலி, மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை ஒட்டுக்கேட்கக் கூடிய வாய்ப்பு புலிகளுக்கு இருந்தது. புலிகளுடன் நல்லுறவுகளை இந்தியப் படை பேணி வந்த காலத்தில் பாவித்த அதே வானொலி மற்றும் தொலைத் தொடர்புக் கருவிகளையே இந்தியப் படை பயன்படுத்தியதால் ஒட்டுக்கேட்கக் கூடிய வாய்ப்புப் புலிகளுக்கு இருந்தது. இதனால் இந்தியப்படையால் தமது தலைமையகம் தாக்கப்படப் போகிறதென்ற தகவலை முன்கூட்டியே பிரபாகரன் தெரிந்திருந்தார். இதனால் இந்திய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு இரண்டு மணித்தியாலம் முன்னதாகவே பிரபாகரன் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார். யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் வந்திறங்கிய இந்தியப் படையினர், கொக்குவில் வரை முன்னேறி அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றதாகக் கடுமையான விமர்சனங்கள் அப்பொழுது எழுந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலிருந்த புலிகளின் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் இந்தியப் படையினரால் தாக்கப்பட்டன.

(தொடர்ந்து வரும்....)




குட்டப்பன் வரும்போது குமாருடன் ஸ்ரீதேவியும் இருந்தாள். இது யார் என்று குட்டப்பன் கேட்க குமார் தன் மனைவி என்கிறார். இப்படி ஒரு பெண் இந்த ஊரில் இருந்ததாக குட்டப்பன் சொல்கிறார். பிறகு குட்டப்பனும் பிரபாகரனை தேடி சந்துநாயரின் தேங்காய் கோடனுக்கு போகிறார்கள். அங்கு ஜயந்தனையும் சந்துநாயரையும் தவிர, பிரபாகரன் இருக்கவில்லை. அவர்கள் எலும்பு கூட்டை பற்றி பேசிக் கொண்டு இருந்தது. குமாருக்கு புரியவில்லை. பிறகு இருவரும் பிரபாகரன் வீட்டை அடைகிறார்கள். விளக்குடன் உள்ளே போன அம்மவை அழைக்கிறார் குமார்.

**அம்மா** விளக்குடன் திரும்பி நின்றார்.

"யார்...திருமேனியா?" குட்டப்பனை ஒரு பார்வை பார்த்துவிட்டு விளக்கைத் தரையில் வைத்தார்.


மற்ற இருவரும் வராந்தாவில் அமர்ந்தனர்.

"அம்மா, பிரபாகரன் வந்தானா?" குமார் கேட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வந்திருந்தான். சாப்பாடு எதுவும் வேண்டாம்னு சொன்னான். என்ன போப்பா, அவன் போக்கே ஒண்ணும் பிடிபடலை. என் கையால அவன் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு தெரியுமா?" அம்மா விசனத்துடன் பேசினார்.

"அவன் இப்ப சந்து நாயருடன் சேர்ந்துட்டான், சந்தேகமிருந்தா குட்டப்பனையே கேட்டுப் பாருங்க!" - குமார் சொன்னார்.

"அப்படியா சொல்றீங்க? எங்களுக்குள்ள உறவு முறை அவ்வளவு சரியா இல்லையே?



அவன் அங்கே போய்ச் சேர்ந்துக்க வழியே இல்லையே. என்ன ஆச்சு அவனுக்கு?" அம்மா குழப்பத்துடன் பேசினார்.

"சந்து நாயர் இங்க வந்திருந்தாரா" - குமார் கேட்டார்.

"இல்லை நாங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்தே ரொம்ப நாளாகுது. என்னதான் நடந்திருக்கும்னு யோசிக்கக்கூட முடியலையே!" அம்மா மூக்கின் மீது விரலைப் பதித்தபடி புலம்பினார்.

**எழுதுவது**
**சிவன்**

எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரபாகரன் சந்து நாயருடன் சேரமாட்டான் என்பது அவனது அம்மாவுக்கு நன்றாகவே தெரியும், அதனால்தான் அவர் குழம்பித் தவித்தார்.

"போகும் போது எங்கே போறேன்னு ஏதாவது சொல்லிட்டுப் போனானா என்ன?"

"ஒண்ணும் சொல்லிட்டுப் போகலையே? இருட்டினதுக்கு அப்புறம் திருடன் மாதிரி வர்றான். ரெண்டு வார்த்தை பேசிட்டு சொல்லாமக் கொள்ளாம மறைஞ்சு போயிடுறான்."

குமார், குட்டப்பனின் முகத்தைப் பார்த்தார். அவனுக்கும் ஒன்றும் புரியவில்லை.

இரவு பதினோரு மணிக்கு மேல் ஆகியிருந்தது.

பிரபாகரன் அப்போது குமார் வேலை செய்யும் கல்லூரி வாசலை அடைந்திருந்தான். கேட் பூட்டியிருந்தது.

உட்புறமிருந்த கூண்டில் காவல்காரர் பாதித்தூக்கத்தில் இருப்பது தெரிந்தது.

நள்ளிரவுக்கு மேல் சாதாரணமாக காவல்காரர் நல்ல தூக்கம் போட ஆரம்பித்து விடுவார். கல்லூரிக்குள் அப்படியென்ன திருடன் வந்து திருடிக்கொண்டு போகப் போகிறான் என்கிற அசட்டைதான் காரணம்.

இருப்பினும் அங்கிருந்த எலும்புக்கூடு காணாமல் போனதிலிருந்து தூங்கும் வழக்கத்தை மூட்டைக் கட்டிவைத்துவிட்டார்.

பிரபாகரன் கேட் அருகில் வந்து நிற்பதை காவல்காரர் கவனிக்கவில்லை. காவல்காரர் சற்று வசதியாகச் சுவரில் நன்றாகச் சாய்ந்து கொண்டதும் பிரபாகரன் கேட் தாழ்ப்பாளின் மீது கை வைத்தான். என்ன அதிசயம்? அந்தத் தாழ்ப்பாள் தானாகவே திறந்து கொண்டது.

மிகவும் பெரிதான கேட் தாழ்ப்பாளைத் தான் தொட்டதும் திறந்து கொண்டது. பிரபாகரனின் உடம்பில் புகுந்து கொண்டிருந்த கோவிந்தனின் ரஷஸ், தனது வல்லமையை நினைத்துப் பெருமிதம் கொண்டது. மேற்கொண்டு தன்னால் எதையும் செய்ய முடியும் என்கிற தன்னம்பிக்கை தோன்றியது.

தாழை விலக்கி, கதவை ஓரளவு திறந்த போதும் காவல்காரர் விழித்துக் கொள்ளவில்லை. கோவிந்தன் சத்தம் எழுப்பாமல் கேட்டைக் கடந்தான்.

மணி சுமார் பன்னிரண்டாயிருக்கும்.

பிரபாகரனின் உருவத்திலிருந்த கோவிந்தன் நேராகக் கல்லூரியின் பிரதான கட்டடத்தை நோக்கி நடந்தான்.

எங்கும் யாரையும் காணவில்லை.

மேற்புறம் செல்லும் படிக்கட்டு பிரதான கட்டடத்தின் வடக்குப் புறத்தில் இருந்தது.

அங்கு போனபோது யார் யாரோ ரகசியமான குரலில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. கவனித்த போது அதில் ஒன்று பெண் குரல் என்பதும் புரிந்தது.

இந்த நேரத்தில் இங்கு வந்து பேசிக் கொண்டிருக்கும் பெண் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் பிரபாகரன் படிக்கட்டின் அடியில் இருந்த மறைவில் பதுங்கி நின்றான்.

திடுமென்று இரண்டு ஆண்கள் படிக்கட்டின் அடிப்பகுதியிலிருந்து கோவிந்தனை நோக்கி வந்தனர்.

வந்தவர்கள், கோவிந்தனைவிட வாட்டசாட்டமானவர்கள். இவர்களும் காவல்காரரை ஏமாற்றிவிட்டு உள்ளே நுழைந்தவர்கள்தான் என்பது புரிந்தது.

"யாருடா நீ" - இருவரில் ஒருவன் கோவிந்தனைப் பார்த்துக் கேட்டான்.

கோவிந்தன் பதிலளிக்கவில்லை. அசையாமல் அப்படியே நின்றான்.

"மரியாதையா இங்கேருந்து போறியா இல்லையா?" என்றபடி கையை ஓங்கிக்கொண்டு ஒருவன் கோவிந்தனை நெருங்கினான்.

தாழ் திறந்து கொண்ட சம்பவத்தின் மூலமே தனக்கு அபாரமான வல்லமை கை வந்திருப்பதை உணர்ந்த கோவிந்தன், கையை ஓங்கிக்கொணடு வந்தவனை அப்படியே தூக்கி வீசி எறிந்தான்- மிகவும் சாதாரணமாக.

அவன் மூன்று ஆள் உயரத்துக்கு உயர்ந்து பொத்தென்று தரையில் விழுந்தான். விழுந்தவன் எழுந்திருக்க முடியாமல் தடுமாறினான்.

"ஓகோ... அப்படின்னா ஒரு கை பார்த்துட வேண்டியதுதான்." என்றபடி இரண்டாவது நபர் இடுப்பிலிருந்து பெரிய கத்தி ஒன்றை உருவியபடி கோவிந்தனை நெருங்கினான்.

கோவிந்தன் சற்றும் தயங்காமல் கத்தி பிடித்திருக்கும் கையைச் சட்டென்று பற்றி ஒரு தடவை முன்புறமாக இழுத்து அவனையும் வீசி எறிந்தான்.

முதலில் விழுந்தவனைவிட அதிக உயரம் போய் இவனும் பொத்தென்று தரையில் விழுந்தான்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியின் மூலம் இருவருமே சற்றுப் பயந்து உள்ளூர நடுங்கத் தொடங்கினர்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்தபடி நடுங்கிக் கொண்டு நின்றிருந்தாள் பெண் ஒருத்தி.

சட்டென்று சுதாரித்துக் கொண்டு ஓட முயன்றவளை கோவிந்தன் பாய்ந்து பிடித்தான். கோவிந்தனின் கைப்பிடி இறுக்கம் தனது எலும்பை முறித்துவிடுமோ என்று கூட நினைத்தாள் அவள்.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# எதிரியை மன்னியுங்கள்!



**ஒரு** முறை பஞ்சாலைத் தொழிலாளி ஒருவர் என்னை வந்து சந்தித்தார். அழுது சிவந்த கண்களோடு காணப்பட்ட அவர், தன் சோகம் முழுவதையும் கொட்டித் தீர்த்தார்.

“சுவாமி, நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். என்னைக் கண்டாலே என் சூபர்வைஸருக்குப் பிடிப்பதில்லை. காரணம், நான் அவரை விட அதிகம் படித்தவன். என்றாலும், அனுபவம் காரணமாக அவர் எனக்கு சூபர்வைஸராக இருக்கிறார். நான் என்ன வேலை செய்தாலும் அதில் குறை சொல்வார். என்னைக் கேலி செய்து சிறுமைப்படுத்திப் பார்ப்பதில் அவருக்கு குரூரமான ஒரு மகிழ்ச்சி. அவரின் விஷ வார்த்தைகளைத் தாங்கமுடியாமல் பல தடவை நான் லீவ் எழுதிக் கொடுத்துவிட்டு ஃபாக்டரியில் இருந்து வெளியேறியிருக்கிறேன்.

ஒரு நாள் என் நான்கு வயது மகன் அடுப்பில் கொதித்துக்கொண்டு இருந்த நீரைத் தன் மீது கவிழ்த்துக்கொண்டு விட்டான். இந்தத் தகவலைச் சொல்வதற்காக என் மனைவி பதறியபடி போன் செய்திருக்கிறாள். ஆனால், போனை எடுத்த சூபர்வைஸரோ எனக்கு லைன் கொடுக்கவில்லை. மனைவி போன் செய்த விவரத்தையும் என்னிடம் தெரிவிக்கவில்லை.

மாலையில் வேலை முடிந்து நான் வீடு திரும்பியபோது, என் வீட்டின் எதிரே ஒரு பெரிய கூட்டம். என்ன என்று பதறியடித்துக்கொண்டு உள்ளே போய்ப் பார்த்தேன். கொதிநீரில் வெந்து, துடிதுடித்து எனது குழந்தை இறந்து போய்விட்டான் என்றும், இந்த வேதனையைத் தாங்க முடியாத என் மனைவி மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தற்கொலைக்கு முயன்றதாகவும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவளை மருத்துவ மனைக்குத் தூக்கிச் சென்றிருப்பதாகவும் சொன்னார்கள்.

கொஞ்சி விளையாடிய என் குழந்தை இப்போது என்னுடன் இல்லை. மகாலட்சுமி மாதிரி வீட்டில் வலம் வந்து கொண்டிருந்த என் மனைவி கருகிப் போன முகத்தோடும் உடம்போடும் வீட்டின் மூலையில் முடங்கிக் கிடக்கிறாள்.

என்னுடைய இத்தனை வேதனைகளுக்கும் காரணம் அந்த சூபர்வைஸர்தான். என்றாலும், அவரை எதுவும் செய்ய முடியாமல் கையாலாகாதவனாக இருக்கிறேன். அவருக்குத் தகுந்த பாடம் கற்றுத்தராவிட்டால் என் குழந்தையின் ஆன்மா என்னைச் சத்தியமாக மன்னிக்காது.” வெறிபிடித்தது போல் கத்தினார் அந்தத் தொழிலாளி.

நான் ஓரிரு நிமிடம் மௌனமாக இருந்தேன். பின்னர் “இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்தது எத்தனை மாதங்களுக்கு முன்னால்?” என்று மெதுவாகக் கேட்டேன்.

“பத்து ஆண்டுகளுக்கு முன்னால்” என்றார் அவர்.

‘கசப்பான அனுபவங்கள்’ என்பது ஒரு சிலுவையைப் போல. ‘எதிரியைப் பழி வாங்குகிறேன்’ என்று சொல்லிக்கொண்டு நாம் ஏன் அந்தச் சிலுவையைச் சுமந்து கொண்டிருக்க வேண்டும்? ‘உங்கள் எதிரிகளை மன்னியுங்கள்.... அப்போதுதான் கடவுள் உங்கள் தவறுகளை மன்னிப்பார்’ என்று கிறிஸ்தவ மதம் சொல்வது உங்கள் எதிரியின் நன்மைக்காக இல்லை, உங்களின் நன்மைக்காக.

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதற்குக் காரணமானவனே அவரின் சீடனான யூதாஸ்தான். என்றாலும், யேசுநாதர் சற்றும் தயங்காமல் அவனை மன்னித்தருளினார்.

தன்னைக் காட்டிக் கொடுத்ததற்கு முன்தினம் யூதாஸ் உட்பட தன் பதின்மூன்று சீடர்களுக்கு ஒரு விருந்தளித்தார் இயேசுநாதர். அந்த விருந்தைக் கிறிஸ்தவர்கள் ‘கடைசி திருவிருந்து’ (The last supper) என்று சொல்வார்கள். இந்தக் கடைசி திருவிருந்து காட்சியை ஓவியர் ஒருவர் வரைய முற்பட்டார்.

ஓவியம் அற்புதமாக உருவெடுத்தது. ஆனால், அதில் இயேசுநாதரின் முகத்தை மட்டும் அவரால் கச்சிதமாக வரைய முடியவில்லை. கவலையில் ஆழ்ந்த ஓவியர் அந்த ஊர்ப் பாதிரியாரிடம் சென்று வருத்தத்துடன் தன் பிரச்சினையைச் சொன்னார்.

அதைக் கேட்டுப் புன்னகைத்த பாதிரியார், “இந்தப் படத்தில் யூதாஸை வரையும் போது உங்கள் சொந்த எதிரியை மனதில் உருவகித்துக்கொண்டு வரைந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அதனால்தான் யூதாஸின் முகம் இத்தனை தத்ரூபமாக, கொடூரமாக அமைந்திருக்கிறது. எந்த உள்ளத்தில் பழிவாங்கும் உணர்ச்சி இருக்கிறதோ அந்த உள்ளத்தால் இயேசுகிறிஸ்துவின் முகத்தை மனக்கண்ணால் கூடக் காண முடியாது! ஆகவே, உங்கள் எதிரியை நீங்கள் இந்தக் கணமே முழுமனதுடன் மன்னித்துவிடுங்கள். அதன் பின் இயேசுவை வரைய முயற்சி செய்யுங்கள். அந்தக் கருணை பொங்கும் முகம் அற்புதமாக உங்கள் விரல்களால் உருவாகும்!” என்றார்.

‘மன்னிப்பது என்பது பலவீனமானவன் செய்யும் செயல் இல்லையா?’ என்று சிலர் கேட்கலாம். கிடையாது. மன்னித்தல் பலவீனமானவர்கள் செய்யும் செயல் அல்ல; அது பலசாலிகள் செய்யும் செயல்.

பாலஸ்தீனிய இளம் பெண் ஒருத்தியின் இரண்டு குழந்தைகளையும் அவளின் கண் முன்னாலேயே இஸ்ரேலிய இராணுவத்தினர் கொன்றார்கள். அதைத் தடுக்க முற்பட்டபோது அவளின் வயிற்றில் இருந்த ஐந்து மாதக் கருவும் கலைந்து போனது. மரணத்தின் விளிம்புவரை சென்றுவிட்டு அந்தப் பெண்மணி சில மாதங்களுக்குப் பிறகு உடல் நலம் தேறி வெளியே வந்தாள். அப்போது பாலஸ்தீனியர்கள் நடத்திய தாக்குதலில் அநாதையாக்கப்பட்ட யூத இனக் குழந்தை ஒன்று மாடிப்படிகளில் இருந்து கீழே உருண்டு விழுந்துகொண்டிருந்தது. தன் குழந்தைகளைக் கொன்ற யூத (இஸ்ரேலிய) இனத்தைச் சேர்ந்த அந்தக் குழந்தையைக் காப்பாற்றலாமா, வேண்டாமா என்றெல்லாம் அந்தப் பாலஸ்தீனிய இளம் பெண் யோசிக்கவில்லை. பாய்ந்து ஓடி பாய்ந்து ஓடி அந்தக் குழந்தையைத் தாங்கிக் காப்பாற்றிவிட்டாள்.

அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாம் அவளைத் திட்டித்தீர்க்க, அதற்கு அந்தப் பெண் சொன்னாள்... “என் குழந்தைகளைக் கொன்ற இஸ்ரேலியர்களை நான் எப்போதோ மன்னித்துவிட்டேன்!”

மன்னித்தல் என்பது விசித்திரமான ஒரு மருந்து. அதை அடுத்தவர்களுக்கு அளிக்கும்போது நம் மனதில் இருக்கும் காயங்கள் தாமாகவே ஆறிவிடும்.

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 185க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம். சாந்திகுமார், அரச கால்நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. சியாமளா ரவிச் சந்திரன், M 28, நவகம்புர, ஸ்டேஸ் வீதி, கொழும்பு - 14.
2. ஏ. ஸ்ரீ அஷல்யா, 24ஆம் கட்டை, மட்டக்களப்பு.
3. பாத்திமா றஷ்கா ஆஸ்மி, 276 ஏ, மார்க்கட் வீதி, சாய்ந்தமருது - 07.
4. ஆர். கார்த்திகேசு, 3 1/3, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.
5. மரியம் ரொஸ்மின், 390 ஏ. செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.
6. எம்.எப்.எம். ரிம்ஸாத், 115, அண்ணல் வீதி, மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா - 3.
7. எம். ஜே. பெர்னாண்டோ, புனித லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
8. இந்திராணி பத்மறாஜன், 86/6, டன்பார் வீதி, ஹட்டன்.
9. எம்.சி. கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை - 05.
10. சி.மிதுஷான், சர்மிலன் வீதி, பாண்டிருப்பு - 02 , கல்முனை.

## குறுக்கெழுத்துப் போட்டி 187

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | | | 22 | 23 | 24 |
| | 26 | 27 | 28 | | |
| 31 | 32 | | 34 | | 36 |

### இடமிருந்து வலம்

1. திருகோணமலை மாவட்டத்தின் பிரதேசமொன்று.
7. இசை என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
11. தற்காப்புக் கலையொன்று
13. தடவை அல்லது மேன்மை என்று கூறலாம் (குழம்பியுள்ளது).
22. வேள்வி என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
26. கல்லறை என்பதன் ஒத்தகருத்து.
31. இயற்கை நிகழ்வு. குளிர் என்றும் பொருள்படும்.
36. கரம்

### மேலிருந்து கீழ்

1. முன்னைய சமயங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
2. அன்னம் என்றும் பொருள்படும்
3. ஒரு நட்சத்திரம் (குழம்பியுள்ளது)
6. ராகங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
11. அண்மையில் திருமணம் செய்து கொண்ட நடிகர்
22. பயிர்களின் சில விளைபொருளை இப்படியும் கூறுவர்
26. கோள்களில் ஒன்று.

## குறுக்கெழுத்துப் போட்டி 185 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏ (1) | வு (2) | க (3) | ணை (4) | | சோ (6) |
| ல (7) | ம (8) | ம் (9) | | பீ (11) | தி (12) |
| ம் (13) | க (14) | ட (15) | க (16) | | ட (18) |
| | | | ணா (22) | | ம் (24) |
| ளி (25) | | தே (27) | ர் (28) | | |
| க (31) | தி (32) | றை (33) | | வெ (35) | ல் (36) |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 26.09.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-187
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# மின்சாரக் கதைகள்

வழங்குவது ராஹில்

## நீ! தமிழ் மொழி

...... உயிரிலிருந்து இறங்கி வருவது கவிதை. மொழிக்கு உயிர் இருப்பதை உறுதிப்படுத்துவதும் கவிதைதான்.

கவிதை, மொழியின் வாசம்...சுவாசம்.

என் அறிவை வார்த்தைகளால் புகைப்படம் எடுத்துக் கொடுத்து வீட்டு மேடையிலிருந்து இறங்கினேன்.

ஆட்டோகிராஃப் பல என் பேனா முத்தம் பெற்றன.

சார்...! உங்களோடு தனியாகச் சில நிமிடங்கள் உரையாடலாமா?

நீ மென்மையாக ஒரு விண்ணப்பம் மலர்ந்தாய்.

நீ...ங்...ங்...க...? என் சொல் இழுபட்டது.

சார்...நான் பேராசிரியர் புகழேந்தி பொண்ணு.

நீ உன் முகவரி காட்டினாய்.

அப்...போ....நீ கனி மொழி...தா...னே...? என்றேன் நான்.

ஆமா...சார்...! என்றாய்.

பேராசிரியருக்கு நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்...

நீ என்ன செய்கிறாய்...?

நான் அக்கறையுடன் வினா விதைத்தேன்.

தமிழ் விரிவுரையாளராகப் பணி செய்கிறேன்.

நீ உன்னை அடையாளம் செய்தாய்.

சார்...! உங்க கவிதைகள் ரொம்பப் பிரமாதம்.

நான் கூட உங்களைப் பற்றிக் கவிதை எழுதியிருக்கிறேன்...இதோ...!

நீ ஒரு காகிதத்தை என் கைக்குள் திணித்துவிட்டுச் சென்றாய்.

எழுபது கிலோ மீற்றர்கள் கடந்து நான் என் வீட்டில் சுவாசித்தேன்.

இரவு படர்ந்திருந்தது.

என் தூக்கம் வேறு எங்கோ தூங்கியது.

நீ எழுதிய கவிதையின் ஞாபகம் என்னுள் சுரந்தது.

உங்களுடைய தமிழ் என் நித்திரையை நிறுத்திப் பல காலமாயிற்று. என்னுடைய கவிதை நீங்க தான். நீங்கள் என் அப்பாவிடம் தமிழ் கற்றீர்கள். நான் உங்களிடம் அன்பு கற்க ஆசைப்படுகிறேன். உங்கள் காலங்களில் கலந்திடக் காத்திருக்கிறேன்.

நீ உன் இதயத்தை அதில் செய்திருந்தாய்.

உனக்கும் எனக்கும் இருபது வருடங்களாவது இடைவெளி இருக்கும்.

நான் தமிழைக் காதலித்ததால் எந்தப் பெண்பாலும் என்னில் கலக்கவில்லை.

உன் கடிதம் பார்த்ததும் என் இதயம் துடிக்க ஆரம்பித்தது.

உன் முகம் என்னுள் பூக்கத் தொடங்கியது.

உன் புன்னகையின் சத்தம் எனக்குள் கேட்கத் தொடங்கியது.

உன்னோடு இன்னும் சில நிமிடங்கள் நான் வாழ்ந்திருக்கலாமே என்றது இதயம்.

உன் செல்போன் விலாசம் காகிதத்தில் முத்தாகப் பளிச்சிட்டது.

உன்னோடு பேசுவதற்கு என் வயது விரும்பியது.

ஹலோ! என்றேன்.

கனிமொழி இருக்கிறாங்களா... என்று தொடர்ந்தேன்.

கனிமொழியாவது காய் மொழியாவது இந்த அர்த்தராத்திரியில்...ராங் நம்பர்...

ஒரு சின்ன அவமானம் என்னைத் தீண்டிச் சென்றது.

குருதியில் வியர்வை நிரம்பியது.

மூச்சில் பூக்கள் நிரம்பின.

வார்த்தைகளில் வாசம் நிரம்பியது.

காதல் தடுமாற்றத்தால் ஒரு இலக்கத்தைப் பிழையாக அழுத்தியிருக்கிறேன்.

மீண்டும் என் விரல்கள் இலக்கங்கள் அழுத்தின... கவனமாக.

ஹலோ! என்றாய் உடனே நீ!

இரவு இரண்டு மணிக்குள் மூழ்கிக் கிடந்தும் நீயும் என்னைப் போல்

தூக்கம் இழந்து தவித்துக் கொண்டிருந்திருக்கிறாய்.

ஹலோ...கவிஞர் பேசுகிறேன்...என்றேன்.

சில நொடிகளை மௌனம் திருடியது.

உன் கடிதம் படித்தேன். உன் துடிப்பு எனக்குப் பிடித்திருந்தது.

ஆனா...நம் வயது...? தொலைபேசியை அணைத்து விட்டேன்.

சில நிமிடங்கள் உதிர்ந்தன. நீ மீண்டும் உன் மனது காட்டினாய்.

காதலுக்கும் கல்யாணத்துக்கும் வயசு முக்கியமல்ல... மனசு தான் முக்கியம். பிரபல கவிஞருக்கு இது கூடவா...

புரியவில்லை...? என்றாய் நீ.

நான் உன்னிடம் தோற்றுப் போனேன். •

# வஞ்சம் தீர்த்த வஞ்சி!

என்ன...? இந்த அனுஷா, வந்து ஒரு கிழமையாகியும் கூட இவளோட பெயரைத் தவிர வேறெந்த விபரத்தையுமே அறிய முடியாம இருக்கே...இண்டைக்கு அவவோட பூர்வீகத்தை அறியாம நான் விடப்போறதில்லை. வரட்டும்...தானே முடிவுக்கு வந்தவளாய் கையைப் பார்க்கிறாள். அவளது கைக் கடிகாரம் 4.45 ஐக் காட்டியது.

அந்த மகளிர் விடுதியின் பக்கத்து அறைகளில் நிலவிய அமைதி கரைந்து காணாமற் போய்க் கொண்டிருந்தது. ஆம், அலுவலகம் முடிந்து அறைகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர் இளம் பெண்கள். பொறுக்கி எடுத்தது போல் அத்தனை பேரும் கிட்டத்தட்ட ஒரே வயதினர். சுமார் 25 அறைகளில் 75 பெண்கள் தங்கியிருந்தனர். இது தவிர இவ்விடுதியை நிர்வகிக்கும் பெண்கள் குழுவினரும் அங்கிருந்தனர்.

அமரா இந்த விடுதிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாகி விட்டிருந்தது. அவளது ரூம் மேட்ஸில் அனுஷா புதிதாக வந்து ஒரு கிழமையாகியிருந்தது. சுமாரான அழகும் கூட இருப்பினும் கதை சொல்லத் துடிக்கும் கண்கள் கவலையின் உறைவிடமாகியிருந்தன. முகத்தில் குடி கொண்டிருந்த சிந்தனையின் செறிவு அவள் கஷ்டத்தில் இருப்பதை உணர்த்தியது. இருப்பினும் அவளது அமைதியான அன்றாட நடவடிக்கைகள் பணக் கஷ்டத்திற்கும் அவளுக்கும் வெகு தூரம் என்பதைப் புலப்படுத்தின.

அனுஷாவின் வாழ்க்கைப் புத்தகத்தின் சோக அத்தியாயத்தினைப் புரட்டிப்படிக்க பலமுறை முயன்று தோற்றுப் போயிருந்தாள் அமரா. "வெளியில் சொல்ல முடியாத சோகங்களும் உண்டு அமரா" அனுஷா ரத்தினச் சுருக்கமாகக் கூறி நைசாக நழுகிக் கொள்வாள். சொல்லொணா சோகங்களும் அடுத்தவருடன் பகிர்ந்து கொண்டால் சற்றுக் குறைவடையும் அல்லவா...? சிந்தனையில் இருந்தபோதே கதவு தட்டப்பட்டது. திறந்தபோது அனுஷா நின்றிருந்தாள். நன்றாகக் களைத்துப் போயிருந்தாள்.

வைக்கோல் போரில் தொலைந்துபோன வைரத்தைத் தேடிக் களைத்து விட்டாளோ...? இல்லை வைரத்தை விடப் பெறுமதி மிக்க ஒன்றைத் தொலைத்துவிட்டு களைத்துக் களைத்துத் தேடிக் கொண்டிருக்கிறாளோ...?

எது எப்படி இருப்பினும் அனுஷாவின் உள்ளத்தை உப்புக் காற்றாய் அரித்துக் கொண்டிருக்கும் சோகம் என்னவென்று அறிந்து விடுவதென்று தீர்மானமாய் எழுந்த போது, குளித்து வேறு ஆடைக்குள் புகுந்திருந்தாள் அனுஷா. சோர்வு குறைந்திருந்த போதும் சோகம் குறையவில்லை என்பதை அவள் முகம் பிரதிபலித்தது. அருகில் அமர்ந்து கொண்ட அமரா, அனுஷாவை அலச ஆரம்பித்தாள்.

ஏண்டி அனுஷா...! நீ இந்த ரூமுக்குள்ள குடிபுகுந்த அன்னைக்கே என் உள்ளத்துக்குள்ளேயும் புகுந்துட்டடீ. ஒன்ன வேறொருத்தியா நினைச்சி பாராமுகமா இருக்க முடியல்ல. நீ சிரிக்கிறதப் பார்த்தப்புறம் தான் எனக்கு நித்திரையே வரும்போல இருக்கு. அதனால உன் கவல, கஷ்டம் என்னன்னு எங்கிட்ட சொல்லு பிளீஸ்...என்னால் முடிஞ்ச உதவிய நான் செய்றன். வேற யார் கிட்டயும் மூச்சுக்கூட விடமாட்டன் ப்ராமிஸ்...

அங்கு நிலவிய சிறிய அமைதியை நீண்டதொரு பெருமூச்சினால் குலைத்து விட்டு தனது சோக அத்தியாயத்தின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள் அனுஷா...!

ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்த ஒரே பிள்ளை அனுஷா சற்று வித்தியாசமான மனப்போக்குடையவள். ஏதாவது ஒரு விதத்தில் சாதிக்க வேண்டும், பிரபல்யமடைய வேண்டும் என்ற பேரார்வம் கொண்டவள்.

தனது எழுத்தாற்றல் தனது ஆர்வத்திற்குத் துணைபோகும் போல் தோன்றவே, ஓய்வு நேரங்களில் எழுதத் தொடங்கினாள் அனுஷா.

திறமைசாலிகளுக்கு முன்னுரிமை வழங்கும் பத்திரிகையொன்று அவள் சாதிப்பதற்கும் பிரபல்யமடைவதற்கும் களம் அமைத்துக் கொடுத்தது. எழுதினாள்... எழுதினாள்... எழுதிக் கொண்டேயிருந்தாள். கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை, தொடர்கதையென நாளடைவில் அவளது ஆக்கங்கள் இடம் பெறாத பத்திரிகைகளே இல்லையென்றாகிப் போனது.

வாசகர்களின் பாராட்டுதல்கள் உரமாக, ஊக்கியாக அமைந்தன அவளுக்கு. அவளது ஆற்றலும் விருட்சமாக வேரூன்றியது. இவ்வாறு இரண்டு வருடங்கள் கடந்து சென்றன.

ஒரு நாள் அவளது விலாசத்தைத் தேடிப் பிடித்து வந்த ஒருவன், பெயர் விஜய் என்றான். அவளது எழுத்தாற்றலால் ஈர்க்கப்பட்டதாகவும், அவளை நேரடியாகப் பார்த்துவிடும் ஆவலில் வந்ததாகவும் கூறினான். வியந்து போற்றினான். பாராட்டுக்களுடன் பரிசில்களும் வழங்கினான். அவனது செயலிலும், பேச்சிலும் தன்னை மறந்த அபலையவள், அவன் பேச்சாற்றலிற்குப் பரிசாய் தன் உள்ளத்திலேயே அவனுக்கு இடம் வழங்கினாள்.

நாட்கள் செல்லச் செல்ல நெருக்கம் அதிகரித்து தொடர்புகளும் அதிகரித்தன. உள ரீதியான பரிமாற்றங்களுடன், உடல் ரீதியான பரிமாற்றங்களும் நடந்தேறின. விஜய் அள்ளி வீசிய வாக்குறுதிகளில் மிக முக்கியமாகத் திருமணம் செய்து கொள்வது பற்றிப் பேசும் போது தான் அவன் தனது வேஷத்தைக் கலைத்தான். அவனது சுயரூபம் வெளிப்பட்டது. அவன் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் தேர்தல் காலத்து வாக்குறுதிகளுக்கு ஒப்பானது என்றும் புலப்பட்டது.

அனுஷா அழுதாள், புலம்பினாள் பலன் பூச்சியமே. வீட்டாரின் நெருக்கடி வேறு



–எம்.எம்.மிப்ராஸ், தில்லையடி.

அவளை வதைத்தது. அதற்குள் தலைமறைவாகி விட்ட விஜய்யைப் பற்றி விசாரித்ததில் அவனுக்கு இது ஒரு பொழுது போக்கு என்றும், அவனால் வஞ்சிக்கப்பட்டு தம் உயிரை மாய்த்துக் கொண்ட அபலைகள் அநேகர் என்றும் அறியக் கிடைத்தது.

எனினும் அவர்களைப் போன்று தான் உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதில்லையென்று திடசங்கற்பம் எடுத்துக் கொண்டாள். அத்துடன் வஞ்சகன் விஜய்யை வஞ்சம் தீர்த்தே தீர்வதென்று நெஞ்சினில் உரம் கொண்டாள்.

அவன் இடமாற்றம் பெற்றுச் சென்ற இடம் மற்றும் அவன் பற்றிய ஏனைய விபரங்களையும் சேர்த்துக் கொண்டு தானும் அதே இடத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றாள். தனது திட்டத்தை நிறைவேற்றும் வரை தங்கியிருக்கத் தகுந்த இடமாக இவ் விடுதி அமையுமென இங்கு வந்து சேர்ந்தாள்.

அனுஷாவின் சுயசரிதையின் பிற்பகுதி அமராவின் கண்களின் கனல் பறக்கச் செய்திருந்தது. அவளும் ஒரு பெண்தானே...? ஆவேசமாகக் கேட்டாள் "சரி அந்த ஸ்திரிலோலனைப் பழிவாங்க உன் வசமுள்ள திட்டம் என்ன" அனுஷா சற்றுத் தயங்கிய போது... "ஓ...எம்மேல நம்பிக்கை இல்லையெண்டா..." அமரா இழுக்க அனுஷா "நோ...நோ...அதுக்கில்ல அமரா...எனக்கு உதவி செய்யப் போய் உனக்கும் சாட்சி...சம்பந்தமெண்டு அலைய வேண்டி வந்திடுமோ என்றுதான் யோசிக்கிறன்" என்றாள்.

அனுஷாவின் பேச்சிலிருந்து அவளது திட்டம் என்னவென்று அறிந்து கொண்ட அமரா, "அனுஷா நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது. அதனால உன் திட்டத்தை மாற்றிக் கொள்ளத் தயாரா இரு. நாங்க ரெண்டு பேரும் சேர்ந்தே நல்லதொரு திட்டத்தை வகுத்து செயற்படுத்துவம். ஓ.கே." அமராவின் யோசனை சரியாகப் படவே சம்மதித்தாள் அனுஷா. நீண்ட நேர யோசனையின் பின் தயாரான நிலையில் திட்டத்தை நாளையே அமுல்படுத்துவது என்ற தீர்மானத்தோடு உறங்கச் சென்றனர் இருவரும்.

அந்த அலுவலகத்தின் பரபரப்பில் மூழ்கியிருந்த விஜய்யின் மேசையில் இருந்த டெலிபோன் அலறியது. ரிசீவரைத் தூக்கிக் காதில் வைத்து குட்மோனிங் சொன்ன ரிசீவருக்கு பதில் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான். ஆனால் அன்றைய குட்மோனிங் அவனுக்கு மட்டும் பேட் மோனிங் ஆக இருக்கப் போவதை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

மறு முனையில் நண்பன் மதன் பேசினான். விஜய், மதன் இருவரும் பால்ய நண்பர்கள். ஏன் பாலியல் விடயங்களிலும் தான். கண்களை உறுத்தும் காரிகைகள் கண்களில் பட்டுவிட்டால் போதும், காரியம் முடியும் வரை கண்ணே, கற்கண்டே என்று பின்னால் திரிந்து பின்னர் கை கழுவி விடும் காமக் கலையைக் கற்றுத் தேர்ந்த கனிகள். சேற்றைக் கண்டால் மிதித்து பின் தண்ணீரைக் கண்டால் கழுவி விடுவது கைவந்த கலை இவர்களுக்கு. இவ்வாறு இவர்களால் கைவிடப்பட்ட கன்னியர்கள் ஏராளம், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தனித்தனியாகவும், கூட்டாகவும் காரியத்தைச் சாதித்து வந்தார்கள்.

அவர்களினது துர்க்குணங்களுக்குத் தூபமிடுவதாக அவர்களிருவரினதும் குடும்பப் பின்னணிகள் அமைந்திருந்ததும் குறிப்பிடற்குரியது.

நண்பனின் தொலைபேசி அழைப்பு நல்ல சகுனத்திற்கு அறிகுறியாய் இருக்கும் என்ற விஜய்யின் நம்பிக்கையில் மண் விழுந்தது போன்று மதன் ஏதேதோ உளறிக் கொட்டினான்.

உடனேயே நண்பன் மதனைச் சந்தித்து விபரம் அறியாவிடில் தலையே வெடித்துவிடும் போலிருந்தது விஜய்க்கு.

தனது பொறுப்பதிகாரியிடம் அரைநாள் விடுப்புப் பெற்றுக்கொண்டு விரைந்தான் விஜய்.

பரபரப்போடு விஜய்யின் வருகைக்காகக் காத்து நின்ற நண்பன் டேய்! மச்சான்...உன்ர அனுஷாவுக்கு சீரியஸ் ஸ்டேஜ்ல எயிட்ஸ் இருக்காம்...! ஸ்பெஷல் வோட்ல அட்மிட் பண்ணி ட்ரீட்மென்ட் செய்றாங்களாம்...

தன் காலுக்குக் கீழே நிலக்கண்ணி வெடியொன்று வெடித்துச் சிதறியது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது விஜய்க்கு. அவனது எதிர்காலக் கனவு மாளிகைகள் அனைத்தும் நொடியில் நொறுங்கித் தவிடுபொடியானது. எதிர்காலம் இருண்ட இடுகாடாய் தோன்ற, எமதர்ம ராஜா தன் தோளில் ஏறி கூத்தாடுவது போன்று உணர்ந்த விஜய் துடிதுடித்துப் போனான்.

"ஓ...கோட்...! அனுஷாவுக்கு எயிட்ஸ் எண்டால் எனக்கும்...எயிட்ஸ்....ஓ..."நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை அவனால்.

"மதன்...உடனே நான் ட்ரீட்மென்ட் எடுத்தாக வேண்டும்...நான்...நான் சாகக்கூடாது...சாகக்கூடாது...நான் வாழவேணும்..."வெறி பிடித்தவன்போல் தனது பைக்கை உதைத்தான். எமன் வீசிய பாசக் கயிற்றில் சிக்கிவிடாது தப்பிக்க எடுத்த ஓட்டம்...அவனது மனதின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது அவனது வண்டி புகையைக் கக்கிக் கொண்டு காற்றாய்ப் பறந்தது.

பச்சை விளக்கைக் கண்ட பாரவூர்தி பக்குவமாய் ஓட்டம் பிடிக்கவும், சிவப்பு விளக்கைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் சீறிப் பாய்ந்த விஜயின் பைக், அதனுள் சிக்கி சின்னாபின்னமாகவும் கண்ணிமைக்கும் நாழிகையேனும் தேவைப்படவில்லை.

அதே நேரம் கன கச்சிதமாய் தமது திட்டம் நிறைவேறியது குறித்து மகிழ்ந்தார்கள். தன்னைப் போன்ற பல பெண்களின் வாழ்க்கையைச் சிதைத்தவன் உருத் தெரியாமல் சிதைந்து போனதால், அவனால் சீரழிக்கப்பட இருந்த பல பெண்கள் காப்பாற்றப்பட்டதில் பெருமிதம் கொண்டனர் தோழிகள் இருவரும்.

*(யாவும் கற்பனை)*

---

# எதனையும் செய்யும் காதல்

**அன்று** அகில இலங்கை முதலாவது பட்டதாரி பரிசளிப்பு விழா. அதில் ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொருவர் மேடையில் ஜனாதிபதியின் கையால் விருது வாங்க காத்துக் கொண்டு இருக்கின்றனர். அதில் விஞ்ஞான துறையில் முதல் இடமாக திகழும் சரவணனும் ஒருவன். ஜனாதிபதி மேடையில் உரையாற்றும்போது தன் கடந்தகால வரலாற்றையும் கூறிக்கொண்டிருக்கின்றார். அப்போது சரவணன் மனத்தில் தன் கடந்தகால வாழ்க்கை நினைவுகள் சிட்டாய் சிறகடிக்கின்றன.

இவன் ஓர் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன். தாயோ தோட்டத்தில் கொழுந்து பறிக்கும் ஓர் தொழிலாளி, தந்தை பரமசிவனோ ஓர் சாதாரண வாகன மெக்கானிக். இவர்கள் குடும்பத்தில் மூவர் மட்டும்தான். சிறுவயதிலேயே சரவணன் தந்தையின் தொழிலை ஓரளவு கற்றவன். தந்தையின் தொழிலுக்கு உதவி செய்வதோடு காப்பரேசன் பாடசாலையில் கல்வியும் கற்றுக்கொண்டான். ஒருநாள் தந்தை ஓர் மோட்டார் ஊர்தியின் கீழ் இயந்திரத்தை மாற்றிக் கொண்டிருந்தார். தற்செயலாக இரு ஆணிகளைப் பொருத்தாமல் மறந்திருந்தார். பின்னர் வாகன ஓட்டுனரை வாகனத்தை இயக்கும்படி கூற, அவரும் வாகனத்தை ஸ்டாட் பண்ண வாகனம் இயங்கவில்லை. அப்படியே ஸ்டாட் பண்ணு என்று கூறிவிட்டு, வாகனத்தின் அடியில் தலைவைத்தார். மறுகணம் பரமசிவன் இறையடி சேர்ந்தார். இரத்தம் காரைச்சுற்றி பரந்துகிடக்கின்றது. தாய் பொட்டுப் பூவை இழக்க, மகன் தலை மயிரை இழக்க, அவர்கள் வாழ்வில் ஒரு ஒளித்தீபம் அணைகின்றது.

அன்றுமுதல் தாயின் பராமரிப்பில் வளர்ந்த சரவணன் இன்று ஓர் பட்டதாரி. ஆனால் இன்னும் அவன் வாழ்வு இருளாகத்தான் இருக்கின்றது. காரணம் அவன் வாழ்வில் இறுதியாய் ஒளிர்ந்த அன்னை எனும் மெழுகுவர்த்தி அணைந்து அன்றுடன் இரு வருட முடிவுகள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நிஜமேடை வருகின்றான் சரவணன்.

அன்புக்கு ஏங்கிய அவன் மனதில் அதுவரை இல்லாத ஓர் உணர்வு. இது மகிழ்ச்சியா, இன்பமா, நேசமா அல்லது உறவா என்று அவனுக்குப் புரியவில்லை. காரணம் அந்த கூட்டத்தில் அன்பே உருவான நேசமே கருவான ஓர் பெண்ணைக் காண்கின்றான். கண்ட உடனே அவன் மனது அவள் பொற் பாதங்களில் பூவாய் மலர்ந்து வருகின்றது. அவன் அவளைக் காண்கின்றான், அவள் அவனைக் காணவில்லை ஒலிபெருக்கியில் அவனுடைய பெயரை மட்டுமே அறிகின்றாள். நிகழ்வு முடிகின்றது ஜனாதிபதியும் அனைத்து பட்டதாரிகளுக்கும் பட்டம் சூட்டி முடிவுற்றது. நிகழ்வு முடிவுற்றதும் அவள் நினைவுகள் அவனை விடவில்லை. அவள் ரி.வி.எஸ்.ஸின் பின்னே அவளுக்கு தெரியாமல் இவனும் தொடர்கின்றான். அவள் வீட்டை கண்டுவிடுகின்றான். அவள் வீட்டிற்கு முன்னுள்ள ஓர் சாதாரண மெக்கானிக் கடையில் தன்னைப் பட்டதாரி என்று காட்டிக்கொள்ளாமல், படிப்பறிவு இல்லாதவன் போல் அக்கடையில் வேலைக்குச் சேருகின்றான். காரணம் அவளை நேசிக்க வேண்டும் என்ற ஒரே மனம். அன்று முதல் அவளை அவன் அணு அணுவாக ரசிக்கின்றான். இது ஓர் புனிதமான காதல் என்று அவன் அறிவான், அவள் அறியப்போகின்றாள்.

அவன் அந்த கடைக்கு வேலைக்குச் சேரும் முதல் நாள் நண்பர்களிடம் தன்னை யார் என்று அப்பெண்ணிடமோ கடைக்காரரிடமோ கூறவேண்டாம் என்று கூறிவிட்டான். காரணம் அன்பு அறிவாலோ, பணத்தாலோ, அழகாலோ, தகுதியாலோ வரக்கூடாது, அன்பு மனத்தாலே உருவாக வேண்டும் என்பது அவன் தாய் அவனுக்குக் கூறிய இறுதிமொழிகள். அதை தெய்வ வாக்காகக் கொண்டுள்ளான் சரவணன்.

வழமைப்போல சரவணன் மெக்கானிக்கடையில் வேலை செய்வதோடு அப்பெண்ணையும் நேசித்துக்கொண்டே இருக்கின்றான். ஒரு நாள் அவள் மெக்கானிக் கடைக்கு அருகாமையில் வரும்போது வாகன ஒயில் ஊற்றிக்கிடந்ததைக் கவனியாது சென்று வழுக்கி விழ, தன் உயிரைப் பணயம் வைத்து தன் நேச மலரைக் கீழே விழாமல் பிடிக்கின்றான். விழுந்திருந்தால் உடைந்த கண்ணாடிகள் கீழே, என்ன நடந்திருக்கும் ஒரு தரம் நினைக்கவே அவளுக்கு இதயமே சுழன்றது. ஆனால் சரவணன் கீழே விழுந்து அவன் முதுகில் ஓர் கண்ணாடித் துண்டு தோடம்பழத்தில் கத்தி உட்செல்வது போல் இறங்கியிருக்க, அவள் கண்களில் கண்ணீர் சொரிகின்றது. மருத்துவமனையில் சேர்த்து ஓரிரு நாட்களின் பின் சத்திரசிகிச்சை முடிய, அவள் சரவணனிடம் முதன் முதலாக தேங்ஸ் என்று கூற, அவன் நன்றி வேண்டாம் உங்கள் அன்பு வேண்டும் என்று பிராங்காக கூறிவிடுகின்றான். அவள் அப்போது ஒன்றும் பேசாது சிறிது நேரத்தின் பின் கூறுகின்றாள், "நான் இரண்டு வருடமாக விஞ்ஞான துறையில் முதலிடம் பெற்ற சரவணனை நேசித்து வருகின்றேன்; காரணம் எனக்கு அவனிடம் பிடித்தது அவனுடைய நற்குணமே தவிர, அவனுடைய படிப்போ அல்லது அறிவோ இல்லை. ஆனாலும் அவனை நான் இன்னும் நேரில் காணவில்லை. அவன் உங்கள் வடிவில் இந்த அன்புடன் இருக்கவேண்டும்" என்று நீங்கள் எனக்காக இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும் என்று கூறுகிறாள். இவன் சாதாரண மெக்கானிக் என்று எண்ணி சரவணனிடமே தன் இதயத்தில் உள்ளவற்றைக் கொட்டி விடுகின்றாள். அப்போது சூழ இருந்த நண்பர்கள் பாய்ந்து சென்று இவனே அவன், அவனே இவன் உங்களுக்காகவே இத்தனை கஷ்டமும் பட்டான், இவன்தான் விஞ்ஞான பட்டதாரி சரவணன் என்று கூற, இருவரும் காதலில் இணைய, அவர்களின் திருமணமும் முடிய, உண்மை அன்புடன் இருவரும் சுகமாக வாழ்ந்தார்கள். அப்போதும் தன் அன்னை கூறிய வாக்குகளான அமைதியாய் இருங்கள் அனைவரையும் வசப்படுத்தலாம், அன்பே வெல்லும் போன்ற வார்த்தைகள் சரவணன் தம்பதியர் வாழ்வில் என்றும் ஒலித்துக்கொண்டிருந்தது. இதுவே அனைவரினதும் வாழ்விலும் ஒலிக்க சரவணன் இறைவனை வேண்டிக் கொண்டான்.



-சி.தினேஷ், மாத்தளை.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

ஒருவர் செய்யும் குற்றங்களை மறந்து அவரை மன்னிப்பது தெய்வத்தன்மையுடையது என்று வெகு சுலபமாகக் கூறி விடலாம். ஆனால், அதனைச் செயற்படுத்துவதில்தான் சிரமமுள்ளது. ஏனெனில், சொல்லுதல், யார்க்கும் எளிது என்பதனை ஏற்கனவே கண்டுபிடித்துச் சொல்லிவிட்டார்கள். எல்லாவற்றிற்கும் மனத்தினுள் தோன்றுகின்ற நல்ல எண்ணங்கள்தான் செயற்பாட்டிற்குத் தூண்டுதலாக இருக்கிறது. என்னும் உண்மை நிலை எத்தனையோ பேரிடத்தும் முகத்தளவில் வெளிப்பட்டு விடும். இதற்கு எந்தவொரு தடையும் விதிக்க முடியாது. அப்படி அதை மறைப்பதற்காக எடுக்கின்ற பொய்யான நடிப்பு வெகுநேரம் நிலைப்பதுமில்லை. மனதிலுள்ள வேகம், அதனைக் காட்டிக் கொடுத்துவிடும். ஆதலின் மனத்துள்ள நிறைவுதான் உண்மையான மன்னிப்புக்கு வழிவகுக்கும். ஒருவர் செய்த தீமையை மறந்து நல்லவைகளை மனதிற் கொள்ளாதவரை மன்னிக்கும் மனப்பக்குவம் வர வாய்ப்பில்லை.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"
*குறள் : 706*

தன்னை அடுத்துள்ளதை தன்பாற் கொண்டு வெளிக்காட்டும் கண்ணாடிபோல் ஒருவரின் நெஞ்சில் உள்ளதை (உணர்வை) முகமே வெளிக்காட்டும் கண்ணாடியாகும்.



இத்தனை நாளாக அடக்கிவைத்திருந்த எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள இருவருக்கும் கிடைத்த இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணியவர்கள் இருவருந்தான். ஆனாலும், பெண்மைக்கு அணிகலனானவள் மரகதவல்லி என்பதால் நாணம் அவளை ஆட்கொண்டு விட்டதை உணர்ந்த விக்கிரமன், மெதுவாக அவளைத் தான் அமர்ந்திருந்த பஞ்சணைக்கு அழைத்துச் சென்று அமரவைத்தான். அவள் வெட்கத்தில் துவண்டாள். பெண்கள் வெட்கப்படுவதிலும் ஓர் அழகைக் கண்டு மகிழ்வதில் ஓர் மனப்பூரிப்பு இருப்பது ஆணுக்குக் கைவந்த கலை தானே!

"அழகென்று நான் சொல்வேனா? அழகுக்கு அழகு செய்யும் அற்புதப் பெண் பாவை நீ. அந்தி வெய்யில் பட்டு மின்னுகின்ற பளிங்குச் சொரூபம் உன் மேனி. காளையரைக் கட்டியிழுக்கும் உன் கருங்கூந்தல், கரைபுரண்டோடும் உன் செவ்விதழில் அமுதம், இத்தனையும் பெற்றபின்பும், எதற்காக உன் இடையை மட்டும் இத்தனை சிறிதாக்கினான், உனை வடித்த இறைவன் எனும் சிற்பி? எழில் ததும்பும் கை வளையல்கள் உன் இடைக்குப் பாரமாகி விடுமே என்று எண்ணும்போதெல்லாம் என் இதயம் எத்தனை துன்பப்படுகிறது தெரியுமா உனக்கு?" என்று தன்னை

உங்களைப் புகழ்வதற்கு? நீங்கள்தான் நித்தியப் பிரமச்சாரியாச்சே!" என்று மரகதவல்லி கூறியதும், "என்னைப்பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது?" என்றான் விக்கிரமன். அவன் பேச்சில் சலிப்பும் வெறுப்பும் கலந்திருந்ததைக் கவனித்த மரகதவல்லி, "உங்களைப்போல் வர்ணிப்பதற்கு நான் ஒன்றும் கவித்துவம் படைத்தவளல்லத்தான், ஆனால்...,"

"ஆனால் என்ன?" "மன்மதன் என்று ஒரு புராணக் கதையில் படித்திருக்கிறேன். அதில் கூறப்பட்ட இலக்கணங்கள் உங்களைக் கண்டுதான் வரைந்தார்களா? என்ற ஐயம் முதன்முதலாக உங்களைக் கண்டபின்தான் தெளிவானது."

## இன்பங்கள் கோடி பெறும்



அதிலும் விக்கிரமன் சாகசக் கலைகளெல்லாம் கற்றுத் தேறியவனாயிற்றே, ரசனைக்குப் பஞ்சமா இருக்கும்?

மரகதவல்லி அவன் முகத்தை நேராகப் பார்க்க முடியாமல் தவித்தாள். எதையும் பேசுவதற்கு அவள் நா எழவில்லை. இதைக்கண்டதும் விக்கிரமன், "மரகதம் ஏன் பேசாமலிருக்கிறாய்?" என்றவாறு அவள் நாடியை மெதுவாக நிமிர்த்தி தன் முகத்துக்கெதிராக எடுத்தபோது, மரகதவல்லியின் காந்தக் கண்கள் அவன் முகத்தை எதிர்நோக்கின. "எதைப் பேச வேண்டும்?" என்ற கேள்வி அவள் செவ்விதழில் இருந்து வெளிவந்த போது, "எதைப் பேசுவதா? நாம் இணைந்த இந்த இணைப்பின் பெருமையைக் கூறுவதென்றாலே, அவை ஏட்டில் அடங்கக்கூடியனவா? வானத்தில் தோன்றுகின்ற நட்சத்திரங்களை

**தருவது கற்பகன்**

எண்ணிக்கொண்டாலும், எங்கள் இந்த இனிய சந்திப்பின் பெருமையைச் சொல்லுவதற்கு ஒரு கவிஞனால் கூட முடியாதே மரகதவல்லி. இந்தப் பொன்னான நேரத்தில் உன் மழலை மொழி என்னை சொர்க்கத்துக்கே அழைத்துச் செல்லுமே! எங்கே? உன் செவ்விதழ்கள் மலர்கின்ற போதெல்லாம், என் செவிகளுக்குத் தேன் பாய்ச்ச வேண்டாமா? பேசு கண்ணே! பேசு"

"ஏது, கவிஞராலும் முடியாது என்று கூறிவிட்டு நீங்களே கவிமழை பொழிகிறீர்களே? நான் அத்தனை அழகாகவா இருக்கிறேன்?" என்றவள் இலேசாகத் தன் சுட்டுவிரலால் அவன் உதட்டைத் தொட்டாள்.

மறந்தவன்போல் சொல்லிமுடிப்பதற்குள்...

"அப்பப்பா! இத்தனை பொய்யையும் எங்கே கற்றுக் கொண்டீர்கள்? கம்பனைக்கூட வென்று விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்ற மரகதவல்லியை முறைத்தான் விக்கிரமன். 'ஏன் என்மீது கோபப்படுகிறீர்கள்? நீங்கள் கூறியதுபோல், நான் அழகாகவா இருக்கிறேன்?" என்றாள் செல்லமாக.

"மரகதம்! உன் அழகை வர்ணிப்பதற்குக் கூட எனக்கு உரிமையில்லையா?" என்று விக்கிரமன் வினவியதும், 'நீங்கள் மட்டும் என்னவாம்?" என்று உதட்டைச் சுளித்தாள் மரகதவல்லி. 'என்னைப்பற்றி இதுவரை யாரும் புகழ்ந்ததில்லையே!" என்றதும், "யாரை விட்டீர்கள்

என்றவள் ஓரக்கண்ணால் விக்கிரமனைப் பார்த்தாள். இதைக் கேட்டதும் விக்கிரமன், "அவனது அங்க இலக்கணங்களைக் கேள்விப்பட்ட உனக்கு, அவன் செய்யும் லீலைகளையும் அறிந்திருப்பாய் தானே? அப்படி அறியாவிட்டால், இன்றாவது அறியலாமல்லவா?" என்றான் குறும்பாக. "ஐயய்யோ! வேண்டாம் வேண்டாம் அவை மிகக் கொடுமையானவை." என்றவள், விக்கிரமனை மஞ்சத்தில் தள்ளிவிட்டாள். மஞ்சத்தில் சாயும் போதே மரகதவல்லியையும் பற்றியவாறு சாய்ந்த விக்கிரமனின் மார்பில் சங்கமமானாள் மரகதவல்லி.

*"கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருகுவார்*
*நுண்ணியர் எங் காதலவர்."*

அதி - 113.
குறள் - 1126.

## சிந்தியா பதில்கள்

**வடக்கு - கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் படுகொலைகளைக் கண்டித்து பொங்கு தமிழ் நிகழ்ச்சி ஒன்று நடத்தினால் நன்றாக இருக்காதா?**

*-மு.விக்னேஸ், யாழ்ப்பாணம்.*

பொங்கு தமிழ் சமூகம் எப்போதோ தமது அரசியல் பணிமனைகளை இழுத்து மூடிவிட்டு தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போய்விட்டதே, உங்களுக்குத் தெரியாதா?

**இந்தியாவுக்குப் போன தமிழ் கூட்டமைப்பு எம்.பி.மார். பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பார்களா? மாட்டார்களா?**

*-வீ.சடகோபன், நெளுக்குளம்.*

இருந்து சந்தித்துவிட்டு வரட்டுமே, அவசரமாக இலங்கைக்குத் திரும்பித்தான் என்ன செய்யப்போகிறார்கள்.

**முரசின் விற்பனையைப் புலிகள் தடுத்தாலும், முரசை முதலில் வாங்கிப் படிப்பவர்கள் புலிகள் தான்! அது உமக்குத் தெரியுமா?**

*-டி.சிவநாயகம், மன்னார்.*

தெரியுமே, உதாரணத்துக்கு முகமாலையில் புலிகளின் முன்னரங்கக் காவல் அரண் படையினரால் கைப்பற்றப்பட்டபோது, அங்கு



*சாசனம்*
*அரவிந்தசாமி – கௌதமி*

தினமுரசு பத்திரிகைதான் அரண்களில் மடித்து ஒளித்து வைக்கப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

**தலைநகரில் வாழும் தமிழ் மக்களுக்கு உருப்படியான தமிழ்த் தலைமை இல்லையே, இது யாருடைய தவறு?**

*-என்.ராஜ்குமார், கிருலப்பனை.*

மக்களின் தவறு.

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரிக்கு சகிப்புத் தன்மைக்காகவும் வன்முறை எதிர்ப்புக்காகவும் யுனஸ்கோ மதன் ஜித்சிங் விருது வழங்குகிறது. சம்பந்தருக்கு என்ன விருது கிடைக்கும்?**

*-வை.முரளிதரன், வெள்ளவத்தை.*

ஒரு காலத்தில் ஒஸாமா விருது கூடக் கிடைக்கலாம். இப்போதைக்கு மாமனிதர் விருது தயார் நிலையில் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

**என்னையும் யாராவது கடத்திக் கொண்டுபோய் வைத்துவிட்டு விடுவித்தால், நான் வீஸா கேட்டு விண்ணப்பிக்கலாம் என்று நினைக்கிறேன். யாரும் வந்து என்னைக் கடத்துகிறார்களில்லையே?**

*-திருச்செல்வம், கொட்டாஞ்சேனை.*

வில்லங்கமான விருப்பமாக இருக்கிறதே! அவனவன் கொலை வெறியோடு திரிகிறான். நீர் என்னடாவென்றால் விடுவிப்பு. வீஸா என்று கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறீர். கடத்திக் கொண்டு போறவனே உமக்கு வீஸா கொடுத்தால் நிலைமை என்னாவது? அது சரி, உம்மைக் கடத்துவதற்கு நீர் யார் ஊடகவியலாளரா அல்லது வர்த்தகரா... இவை இரண்டில் நீர் ஏதாவது ஒரு பதவி வகிக்க வேண்டும். அது தான் நீர் கடத்தப்படுவதற்குத் தகுதிகள் புரிகிறதோ?

**குருபரன் கடத்தப்பட்டதற்குக் காட்டப்பட்ட பரபரப்பும் - கண்டனங்களும் ஏனையவர்கள் கடத்தப்படுவதில் காட்டப்படவில்லையே, என்னய்யா இது கண்டிப்பதில் கூடவா பாரபட்சம்?**

*-து.மோகனதாஸ், தென்னக்கும்பர.*

சபாஷ்! சரியான கேள்விதான். ஒவ்வொருவரின் முகத்திலும் முட்டியால் ஓங்கி பத்துப் பத்துக் குத்து குத்தினதுக்குச் சமமான கேள்வி. இதைத்தானே நானும் ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறேன். "கொலைகளையும், கடத்தல்களையும், தகுதி தராதரம் பார்த்துக் கண்டிப்பதும், குரல் கொடுப்பதும் அவை தொடரவே வழிவகுக்கும்" என்று. இதில் கடத்தல்காரன் மனந்திருந்தினாலே தவிர, மற்றவர்கள் மனிசனா திருந்தவே இடமில்லை.

**ஆறு மாதங்களாக விளையாடாமல் இருந்துவிட்டு, மலேசியாவில் நடக்கும் முக்கோணத் தொடரில் சச்சின் சென்சுரி அடித்து அசத்தினாரே பார்த்தீரா?**

*-எம்.ஏ.முனௌபர், மருதானை.*

நான் பார்த்தது இருக்கட்டும். லாராவே சச்சினை கிரிக்கெட் மேதை என்று புகழ்ந்தாரே அதுதான் சச்சின். சதங்களின் நாயகன் என்று நாம் அழைப்போம். இன்னொரு விடயம், அந்தத் தொடரில் இந்திய அணியின் நிலைமை அபாயக் கட்டத்தைத் தாண்டவில்லையே... பாவம், இந்திய அணி இலங்கைக்கு வந்தாலும், மலேசியாவுக்குப் போனாலும் மழை விடுவதாக இல்லை.

**பதினேழு தொண்டுப் பணியாளர்களின் உருக்குலைந்த சடலங்களையும் மீண்டும் தோண்டி எடுத்து எதைக் கண்டுபிடிக்க முடியும்?**

*-ப.நந்தினி, உவர்மலை.*

விஞ்ஞானம் வளர்ச்சிகண்டுள்ள நிலையில், விசாரணையில் முன்னேற்றங்களும் ஏற்படலாம். இதே போன்றதொரு படுகொலைச் சம்பவம் பொத்துவிலிலும் நடந்துள்ளது. பத்து முஸ்லிம்களை கழுத்தை வெட்டிக் கொலை செய்திருக்கிறார்கள். அந்த விசாரணைகளும் மிக நேர்த்தியாகச் செய்யப்பட்டு குற்றவாளிகள் இனங்காணப்பட வேண்டும். பாரபட்சமற்ற, நடுநிலையான விசாரணை அவசியம்.

**தமிழ் பட இயக்குநர் சீமானின் முகவரி, தொலைபேசி இலக்கம் இரண்டையும் தயவு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்?**

*-கௌதம், திருகோணமலை.*

எதிர்காலத்தில் ஒரு இயக்குநராக வர வாழ்த்துக்கள் கௌதம்.

இயக்குநர் சீமான்,
98, வெங்கடேசா நகர்,
2ஆவது குறுக்குத் தெரு,
விருகம்பாக்கம், சென்னை - 600092.
கைத் தொலைபேசி:- 0091 - 9444044078.

**தற்போதைய சினிமாவில் வெட்டும், குத்துமாக இருக்கையில் வடிவேலுவின் '23ஆம் புலிகேசி' வெற்றி பெற்றதே, அதுபோலே இனி படங்கள் வருமா?**

*-எம்.நிலந்தி, கண்டி.*

இயக்குநர் மகேந்திரனின் 'சாசனம்' பாத்திருந்தால் இன்னொரு மாதிரியாக இருந்திருக்கும். படத்தின் கதையும் அரவிந்தசாமியின் நிஜவாழ்வும் ஒரே மாதிரி என்பதாலோ என்னவோ ஒன்றித்து நடித்திருக்கிறார். நாயகிகளாக கௌதமியும், ரஞ்சிதாவும் மீள் பிரவேசம் செய்திருந்தாலும் அபாரமான நடிப்பு - ஒரு படி மேலாக ரஞ்சிதாவின் நடிப்பைப் பாராட்டலாம். மகேந்திரனின் துணிச்சலான முயற்சி இரசிக்கும்படியாக உள்ளது.

**தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய சிந்தியாவின் இலக்கியச் சிந்தனை எப்படி இருக்கிறது?**

*-ரியாஸ் மொகமட், புத்தளம்.*

புதியவர்களுக்கு களம் கொடுக்காமல் படைப்பாளிகளைக் கண்டுகொள்ளாமல் ஒரு சிலர் குண்டுச் சட்டிக்குள் கழுதை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிலரின் எழுத்தில் இருக்கும் பரந்த நோக்கு அவர்களின் சுயத்தில் இல்லை. புதிய படைப்பாளிகள் இந்த இரும்புத்திரையை உடைத்துக் கொண்டு தான் முகம் காட்ட வேண்டும்.

**அரசு - எதிர்க்கட்சிகளுக்கிடையில் நடைபெறும் இணக்கப் பேச்சுக்கள் வெற்றியளிக்குமா?**

*-எம்.எஸ்.சர்தார், சிலாபம்.*

ஆரம்பத்திலேயே ஏன் நம்பிக்கையீனம். இப்போதுதான் இரண்டு கட்டம் முடிந்திருக்கிறது. இறுதிவரை பொறுமையோடு இருக்கலாமே. எல்லாம் ஒரு முயற்சிதான்.

**விண்வெளியில் மிதக்கும் சர்வதேச ஆய்வுகூடத்திற்கு தற்போது அட்லாண்டிஸ் விண்கலமும் முன்னர் கொலம்பியா டிஸ்கவரி என்ற விண்கலங்களும் சென்று வந்தன. இவை பயணம் செய்யும்போது விண்வெளியில் சுற்றிவரும் செயற்கைக் கோள்களுடன் மோதி விடாதா?**

*-ரமேஷ், புதுக்குளம்.*

இல்லை. விண்வெளியில் விடுங்கள். எமது சாதாரண வானவெளியையே எடுத்துக் கொள்ளுங்கள். தினமும் பல்லாயிரக்கணக்கான விமானங்கள் பறப்பை மேற்கொள்ளுகின்றன. அவை மோதி விடாதபடி எவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்படியிருக்கையில் விண்வெளியில் பூமியை சுற்றிவரும் செய்மதிகள், அவற்றின் சுற்றுவட்டம், பயணநேரம் துல்லியமாகக் கணிக்கப்பட்டே விண்கலம் செலுத்தப்படும். நாசாவில் இவற்றினை கண்காணிப்பது நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் இல்லை. ஆயிரக்கணக்கானவர்கள்.

**வோட்டர் தெரபி என்று கேள்விப்பட்டேன். அது என்ன சிகிச்சையா?**

*-ஜனுல் ஷிபானா, மருதமுனை.*

தாராளமான நீர் அருந்துவதன் மூலம் உடல் நலனைப் பேணுவதை வோட்டர் தெரபி ஆகும். சுத்தமான நீரில் கொலஸ்ரோல், சீனி, உப்பு எதுவும் இல்லை. எனவே தாராளமாக நீர் அருந்தி உடல் நலனை பேணுங்கள் என்பதே வோட்டர் தெரபி ஆகும். வோட்டர் தெரபி மேற்கொள்பவர்கள் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் தாராளமாக நீர் அருந்துவார்கள் என்பது மற்றுமோர் தகவல்.

# ஆந்திராவில் ஆயுதக் கடத்தல்!

அண்மையில் தென்னிந்திய ஆந்திர மாநிலத்தில் பெருந்தொகையான ரொக்கற் குண்டுகளும் அதற்குரிய லோஞ்சர்களும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியாவினையும் இந்திய பாதுகாப்புத் தரப்பினரையும் ஓர் உலுக்கு உலுக்கியுள்ளது.

இந்தியாவில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படுவது என்பதோ அல்லது குண்டுவெடிப்புக்கள் என்பதோ ஒன்றும் புதுமையான விடயங்கள் அல்ல. மும்பாய் தொடர் குண்டு வெடிப்புக்கள், கோவை குண்டு வெடிப்புக்கள் எனப் பல தாக்குதல்கள் நிகழ்ந்துதான் உள்ளன.

ஆனால் அவை யாவும் நேரடித் தாக்குதல்கள் அல்ல. நேரம் குறித்து வைக்கப்பட்டு மறைந்து நின்று நடாத்தப்பட்ட தாக்குதல்கள். ஆயினும் ஒரு நேரடித் தாக்குதலுக்கு தயார்படுத்தப்பட்டதைப் போல ஆளணி பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் பெருந்தொகை யான ஆயுதங்கள் அதுவும் ரொக்கற் லோஞ்சர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமைதான் இந்திய பாதுகாப்புத் தரப்பினரின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.


கைப்பற்றப்பட்ட மாதிரி ஆயுதம்.

சரி என்னதான் நடந்தது?

கடந்த செப்டெம்பர் 8ஆம் திகதி சென்னை ஆந்திர நெடுஞ்சாலையில் பிரகாசம் மாவட்டம் மகபூல் நகர், நல்ல மங்கலா வனப்பகுதி ஆகிய இடங்களில் வழமை போலவே ஆந்திரப் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான லொறிகளை மடக்கி சோதனையிட்டபோது, இரும்பு உதிரிப்பொருட்கள் என லேபல் ஒட்டப்பட்ட சாக்கு மூடைகளுள் இருந்து 875 ரொக்கற் குண்டுகளும், 27 ரொக்கற் லோஞ்சர்களும், 70 ஜெலட்டின் குச்சிகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.


லொறிச் சாரதி, மற்றும் கிளீனரைக் கைது செய்து பொலிஸார் விசாரித்தபோது சென்னையைச் சேர்ந்த கிராந்தி ரான்ஸ்போட் எனும் நிறுவனம் ஊடாக, திண்டி அனுமந்த ரெட்டி என்பவருடைய பொருட்களே அவை என்று தெரிவித்தனர். இதற்கு மேல் அவர்களுக்கு எந்த விடயமும் தெரிந்திருக்கவில்லை.

உடனடியாகச் செயல்பட்ட ஆந்திர பொலிஸார் திண்டி அனுமந்த ரெட்டியைக் கைது செய்து விசாரித்த போது பல அதிர்ச்சித் தகவல்கள் வெளிவந்ததுடன் அவர் மாவோ தீவிரவாத இயக்கத்துடனும் தொடர்புடையவர் என்ற விடயம் தெரியவந்தது.

விசாரணை அறிக்கைகளைப் பெற்றுக்கொண்ட ஆந்திரப் பொலிஸார் சிறிதும் தாமதமின்றி சம்பந்தப்பட்ட விபரங்களை சென்னை பொலிஸ் கமிஷனருக்கும் வழங்கி விரிவான விசாரணைகளை நடாத்துமாறு கோரினர்.

தற்போது சென்னை மாநகர பொலிஸ் கமிஷனராக பதவி வகிப்பவர் லத்திகா சரண். வட இந்திய பெண்மணியான லத்திகா சரண், அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவராலும் நன்கு அறியப்பட்ட ஓர் துடிப்புள்ள திறமையான அதிகாரி. இதன் காரணமாகவே கடந்த தமிழக ஆட்சி மாற்றத்தின் பின் பல பொலிஸ் அதிகாரிகள் பந்தாடப்பட்ட போதும் லத்திகா சரண் விடயத்தில் எந்த அரசியல் தலையீடோ குறுக்கீடோ இதுவரை இடம்பெறவில்லை.

ஆந்திரப் பொலிஸாரின் அறிக்கைகளை பெற்றுக்கொண்ட லத்திகா சரண், உடனடியாகவே செயலில் இறங்கினார். அவரின் நேரடித் தலைமையில் கிராந்தி ரான்ஸ்போட் நிறுவனம் செயல்படும் அம்பத்தூர், வோல்டோக்ஸ் றோட், கிண்டி, ராயப்பேட்டை, வண்ணாரப்பேட்டை, வளசரவாக்கம் ஆகிய 6 இடங்களிலும் ஒரே நேரத்தில் அதிரடி சோதனை நடாத்தப்பட்டது.


ஆயுதம் தயாரித்த இடம்

இந்த சோதனை நடவடிக்கைகளின் போது ஆயுதங்கள் ஏதும் கைப்பற்றப்படாவிட்டாலும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்படி 10.08.2006 அன்று 54 சாக்குகளில் 2 தொன்னும், 9.05.2006 அன்று 53 சாக்குகளில் 2 தொன்னும், 11.05.2006 அன்று 1120 கிலோவுமாக மூன்று தடவைகளில் இதே போன்று ஆயுதங்கள் அனுப்பப்பட்ட விடயம் தெரியவந்தது.

மேற்படி ஆயுதங்கள் சீனிவாச ரெட்டி, ராமரெட்டி என்ற இருவருக்கே அனுப்பப்பட்டது என்ற தகவலை தெரிந்து கொண்டனர். மேலதிக விசாரணைகளை நடாத்திய சென்னை பொலிஸார், சீனிவாச ரெட்டி ராமரெட்டி ஆகியோருக்கு அனுமந்த ரெட்டி என்ற கையாள் இருப்பதை அறிந்து அவனைக் கண்காணித்துக் கைது செய்தனர்.

பொலிஸ் தோரணையில் அனுமந்த ரெட்டியிடம் விசாரணை நடாத்திய பொலிஸார், அவன் சொன்ன தகவல்களின் பேரில் ஆந்திராவில் உள்ள கிராந்தி லொறி ரான்ஸ்போட் கோடவுனை சோதனையிட்டு 53 சாக்கு மூடைகளைக் கைப்பற்றினர். அவற்றுள் 600 ரொக்கற் குண்டுகளும், 15 ரொக்கற் லோஞ்சர்களும் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்த எடை 2 தொன் ஆகும். ஒவ்வொரு ரொக்கற் குண்டும் 28 அங்குலம் நீளமானது. அது போல லோஞ்சர்கள் ஒவ்வொன்றும் 3 அடி நீளமானவை.

தோண்டத்தோண்ட ஆயுதங்களும் முக்கிய திருப்பு முனைகளும் வந்து கொண்டிருந்ததை அடுத்து கடந்த 13ஆம் திகதி ஆந்திர டி.ஜீ.பீ. சுவரன்ஜித் சென், சென்னை வந்தடைந்தார். விறுவிறுப்பாக விசாரணைகள் நடாத்தப்பட்ட போதும் ஆந்திர, டி.ஜீ.பீ. சுவரன்ஜித் சென் தங்கியிருந்த இடம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததுடன் விசாரணை முடியும்வரை பத்திரிகையாளர்கள் சந்திக்கவும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

ஆந்திர தமிழ்நாடு பொலிஸ் உயரதிகாரிகள் கூட்டாக விசாரணைகளை தற்போது ஆரம்பித்துள்ளனர். இதில் அரசியல்வாதிகள் முதல் பத்திரிகையாளர்கள் வரை கேட்கும் முக்கிய கேள்வி இந்த ஆயுத உற்பத்திக்கும் புலிகளுக்கும் தொடர்பு உள்ளதா? என்பதுதான்.

பொலிஸ் தரப்பில் இதற்குக் கிடைத்த மறுமொழி இல்லை என்பதுதான். எவ்வாறு விசாரணை முடிவுறாமல் இல்லை எனப் பொலிஸார் சொல்கின்றார்கள் என்ற சந்தேகம் எழுந்த போது, ஓய்வு பெற்ற உளவுத்துறை அதிகாரி ஒருவர் சொன்ன விடயம் விசாரணை திசைதிரும்பவோ அல்லது தகவல்கள் கசியவோ கூடாது என்பதுதான்.

புலிகளுடன் இந்த ஆயுத உற்பத்திக் கடத்தலை வேறு கோணத்தில் தொடர்பு படுத்தவேண்டிய தேவை உண்டு எனத் தெரிவித்த அந்த ஓய்வு பெற்ற உளவு அதிகாரி இந்தியாவில் உள்ள தீவிரவாதிகள் தாக்கிவிட்டு


விசாரணை அதிகாரி

ஓடி ஒளியும் பாணியிலேயே இயங்குகின்றார்கள். மேலும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என ஏதும் இல்லை. ஆனால் இவ்வளவு பெருந்தொகையான ரொக்கற் லோஞ்சர்களையும் பாவிப்பவர்கள் நன்கு பயிற்சி பெற்ற ஓர் மரபுப் படை வைத்திருப்போராகவே இருக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

அப்படியாயின் ஏன் சென்னையிலிருந்து ஆந்திராவிற்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்பட்டன?

அதற்குப் பதிலளித்த அந்த அதிகாரி தமிழ்நாட்டைச் சுற்றியும் கடற்பகுதி பலத்த பாதுகாப்புடன் உள்ளது. ஆந்திர கடற்பகுதியிலோ கெடுபிடிகள் இல்லை. எனவே வங்கக் கடல் ஊடாக ஆயுதக் கடத்தல் சாத்தியமே எனவும் கூறினார்.

இதில் இன்னுமொரு சந்தேகமும் எழுந்துள்ளது. மேற்படி ஆயுதக் கடத்தலில் 500 கோடி இந்திய ரூபாய்கள் கைமாறி உள்ளது. இவ்வளவு பெருந்தொகைப் பணம் வழங்கக்கூடிய சக்தி யார்? என்பதே அடுத்த கேள்வி.

**பிந்திய தகவல்:**

இந்த ஆயுத உற்பத்தி மற்றும் கடத்தலில் ரகு எனும் பாரத் லைன் என்ஜினியரிங் நிறுவன முக்கியஸ்தரும் அவரது மனைவி அல்லது காதலியான சுதாராணியும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரும் தற்போது தமிழ்நாட்டினை விட்டு வெளியேறி தலைமறைவாக வாழ்ந்து வருகின்றார்களாம். ராஜீவ் காந்தி கொலையின்பின் சிவராசனும் சுபாவும் தமிழ்நாட்டினை விட்டு வெளியேறி தலைமறைவாகி இருந்தது ஞாபகம் வருகின்றதா

## பஸ் தரிப்பிடம்...

6ஆம் பக்கத் தொடர்ச்சி

அவ்விடத்தில் பஸ்ஸுக்காக நிற்பார்கள். ஆனால் தரிப்பிட கட்டிடத்துக்குள் போக மாட்டார்கள். உள்ளுக்குள் எப்போதும் ஒரு பிச்சைக்காரன் தனது அழுக்கு மூட்டையுடன் அசிங்கப்படுத்திக் கொண்டு இருப்பான். இரவில் அதற்குள்ளேயே சிறுநீர் கழிப்பானாக இருக்கும். நாற்றம் சத்தி வர வைக்கும். அந்தப் பஸ் தரிப்பிடம் அவனுக்காகக் கட்டப்பட்ட வீடாக மாறியிருந்தது. அவனுக்கு யாரோ கொடுத்த பழைய சாப்பாட்டை அவனும் இரண்டு நாள் பழசாக்கி மூலையில் போட்டு வைத்திருப்பான். சில இரவுகளில் அவன் இருக்கை போல் இருக்கும் கட்டில் படுத்துக் கொள்வான். கீழே கவனிப்பாரற்ற தெரு நாயோ, மாடோ படுத்துக் கொள்ளும். அவை தங்கள் பங்குக்கு அந்த இடத்தை அசுத்தப்படுத்தி வைத்திருக்கும். இது நிரந்தரமான நிகழ்ச்சி நிரல்தான் என்றாலும், அவ்வப்போது நடக்கும் சில சம்பவங்களும் இருக்கத்தான் செய்கின்றன. தெருவில் போய்க் கொண்டிருக்கும் ஒரு சொறி நாய், எப்படிக் கண்டு பிடித்ததோ தெரியாது. சரியாகப் போய் பஸ் தரிப்பிடத்தின் பக்கமாக சுவரில் ஒரு பின்னங்காலை தூக்கி வைத்துக்கொண்டு சிறுநீர் கழித்து விட்டுப் போனது. அப்போதுதான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். இனிமேல் அந்தப் பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் போகக் கூடாது என்று. எனது அந்த முடிவை ஆமோதிப்பது போல் ஒரு மாடு, வீதியின் ஓரமாகப் புல் மேய்ந்து கொண்டு வந்து பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வந்ததும் பின்பக்கமாக சுவரில் முதுகைத் தேய்த்துக்கொண்டு போனது. நாய்க்கும் - மாட்டுக்கும் - பிச்சைக்காரனுக்கும் பஸ் தரிப்பிடத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிந்திருக்கிறது. எங்களுக்குத்தான் தெரியவில்லை.

இவை எதுவும் பஸ் வண்டி நடத்துனருக்கோ ஓட்டுனருக்கோ தெரிந்திருக்காது. அவர்கள் ஒரு அடையாளத்துக்காக இன்னும் அந்தத் தரிப்பிடத்துக்கு முன்னால் பஸ்ஸை நிறுத்திவிட்டுத்தான் போவார்கள்.

பஸ் வண்டி நிறுத்தப்படுவதும் - பின்னர் புறப்படுவதும் அந்தப் பஸ் தரிப்பிடக் கட்டிடத்திற்குள் படுத்துக் கிடக்கும் பிச்சைக்காரனுக்கும், அவனது தெரு நாய்க்கும் பெரிதும் இடைஞ்சலாக இருக்கும். சில வேளைகளில் பிச்சைக்காரன் அவனுக்குப் புரிந்த மொழியில் தலையைச் சொறிந்து கொண்டு ஏதோ திட்டுவான். காறித்துப்புவான். அதை யாரும் கண்டு கொள்ளமாட்டார்கள். ஆனால், அவனை யாரோ குழப்பி விட்டார்கள் என்பதை, அவன் வைக்கும் பழைய சோற்றைச் சாப்பிடும் அந்த நாய் புரிந்து கொண்டு நன்றிப் பெருக்கில், தரிப்பிடத்துக்கு அருகில் யாரும் வந்தாலோ, அல்லது பஸ் வண்டி நிறுத்தப்பட்டிருந்தாலோ அந்த நாய் காதை சட...சட என்று அடித்துக் கொண்டு கட்டிடத்தை விட்டு வெளியில் வந்து குலைக்கும்...நாய் குலைக்கத் தொடங்கியதும் பிச்சைக்காரன் மீண்டும் படுத்துக்கொள்வான். நாய் குலைப்பது பயணிகளில் யாருக்காவது பிடிக்காவிட்டால், யாரோ ஒருவர் கல்லை எடுத்து நாய்க்கு எறிவார். நாய் அதுவரை குலைத்த பாணியை மாற்றி இன்னொரு விதமாகக் குலைத்துக் கொண்டு ஓடும். அப்போது, யாரோ நாய்க்கு அடித்து விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டு பிச்சைக்காரன் எழுந்து வெளியில் வந்து பஸ்ஸையும், பிரயாணிகளையும் பார்த்து மண்ணை வாரி வீசித் திட்டுவான். இது பஸ் தரிப்பிடத்தில் நீண்ட நாட்களாக நடந்து வரும் வழமையான சம்பவமாகிப் போனது.

இப்போது அந்தப் பஸ் தரிப்பிடம் மேல் கூரை இல்லாமல், முன் பக்கமாக இருந்த அரை மதில் உடைக்கப்பட்டு இருக்கிறது. மதிலின் இரு பக்கங்களிலும், காதலன் - காதலியின் பெயர்களில் தொடங்கி தூஷண வார்த்தைகளும், இன்னும் புரியாத எழுத்துக்களுமாகப் பல நவீன ஓவியங்களோடு கீறப்பட்டு அழுக்குப்படிந்திருக்கிறது.

எனக்கென்னவோ ஒரு அழுக்குப் படிந்த சமாதி ஒன்று அந்த இடத்தில் இருப்பதுபோல் தெரிகிறது. ஊர் மக்கள் அந்தக் கட்டிடத்தை மறந்து விட்டார்கள் என்பது புரிகிறது.

பல புதிய பஸ் வண்டிகள் ஊருக்குள் இப்போது பாவனையில் இருக்கின்றன. கிழக்குக்கும் மேற்குக்கும் பஸ் பயணம் செய்த காலம் போய் இப்போது ஊரிலிருந்து நேராகக் கொழும்புக்கும் பஸ் வண்டி பயணம் செய்கிறது.

பஸ் வண்டிகள் நிறுத்துவதற்கு புதிய பஸ் தரிப்பிடம் கட்டப்பட்டு, அதற்கு முகாமையாளர், நேரக் கட்டுப்பாட்டாளர், வாயிலுக்குக் காவலாளி என்று ஊர் மாறி விட்டது.

மாற்றங்கள் அவசியமானது தான் என்றாலும் பழைமைகளை எப்படி மறந்து விடுகிறது மனசு? இப்படி மறைக்கப்பட்ட பழைமைகள் இன்னும் என்னென்ன ஞாபகத்துக்கு எட்டாமல் வளர்ச்சிக்குள்ளும், புதுமைக்குள்ளும் புதைந்து போயிருக்கிறதோ என்று நினைத்துப் பார்க்கிறேன்.

காலையில் சாப்பிட்டதை மாலையில் ஞாபகம் வைத்துக்கொள்ளாத மனித சமூகத்துக்குள் வாழ்ந்துகொண்டு அவர்கள் பழைமைகளை மறந்து விட்டார்கள் என்று புலம்புவதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

அந்தப் பிச்சைக்காரனும் - நாயும் இறந்து போயிருப்பார்கள். அவர்கள் ஆத்மா, அந்த பஸ் தரிப்பைச் சுற்றித்தான் இளைப்பாறிக் கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொள்கிறேன்.

# 150 கோடிக்கு குட்பை.

ஆண்டுக்கு 150 கோடி ரூபாய் சம்பளம். விளம்பரத்தின் மூலம் கிடைக்கும் வருமானங்கள் தனி. உலகெங்கும் ரசிகர்கள். யாராலும் வெல்ல முடியாத வேகம். இவையெல்லாம் கையில் இருக்கும்போது, எல்லாவற்றிற்கும் ஒரேயடியாய் குட்பை சொல்ல உங்களால் முடியுமா?

ஃபார்முலா ஒன் ரேஸ் உலகில் 15 ஆண்டுகள் கொடிகட்டிப் பறந்த மைக்கேல் ஷுமேக்கரால் முடிந்திருக்கிறது.

விளையாட்டுத்துறையில் இருந்து கொண்டு மிக அதிகமான பணத்தைச் சம்பாதித்தவர்(டெண்டுல்கரெல்லாம் இவருக்குப் பச்சா..) என்ற புகழுடனும், வீழ்த்த முடியாத வீரர் என்ற பெருமையுடனும் ரேசுக்கு குட்பை சொல்லிவிட்டார் ஷுமேக்கர்.

37 வயதான ஷு மேக்கரின் ஓட்டம் நான்கு வயதில் துவங்கியது. சிறுவயதிலேயே தனது மகனை ஒரு ரேஸ் வீரராக்கவேண்டும் என்று விரும்பிய தந்தை, 4 வயதில் அவருக்கு ஒரு கார்டிங் பரிசளித்தார். (நம்ம ஊர் எக்ஸிபிஷனில் இருக்குமே அது போன்ற குட்டிக்கார்) இதைத் தொடர்ந்து ஒரு கார்டிங் போட்டியில் ஷுமேக்கர் ஜெயிக்க, அன்று தொடங்கியது அவரது கார் காதல். ஜெர்மனியில் 16 வயதில்தான் ரேசில் கலந்துகொள்ள அனுமதி கிடைக்கும் என்பதால், சுவிற்சர்லாந்திற்குப் பயிற்சிக்காகப் பறந்தார். என்றும் சதா காரையே காதலித்தவர், 91-இல் ஃபார்முலா ரேசில் நுழைந்தார்.



ஷுமேக்கர்

ஷுமேக்கரின் முதல் சில ரேஸ் ஆண்டுகள் சாதாரணமாகத்தான் கழிந்தன. 1996-இல்தான் ஷுமேக்கரின் ஆற்றலை முதல் முறையாக உலகம் வியந்து பார்த்தது. பெல்ஜியத்தில் நடந்த இந்த ரேஸில் ஒரு கட்டத்தில் பதினாறாவது இடத்தில் இருந்த ஷுமேக்கர், சரசரவென்று முன்னேறி முதல் இடத்தைப் பிடித்தார். இந்த ரேஸில் வேகத்துடன் தன் முதல் எதிரியான டேமோன் ஹில்லை முன்னேற விடாமல் அவரது வழியைத் தந்திரமாக மறித்ததும் ஷுமேக்கரின் வெற்றிக்கு உதவியது. அதன்மூலம் ஃபார்முலா ஒன் ரேஸில் வென்ற இளம்வீரர் என்ற சாதனையைப் படைத்தார். ஆனால், எதிராளியின் வழியை மறித்ததற்காக சஸ்பெண்டும் செய்யப்பட்டார்.

இந்த வெற்றியுடன் ஷுமேக்கரின் கனவு முடியவில்லை. ஒன்றன்பின் ஒன்றாக 247 போட்டிகளில் வெற்றிக்கொடியை நாட்டிக்கொண்டே இருந்தார். ஏழு முறை உலக சாம்பியன் ஆனார். நம்ம ஊர் நரேன் கார்த்திகேயன், அஜித் முதல் பல ரேஸ் வீரர்களுக்கு ஹீரோவாக மாறினார்.

எல்லோரும் ஷுமேக்கரை கனவு ஹீரோ என்று சொல்ல, அவர் மட்டும், 'ஐம்பதுகளில் ரேஸ் உலகின் சக்கரவர்த்தியாக இருந்த ஃபாங்கியோ தான் என் ஹீரோ. எத்தனை ஷுமேக்கர்கள் வந்தாலும் அவரை வீழ்த்த முடியாது' என்று அடக்கமாகச் சொல்வார். ரேஸைத் தவிர, கால்பந்து, டென்னிஸ் ஆகியவற்றிலும் இவருக்கு விருப்பங்கள் அதிகம். தொடர்ந்து ஜெயித்துக் கொண்டே வந்த இவரை, ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ அலோன்சோ, கடந்த வருடம் வீழ்த்த, ஷுமேக்கரின் கதை இத்தோடு முடிந்தது என்று எல்லோரும் சொல்லத் தொடங்கினார்கள். ஷுமேக்கர் எதற்கும் பதில் சொல்லாமல் இருந்தார். இந்த ஆண்டு நடந்த ரேஸ்களில் அவரது வேகம் அதற்குப் பதில் சொன்னது. இப்போது இத்தாலியில் உள்ள மோன்சா நகரில் நடந்த ரேஸில் தனது ஃபெராரி அணியை நம்பர்ஒன் ஆக்கியதுடன், தானும் நம்பர்ஒன் என்பதை நிரூபித்த ஷுமேக்கர், இந்த சந்தோஷத்துடன் ஃபார்முலா ஒன்னில் இருந்து விடைபெறுவதாக அறிவித்தார்.

ஃபெராரி அணியில் தனது அடுத்த வாரிசாக கிமி ரெய்கனனை அறிவித்த ஷுமேக்கர், 'நாம் வெற்றி வீரனாக சாதித்துக்கொண்டு இருக்கும்போதே ஓய்வு பெற்றுவிட வேண்டும். அதுதான் நல்ல வீரனுக்கு அழகு.' என்று விடை பெறுவதற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

# சைமன் பொலீவார் (- 1783 - 1830 )

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

இதற்குப் பிந்திய ஆண்டுகளில் பொலீவாரின் முயற்சிகள் அத்துணை வெற்றிகரமாக அமையவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாதிரியைப் பின்பற்றிப் புதிய தென் அமெரிக்க நாடுகளின் கூட்டாட்சியொன்றை அமைக்க அவர் விரும்பினார். உண்மையில் வெனிசூலா, கொலம்பியா, ஈக்குவடோர், ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்து 'அகன்ற கொலம்பியா குடியரசு'


என்ற பெயரில் பொலீவாரைக் குடியரசுத் தலைவராகக் கொண்ட ஒரு கூட்டாட்சியை ஏற்கனவே அமைத்திருந்தன. ஆனால், பிரிவினை உணர்வு, வட அமெரிக்கக் குடியேற்றங்களை விடத் தென் அமெரிக்க நாடுகளில் மாநாடு ஒன்றை 1826ஆம் ஆண்டில் பொலீவியா கூட்டியபோது, அதில் நான்கு நாடுகள் மட்டுமே பங்குகொண்டன. அகன்ற கொலம்பியாக் குடியரசில் மேலும் கூடுதலான நாடுகள் இணைவதற்குப் பதிலாக அந்தக் குடியரசே விரைவில் உடையலாயிற்று. உள்நாட்டுப் போரும் மூண்டது. பொலீவாரைக் கொன்றுவிடுவதற்கு 1828ஆம் ஆண்டில் ஒரு முயற்சி கூட நடந்தது. 1830ஆம் ஆண்டில் வெனிசூலாவும், ஈக்குவடோரும் இந்தக் குடியரசிலிருந்து பிரிந்து சென்றன. அமைதி ஏற்படுவதற்குத் தாமே முட்டுக்கட்டையாக இருப்பதை உணர்ந்த பொலீவார் 1830ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தம் பதவியிலிருந்து விலகினார். தமது சொந்த நாடாகிய வெனிசூலாவிலிருந்தும் வெளியேறினார். மனச் சோர்வடைந்து வறுமையில் உழன்று அயல் நாட்டிலேயே 1830ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பொலீவார் காலமானார்.

பொலீவார் அதிகார ஆசை கொண்டவராக இருந்தார் என்பது தெளிவு. அவர் காலத்துச் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது, அவர் சில சமயம் சர்வாதிகாரிக்குரிய அதிகாரங்களைப் பெற்றிருந்தார். எனினும், பொது நலனையும், மக்களாட்சி நெறியையும் போற்றித் தமது சொந்த நலனை ஒதுக்கிவிடுவதற்குத் தயாராக இருந்தார். அவர் பல சமயங்களில் தமது சர்வாதிகார அதிகாரங்களைத் துறக்கவும் செய்தார். ஒரு சமயம் அவருக்கு அரச பதவி வழங்கவும் முன்வந்தனர். ஆனால் அரச பதவியை அவர் மறுத்துவிட்டார். அவருக்கு ஏற்கனவே 'விடுதலை வீரர்' (The Liberator ) என்ற பட்டம் அளிக்கப்பட்டிருந்தது. அரச விருது எதனையும் விட, இந்த விருதினையே அவர் பெருமதிப்புடையதாகக் கருதினார்.

ஸ்பானிய அமெரிக்காவைக் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுவித்த தலையாய தலைவர் பொலீவார் என்பதில் ஐயம் ஏதுமில்லை. விடுதலை இயக்கத்திற்கு அவர் கோட்பாட்டுத் தலைமையை வழங்கினார். கட்டுரை எழுதுதல், செய்தியிதழ்களை வெளியிடுதல், சொற்பொழிவாற்றுதல், கடிதங்கள் எழுதுதல் ஆகியவற்றின் மூலம் அவர் விடுதலை இயக்கத்திற்கு வழிகாட்டினார். விடுதலைப் போராட்டத்திற்கான நிதியைத் திரட்டுவதற்கு அவர் அயராமல் பாடுபட்டார். அனைத்திற்கும் மேலாகப் புரட்சிப் படைகளின் முதன்மையான இராணுவத் தலைவராக அவர் விளங்கினார்.

ஆயினும், பொலீவாரை ஒரு தலைசிறந்த தளபதியாகக் கருதுவது தவறாகும். அவர் தோற்கடித்த படைகள் பெரியவையோ, சிறந்த தலைமையைக் கொண்டவையோ அல்ல. இராணுவத் தந்திரங்களிலோ, போர் முறைகளிலோ பொலீவார் குறிப்பாகத் திறமை வாய்ந்தவர் அன்று. (அவர் இராணுவப் பயிற்சி எதுவும் பெற்றதில்லை) ஆனால், அவர்களிடமிருந்த குறைபாடுகள் அனைத்தையும் ஈடுசெய்யும் வகையில் இன்னல்களை எதிர்த்துத் தீவிரமாகப் போராடும் தளர்வுறாத மன உரத்தை அவர் பெற்றிருந்தார். ஸ்பானியப் படைகளிடம் அவர் கண்ட ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும், மற்றவர்கள் போராட்டத்தை நிறுத்திவிடலாம் எனக் கூறியபோது, பொலீவார் சிறிதும் துவண்டுவிடாமல் மன உறுதியுடன் இராணுவத்தை மீண்டும் ஒன்று திரட்டிப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

தமக்குச் சொந்தமாக இருந்த அடிமைகள் அனைவரையும் விடுதலை செய்து விட்டார். அது மட்டுமன்றி, பிரகடனம் வாயிலாகவும், அரசமைப்பு வகைமுறை மூலமாகவும் தாம் விடுவித்த நாடுகளில் அடிமை முறையை



## உலகை வியக்க வைத்தவர்கள்

ஜூலியஸ் சீசர், சார்லிமான் போன்ற புகழ்பெற்ற தலைவர்களைவிடவும் கணிசமான அளவுக்கு அதிகமான செல்வாக்கினைப் பெற்றவர் பொலீவார் என நான் கருதுகிறேன். காரணம், பொலீவாரின் போராட்டத்தினால் ஏற்பட்ட மாறுதல்கள் அதிக நிலைபேறுடையவை, அத்துடன், பொலீவாரின் நடவடிக்கைகளால் நிலைமாற்றம் பெற்ற மண்டலங்களின் பரப்பளவு மிகப் பெரிது. ஆயினும், மகா அலெக்சாந்தர், அடால்ஃப் இட்லர், நெப்போலியன் ஆகியோரைவிட மிகத் தாழ்ந்த நிலையில் பொலீவாருக்கு இடமளிக்கப் பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம், அந்த மூவரும் இல்லாது போயிருப்பின் அவர்கள் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்காது. ஆனால், பொலீவார் இல்லாது போயிருப்பின் தென் அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்க முடியாது எனக் கூறுவதற்கில்லை.

பொலீவாரை ஜார்ஜ் வாஷிங்டனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். வாஷிங்டனைப் போலவே பொலீவாரும் ஒரு சிறிய நன்கு பயிற்சி பெற்றிருந்த படைக்கு தலைமையேற்றார். இருவருக்கும் பணம் பற்றாக்குறையாக இருந்தது. இருவரும் தங்களுடைய உணர்ச்சியூட்டும் தலைமையினால் இராணுவத்தை ஒருங்கிணைத்துப் போராடி வெற்றி கண்டார்கள்.

ஆனால், வாஷிங்டனைப் போலன்றி, பொலீவார் தமது ஆயுட்காலத்தின் போதே ஒழிக்கப் பொலீவார் தீவிரமாக முயன்றார். அவருடைய அந்த முயற்சி முழுமையாக வெற்றியபெறவில்லை. அவர் இறந்த போது அந்த மண்டலத்தில் அடிமை முறை நீடித்து நிலவியது.

பொலீவார் கலப்புப் பண்புகள் கொண்டவராக, அதே சமயம் கவனத்தை கவரும் ஆளுமை கொண்டவராக விளங்கினார். அவர் துடிப்புமிக்கவராகவும், அஞ்சா நெஞ்சம் கொண்டவராகவும், வீரதீரச் செயல்களால் எழுச்சியூட்டுபவராகவும் திகழ்ந்தார். அவர் அழகிய தோற்றமுடையவராக இருந்தார். பல காதல் விவகாரங்களில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு தொலை நோக்கக் குறிக்கோள் வாதியாக விளங்கினார். ஆனால், வாஷிங்டனை விடக் குறைந்தளவு நிருவாகத் திறமையைக் கொண்டிருந்தார். முகப் புகழ்ச்சியைப் பொலீவார் பெரிதும் விரும்பினார். அவர் வாஷிங்டனை விட அதிகப் புகழார்வம் கொண்டவராக இருந்தார். இது அவர் விடுத்த மண்டலங்களுக்குப் பாதகமாக முடிந்தது. அதேசமயம், நிதி ஆதாயத்தில் பொலீவார் சிறிதும் அக்கறை காட்டவில்லை.அவர் அரசியலில் பணக்காரராக நுழைந்தார். அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற போது ஏழ்மையில் உழன்றார்.

**அடுத்த வாரம்**
**மகா கான்ஸ்டறன்டைன்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய்.**
**பொய்யைத் தவிர**
**வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

**வணக்கமுங்கோ!**

இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் முடிந்த பிறகு ஊடகவியலாளர்களைச் சந்திச்சு கருத்துச் சொன்ன எரிக், இரு தரப்பும் நிபந்தனை யற்ற பேச்சுக்குத் தயார் எண்டு சொல்லயிருக் கினம் எண்டார். அப்புடி அவர் வச்ச பொறி நாட்டில பற்றிக் கொண்டு எரியுதுங்கோ. அப்புடி ஒரு நியூஸ் உண்மையோ எண்டு அமைச்சர் கெஹலியவையும் தமிழ்ச் செல்வனையும் மாறி மாறிக் கேட்டனுங்கோ. எப்புடித் தெரியுமோ? உப்பிடித்தான்!

அமைச்சரய்யா அரசு நிபந்தனையற்ற பேச் சுக்குத் தயாராக இருக்குதாமே உண்மையா?

எரிக் சொல்கேய்ம் அப்புடிச் சொன்னதாக அறிகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும் அது புது நியூஸ். அந்த முடிவை எடுக்க இலங்கை அரசு எரிக்குக்கு அதிகாரம் கொடுக்க வில்லையே!

அப்புடியெண்டால் அடுத்த மாதம் முற்பகுதி யில பேச்சு நடக்க வாய்ப்பு இல்லை அப்படித் தானே?

இல்லையென்று சொல்லவில்லை. வாய்ப்பு இருக்கிறது. ஆனால் புலிகள் இனி ஆயுதங் களைத் தூக்கக் கூடாது. சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுமானால் அந்தக் கால கட்டத்தில் ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கூடக் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டால் இறைமை யுள்ள அரசு என்ற வகையில் நாமும் தாக்குதல் நடத்துவோம்.

இது சரிதான். இப்புடி அண்டைக்கு ரணில் அரசு தீர்மானமாக ஒரு முடிவெடுத்து நடந்திருந் தால் எப்புடி இருந்திருக்கும்?

அந்த விஷயம் முடிந்த விஷயம். இப்போது அவர்கள் அரசாங்கத்தோடு இணக்கப்பாட்டுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் பற்றிக் கருத்துக் கூற முடியாது.

எங்களைப் பொறுத்தவரை புலிகளுக்கு சமா தானம் வேணுமெண்டால் மேற்சொன்ன ஒழுங் குக்கு உட்பட்ட வகையில் புலிகள் நடந்து கொள்ள வேண்டும்.

இப்படிச் சொன்னால் எப்புடி. உடனடியாகப் புலிகள் இதை ஏற்றுக் கொள்வார்களா? அதென்ன, சமாதானம் வேணுமெண்டால்... என்று சொல்கிறீர்கள்? அது எங்கேயோ இடிக்குதே.

இதில் இடிக்க ஒண்டுமில்லை. நாங்கள் சமாதானம் வேணும் எண்டு மிகவும் பொறுமை யோடும், விட்டுக் கொடுப்போடும் நடந்து கொண்ட போது அதைப் புலிகள் உதாசீனம் செய்தார்கள். கப்பலைத் தாக்க முற்பட்டார்கள், தண்ணீரைத் தடுத்தார்கள். சம்பூரிலிருந்து ஆர்ட்டிலெறி தாக்குதல் நடத்தினார்கள். இராணுவத் தளபதியைக் கொல்ல தற்கொலைக் குண்டு வெடித்தார்கள். பராமி குலதுங்க என்ற உயர் இராணுவ அதிகாரியைக் கொலை செய்தார்கள். பெரும் புத்திஜீவிகளான லக்ஷ்மன் கதிர்காமர், கேதீஸ் லோகநாதன் ஆகியோரைக் கொலை செய்தனர். இத்தனையையும் பொறுத்துக் கொண்டு நாங்கள் சமாதானம் பேசினோம். இறுதி யாக என்ன நடந்தது? தமிழ் மக்களைச் சாட்டி எம்மீது கிளைமோர் தாக்குதல்களை அதிகளவில் நடத்தினர். பத்திரிகையைப் பார்த்தால் கொலை கள், தாக்குதல் தொடர்பான செய்திகள் தான் அதிகமாக வருகிறது. நான் கேட்கிறேன், இது யுத்த காலமா? சமாதான காலமா? அப்படியென் றால் சமாதானம் என்பது அரசுக்கு மட்டுமா? புலிகளுக்கும் அந்த விருப்பம் இல்லையா? அப்புடி இல்லையென்றால், ஒருபக்கமாக நாங்கள் மட்டும் எப்புடி சகிப்புத்தன்மையை அளவுக்கு மிஞ்சிக் காட்டிக் கொண்டு ஒரு பயங்கரவாதத்து டன் பேச்சு நடத்தமுடியும். இந்தக் கேள்விகளின் அழுத்தம் காரணமாகத்தான் நாமும், பதில் நடவடிக்கையில் இறங்கினோம். எமது நடவடிக் கைகள் குறிப்பிட்ட வெற்றியைத் தந்துள்ளது என்பேன்.

அமைச்சர் அப்புடிச் சொல்லுறாரே, இதுக்கு சு.ப. என்ன சொல்றீங்கள்?

அமைச்சர் எப்புடியும் சொல்லட்டும். நாங்கள் நிபந்தனையில்லாமல் பேச்சுக்குத் தயார் என்று சர்வதேச சமூகத்துக்கு அறிவிச்சிருக்கிறம்.

சரி...கொஞ்ச நாளைக்கு முன்பு சம்பூரை விட்டுப் படையினர் வெளியேற வேணும்; இல்லாட்டில் சமரச முயற்சிகளுக்கு வாய்ப்பே இல்லை என்று சொன்னீர்களே?

அது அப்போது. இது இப்போது. அப்போது தமிழ் மக்கள் அப்படி நினைத்தார்கள்; இப்போது இப்படி நினைக்கிறார்கள்.

அதுதான் அப்படியென்றால், பிறகு யாழ்ப் பாணத்திலும் வன்னிக்குள்ளும் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப் படாமல் சமாதானம் பேச முடியாது என்றீர்களே...

அப்படியா சொன்னேன். அப்படிச் சொல் லியிருந்தால் நான் நினைக்கிறேன் அப்போது மக்களின் பிரச்சினை பிரதானமானதாக இருந் திருக்கும்.

இப்போதைக்கு எங்களது பிரச்சினைதான் பிரதானமாக இருக்கிறது. ஆகையால் இந்த நேரத்தில் பழசையெல்லாம் யோசிக்க முடியாது.

அப்புடியென்றால் மக்களின் பிரச்சினை எல் லாம் தீராட்டியும் உங்கட பிரச்சினை தீரவேண்டும் என்றால், எதையும் விட்டுக் குடுத்துப் பேச்சுக்குப் போகத் தயாராக இருக்கிறீர்களா...?!

யோவ்! யாரைய்யா நீர்? அவசரம் தெரியாம கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர். இது கேள்வி கேக்கிற நேரமா...தாமதிக்கிற ஒவ்வொரு நிமிச மும் ஆமிக்காரன் ஆனையிறவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பான். உதை உப்பிடியே விட்டால் நிலைமை ரொம்பவும் மோசமாயிடும். ஆகையாலதான் உடனடியாக ஒரு சடன் பிரேக் போடவேணும். அந்த பிரேக்தான் உந்த நிபந் தனையற்ற பேச்சுவார்த்தை. புரியுதோ...

புரியுது புரியுது. அடி விழேக்க குய்யோ முறையோ எண்டு கத்திறது. உடனடியா ஒரு சமரச முயற்சி, இல்லாட்டில் போர் நிறுத்தம் தேவை எண்டுவியள் பிறகு எல்லாம் தயார் பண் ணிக் கொண்டு மெதுமெதுவாச் கொட்டுவியள். உதுதானே காலம் காலமா நடக்குது.

இங்கே கா.பூ...தேவையில்லாமக் கதைக் கிறியள்.

சரி, கதைக்கயில்லை; நிப்பாட்டிக் கொள்ளு றன்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(21.09.2006 தொடங்கி 27.09.2006 வரை)**

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், கேது, செவ்வாய், புதன். துலாம் - வியாழன். மீனம் - இராகு. கர்க்கடகம் - சனி. சிங்கம் - வியாழன். சந்திரன் சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்தோர் நட்பு, புதிய முயற்சி, வெளியார் சகவாசம், மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகள் உதவி, உறவினர் பகை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, பாரிய செலவு, வெளியார் நட்பு, இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மிதுனம்** : (மிருகசீரிடத் துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், செலவு மிகுதி, கடன் படல், அந்நியர் உதவி, தூர இடப்பயணம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் பகை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கலக்கம், பணியாளர் பகை, செலவு மிகுதி, மனக் கலக்கம், இனசன நன்மை, உறவினர் உதவி, குடும்ப மேன்மை, உத்தியோகப் பயம், வீண்குறை கேட்டல், மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் நன்மை, பணவரவு, மனமகிழ்ச்சி, செலவதிகம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை, பலவித பேறு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மாற்றம், புதிய முயற்சி, மன மகிழ்ச்சி, கடன்படல், தூர இடப்பயணம், குடும்பப் பிரிவு, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் பகை, மனக்கலக்கம், பணியாளர் தொல்லை, வீண் மனஸ்தாபம், பொருள் இழப்பு, குடும்பத் தொல்லை, உறவினர் உபத்திரம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி கஷ்டம், புதிய முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பொருள் பேறு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், குடும்பக் கலக்கம், புதிய செலவு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி மந்தம், சோம்பல் தன்மை, விவசாயிகள், வியரபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, வெளியார் நட்பு, கௌரவம், மனக்குறை நீங்கும், குடும்பச் சகாயம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**


**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும்; குடும்ப சகாயம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் அச்சம், வீண் செலவு, பெரியோர் உதவி, பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, குடும்பப் பகை, உறவினர் உபத்திரம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


1961-2006
45


# «உறுதியான அவா











கடந்த 45 ஆண்டுகளாக நாம் எமது தேசமக்களின் அவாவினை பூர்த்திசெய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். நாடு முழுவதும் பரவியுள்ள எமது 625 கிளைகள் மற்றும், 9.3 மில்லியன்களுக்கும் அதிகமான கணக்கு வைப்புகள் மூலம் நாட்டின் மிகப் பெரிய வங்கி வலைப்பின்னலைக் கொண்டுள்ளதுடன், சர்வதேச வங்கிச் சேவையினை நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டு சென்ற முன்னோடிகள் நாமே. **உண்மையான மக்களின் வங்கியாக இருக்கும்** பெருமையுடன் அன்று போல் இன்றும், என்றும் உங்கள் அனைவரினதும் கண்களினால் ஒளிரும் அவாக்களை நிறைவு செய்வதே எமது குறிக்கோளாகும்.

SLIM - AC Nielsen
Power of the People
Banking & Financial Service Brand of the Year 2006

TRIAD 17261

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

www.peoplesbank.lk